





JL
N47.1.29-30.
218906.

# வெள்ளிமணி




272
1201
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 JAN 1948
MADRAS
சென்னை-600 008

19.12.47 VELLI MANI ~ விலை 4 அணா




சுகமான வாழ்விற்கு இன்றியமையாதது

ஆகாரம் மனதிற்கும், நாவிற்கும் இனிமை பளிக்கும் உணவு தயாரிக்க இன்றியமையாதது பெருங்காயம். ருசியும், மணமும் பெறச் செய்வது பெருங்காயத்தின் சிறந்த குணம்.

விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்ட மணமுள்ள எங்கள் T. T. பெருங்காயத்தையே உபயோகியுங்கள்.

ரஷீட் ஜம்ஷெட் சன்ஸ் & கோ.,
கும்பகோணம்

H. O. பம்பாய். பிராஞ்சுகள்: சென்னை, மதுரை.

சுதந்திர இந்தியாவில் இனி பொதுஜனத்தை ஏமாற்றி பெருள் பரிக்கும் அசடர்களுக்கு இடமில்லை




எல்லோருக்கும் லாபம் கிடைக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறது

தனி ஏஜண்டாக யாருக்கும் கொடுக்க முடியாது

| | |
|---|---|
| 50 காலணா பொட்டலம் | 0-9-0 |
| ஷ பொட்டலம் ஒரு குரோஸ் (144) | 72-0-0 |

இரண்டு கேஸ் ஆர்டர் செய்பவர்களுக்கு ரயில் சார்ஜ் கிடையாது. 25% அட்வான்ஸுடன் ஆர்டர் செய்ய வேண்டும்.

மாணிக்க விலாஸ்
11, பீட் :: மதராஸ் 1

## டி. கே. எஸ். சகோதரர்களின் நாடகம்

கோவை ஷண்முகா தியேட்டரில்

9-12-47 முதல் தினசரி

# மூன்னில் ரோஜா

(ப. நீலகண்டன்)

அவள் ஒரு தாசி! கற்பின் உருவாய் வந்த கணிகை!! ஒழுக்கத்தோடு வாழ விரும்பினள்; உலகம் சிரித்தது; முடிவு என்ன?......

புதன், ஞாயிறு மாலை 6-30 — மற்ற நாட்கள் இரவு 9-30
திங்கள் விடுமுறை நாள்

வரியுட்பட கட்டணம்: 4-0-0, 2-12-0, 1-10-0, 0-13-0, 0-6-6

வெளியூர் வாசிகள் முன் பணம் அனுப்பி 1, 2, 3-வது வகுப்புகள் ரிசர்வ் செய்து கொள்ளலாம்.

பலராலும் புகழப்பட்டு வரும்

குண்டூசி யைப்

படித்தீர்களா? இல்லையேல்
இன்றே படியுங்கள்

★

தமிழ் நாட்டின் தலை சிறந்த
சினிமாப் பத்திரிகை

டிஸம்பர் மாஸ ஊசியில்


பி. எஸ். ஸ்ரீனிவாசராவ் (வாழ்க்கை வர்ணனை), "கிச்சு பிச்சு" தமிழ் ஸினேரியோ, (தேர்தல் நாடகம்) நாகர்கோயில் மஹாதேவன் எழுதிய கதை, மூவர்ணப் படங்கள், ஹாஸ்யச் சித்திரங்கள், 'குண்டூசி'யின் பதில்கள் முதலிய முக்கிய அம்சங்கள் கொண்டது

★

விலை அணு 8 வருஷ சந்தா ரூ. 6

ஏஜண்டுகள் இல்லாத ஊர்களில்
ஏஜண்டுகள் தேவை


★



...டூசி" காரியாலயம்
...ம்புசெட்டித் தெரு,
...ன்னை 1.

## நிக்கோ காயில

நமது தேசியக் கொடியின் மூவர்ணங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.




நிக்கோ பிரத்தியேகமாகத் தயாரிக்கும் சாமான்களாவன: சாதாரண செப்புக் கம்பிகள், கெட்டி செப்புக் கம்பிகள், ஈயம் பூசிய செப்புக் கம்பிகள், பியூஸ் ஒயர்கள், பலவிதங்களிலும், அளவுகளிலும் வி.ஐ. ஆர். கேபிள்கள், மோட்டார் கேபிள்கள் கோலியரி கேபிள்கள், நூல் சுற்றப்பட்ட ஒயின்டிங் ஒயர்கள், எனமல் ஒயர்கள் முதலியன.

NICCO

எல்லா வி. ஐ. ஆர். கேபிள்களும் சர்க்கார் அதிகாரிகளால் பரிசோதிக்கப்பட்டு, அத்தாட்சியுடன் முத்திரை யிடப்படுகின்றன.

தி நேஷனல் இன்ஸுலேடட்
கேபிள் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்
"ஸ்டீபன் ஹவுஸ்"
கல்கத்தா




# வெள்ளி மணி

ஆசிரியர்: சாவி

வெள்ளி 1] 19—12—47 [மணி 29

இந்த வருஷம் ஆஸ்திரேலியாவுக்கு நமது கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் விஜயம் செய்திருக்கிறார்கள். கோஷ்டியை முதலில் தேர்ந்தெடுத்த போது அதற்குத் தலைவராக விஜய மர்ச்செண்டையே நியமித்தார்கள். பிறகு மோடி, முஷ்டக் அலி போன்ற பிரபல ஆட்டக்காரர்கள் கோஷ்டியில் சேர்க்கப் பட்டார்கள். "ஆணைப்பட்ட இங்கிலாந்து ஆட்டக்காரர்களையே படு தோல்வி அடையச் செய்து விட்டார்களே, இந்த ஆஸ்திரேலியர்கள்; அவர்களுக்கு இந்த இந்திய கோஷ்டிதானா ஒரு பிரமாதம்?" என்று சிலர் யோசனை செய்தார்கள்.

இந்திய கோஷ்டி ஆஸ்திரேலியாவுக்குப் புறப்படுமுன் இன்னும் சில மாற்றங்கள் செய்யப் பட்டன. 'மர்ச்செண்ட் உடல் நிலை சரியில்லை' என்று நின்று விட்டார். மோடி, முஷ்டக் அலி முதலியவர்களும் போவதற்குச் சௌகரியப் படவில்லை என்று சொல்லி விட்டார்கள். எனவே நம்மூர் கிரிக்கெட் உற்சாகிகள் "ரொம்ப அழகு தான்; அப்படியானால் நூறு ஓட்டங்கள் கூட எடுக்க முடியாது" என்று முன் கூட்டியே ஜோஸ்யம் கூறினார்கள்.


ஆனால், கடைசியாக விஜய மர்ச்செண்டுக்குப் பதிலாக அமர்நாத் என்ற பிரசித்த ஆட்டக்காரர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார் என்று தெரிந்ததும் உற்சாகிகளின் கவலை குறைந்தது.

"அமர் நாத்தா! பொல்லாத ஆட்டக்காரராயிற்றே! ஆட்டத்திலே சூரர்" என்று குதூகலப் பட்டார்கள்.


அத்தகைய பிரபல ஆட்டக்காரரான அமர்நாத் தலைமையின் கீழ் ஆஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ள இந்திய கிரிக்கெட் கோஷ்டி நல்ல பெயரும் வாங்கி வருகிறார்கள்.

"இந்திய கோஷ்டி தானே!" என்று அலட்சிய மனப்பான்மையுடனிருந்த ஆஸ்திரேலிய கோஷ்டியைத் தோற்கடிக்கவும் செய்தார்கள்.


இந்த இதழ் அட்டைப் படத்தை அலங்கரிக்கும் அமர்நாத் வெற்றி வீரராகத் திரும்புவார் என்று எதிர்பார்க்கிறோம். அமர்நாத் ஆஸ்திரேலிய ஆட்டக்காரர்களுக்குச் சற்றும் சளைக்காமல் ஆடி, நூற்றுக் கணக்கில் ஓட்டங்கள் எடுத்திருக்கிறார். ஏற்கெனவே பிரசித்த ஆட்டக்காரரான அமர்நாத் பம்பாயில் நடந்த இங்கிலாந்து—இந்தியா டெஸ்டுப் போட்டியில், முதன் முதலாக ஆடி நூறு 'ரன்'கள் எடுத்துப் பிரக்யாதி அடைந்திருக்கிறார். பிறகு இங்கிலாந்துக்குச் சென்றிருந்த போதும் பல நூறு 'ரன்கள்' எடுத்துப் பெரும் புகழ் பெற்றிருக்கிறார். அத்தகைய சிறந்த கிரிக்கெட் வீரரின் தலைமையின் கீழ் ஆஸ்திரேலியா சென்றுள்ள இந்திய கோஷ்டி, வெற்றி வாகை சூடி தாய்நாடு திரும்பும் என்பதில் சந்தேகம் என்ன இருக்கப் போகிறது?



சென்ற 10—12—47 புதன் கிழமை மாலை சென்னை சர்க்கார் மாளிகை கோலாகலமாய் விளங்கியது. அன்றைய தினம் வங்காள கவர்னர் ராஜாஜியின் எழுபதாவது ஜயந்தி விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. சபாநாயகர் சிவஷண்முகம் பிள்ளை விழாவை ஆரம்பித்து வைத்தார்.



இங்கிலாந்தில் நடைபெற்ற எலிஸபெத் இளவரசியின் திருமணத்தைமுன்னிட்டு புது டில்லி சர்க்கார் மாளிகையில், கவர்னர் ஜெனரல் ராஜாஜி ஒரு விருந்து நடத்தினார். மேற்படி விருந்தில் கலந்து கொண்ட பண்டித நேருவும், இந்திரா காந்தியும் ராஜாஜியின் ஹாஸ்யத்தை அனுபவிக்கிறார்கள்.



இதற்கு முன் என்றுமே கண்டிராதபடி, பிரகாசமான நட்சத்திர [illegible] அமெரிக்க மக்கள் கண்டு ஆச்சரிய மடைந்த
தாகப் பத்திரிகைச் செய்தி.

# லஞ்சப் பேய்களுக்குப் பஞ்சப் படியாம்!

அட்வைஸரி சர்க்கார் ஆட்சியின் கீழ் அடங்கிக் கிடந்த பழைய பெருச்சாளிகளெல்லாம் அம்பலத்துக்கு வந்திருக்கின்றன!

சர்க்கார் 'பைல்'களுக்குள் பதுங்கிக் கிடந்த லஞ்சப் பேய்களெல்லாம் பஞ்சப்படி கேட்கின்றன!

கள்ள மார்க்கெட்காரர்களுக்கு உதவி புரிந்து ரகசியமாகக் 'கிம்பளம்' பெற்ற சர்க்கார் சிப்பந்திகளுக்குச் சம்பளம் போதாதாம்! அதிகப்படி அலவன்ஸ் வேண்டுமாம்!

எழுபதாயிரம் அங்கத்தினர்களைக் கொண்ட 'என். ஜி. ஓ' சங்கத்தார் மேற்கண்ட தங்களுடைய கோரிக்கையை வற்புறுத்தும் பொருட்டு சென்ற 15-12-47 திங்கட்கிழமை காலையிலிருந்து வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள்.

* * *

சென்ற ஆகஸ்டு மாதம் 15உ இந்தியா தேசத்தைப் பிடித்திருந்த அடிமைப் பேய் தொலைந்தது. நாளது 1947-ம் வருஷம் சரித்திரப் பிரசித்தியான வருஷமாகும். நாட்டுக்கு விமோசனம் தேடித் தந்த சிறப்பான வருஷமாகும். அடிமைப் பேயும், மதுஅரக்கனும், தீண்டாமைச் சனியனும் நமது மாகாணத்தில் இந்தப் புனிதமான வருஷத்திலே தான் விடை பெற்றுக் கொண்டன. ஆனால், சாபக்கேடாக ஒரே ஒரு பேய் மட்டும் எங்கேயோ இது வரை ஒளிந்து கொண்டிருந்தது. அது தான் லஞ்சப் பேய்!

தன் சகோதரர்கள் போன போக்கைப் பார்த்து விட்டு மேற்படி சனியனும் இப்போது தானாகவே சர்க்கார் 'பைல்'களுக்கடியிலிருந்து பீறிட்டுக் கொண்டு கிளம்பி யிருக்கிறது. இதோ இந்த வருஷம் முடிவதற்கு இன்னும் பதினைந்து தினங்கள் பாக்கியிருக்கும் போதே அதுவும் தொலையப் போகிறது. ஏ, 1947-ம் ஆண்டே! நீ ரொம்ப ரொம்ப அதிர்ஷ்டமான ஆண்டு தான். உன்னுடைய ஆட்சியிலே இதோ லஞ்சப் பேயும் மாண்டு மடியப் போகிறது. லஞ்சப் பேய்க்கு முதலில் விடை கொடுத்தனுப்பி விட்டு அப்புறம் நீயும் மங்காத் கீர்த்தியுடன் மறையப் போகிறாய்! போகட்டும்.

சர்க்கார் சிப்பந்திகளின் கோரிக்கை என்ன? எதற்காக அடா பிடியாய் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள்? இரண்டாம் மகா யுத்தம் காரணமாக, நாட்டில் அகவிலை ஒன்றுக்கு நாலு மடங்காக உயர்ந்திருக்கிறது. எனவே, எல்லோரையும் போல் சர்க்கார் சிப்பந்திகளும் விலைக்குத் தக்க வருவாயின்றி சம்பளத்தை உயர்த்தும்படியும், விலைவாசி அலவன்ஸும், வீட்டு வாடகை அலவன்ஸும் கேட்கிறார்கள். இது ரொம்பவும் நியாயமான கோரிக்கை என்பதை யாரும் மறுக்கவில்லை. சர்க்காரும் மறுக்க வில்லை.

ஆனால், இவர்களுடைய கோரிக்கைக்குச் சர்க்கார் இணங்கவே இல்லையா? இது வரை பஞ்சப் படியோ, சம்பள உயர்வோ ஒன்றுமே கொடுக்க வில்லையா என்றால் பேஷாகக் கொடுத்திருக்கிறார்கள், ஒன்றுக்கு மூன்று மடங்காகக் கொடுத்திருக்கிறார்கள்.

சர்க்கார் கொடுக்கும் கணக்கைப் பார்த்தால் இந்த மாகாண வருமானத்தின் பெரும் பகுதியைச் சர்க்கார் சிப்பந்திப் பெருச்சாளிகள் தான் சாப்பிட்டு வருகின்றன என்பது ஸ்பஷ்டமாக விளங்கும்.

இந்த மாகாணத்தின் மொத்த சராசரி வருமானம் 48 கோடி ரூபாய். இந்தத் தொகையும் அடுத்த வருஷத்தில் 17 கோடிக்கு மேல் குறைந்து போகும். காரணம், மேலும் பல ஜில்லாக்களில் மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டு வரப்போகிறார்கள். இன்னும், மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டு வரும் காரியத்துக்காக மூன்று கோடி ரூபாய் செலவழிந்து போகும். ஆகக் கூடி வரும் வருஷத்திலிருந்து சர்க்காரின் சராசரி வருமானம் 30 கோடிக்கு மேல் போகாது.

யுத்தம் ஆரம்பித்த புதிதில், அதாவது 1939-40-ல் சர்க்கார் சிப்பந்திகளின் சம்பளச் செலவு எட்டு கோடி பதினாறு லட்சம் ரூபாய் தான். இப்போது கொடுக்கப்படும் சம்பளத் தொகை இருபத்து நாலு கோடி ரூபாய். அதாவது ஒன்றுக்கு மூன்று மடங்கு உயர்ந்திருக்கிறது.

மாகாணத்தின் பெரும் தொகையைப் பெற்றுக் கொண்டு மாகாண மெங்குமுள்ள சர்க்கார் காரியாலயங்களில் இவர்கள் செய்யும் காரியம் என்ன?

பைல்களுக்குக் கீழே உட்கார்ந்து பொழுதைக் கழிப்பார்கள். 'ரெட் டேபிஸம்' என்று கூறப்படும் 'சிகப்பு நாடா'க் கொள்கையை அனுசரிப்பார்கள். எந்தக் காரியத்தையும் சாவதானமாகத் தூங்கிக் கொண்டே ஆமை வேகத்தில் செய்வதைத்தான் ஆங்கிலத்தில் 'சிகப்பு நாடா' என்று கூறுவது வழக்கம். சிகப்பு நாடாக் கொள்கை என்பது சர்க்கார் காரியாலயங்களிலே பிறந்து அங்கேயே நீடூழி காலமாய் வாழ்ந்து வரும் அதிசயமாகும். இதற்குக் காரணஸ்தர்கள் யார் என்று சொல்ல வேண்டியதில்லை. சர்க்கார் காரியாலயங்களில் வேலை பார்க்கும் பெருச்சாளிகள்தான். இந்தப் பெருச்சாளிகள்தான் இப்போது பஞ்சப்படி கேட்கிறார்கள். நாங்கள் பெறும் சம்பளத்தைப்போல் மூன்று மடங்கு 'கிம்பளம்' பெறும் இவர்களுக்கு வருமானம் போதாதாம்! விலைவாசி அலவன்ஸ்! வேண்டுமாம். போதாக் குறைக்கு, வீட்டு வாடகை அலவன்ஸ் வேறு வேண்டுமாம்!

'கிம்பளம்' கொடுக்காமல் சர்க்கார் காரியாலயங்களில் சுலபமாக எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியாது என்பது சரித்திரப் பிரசித்தமான விஷயமாகும். மேலதிகாரிகளிலிருந்து கீழ்த்தர சிப்பந்தி வரையில் இதற்கு விதி விலக்கல்ல.

சர்க்கார் காரியாலயத்திற்குள் நுழையும்போதே முதலில் டவாலி பியூனுக்குக் கிம்பளம். அப்புறம் குமாஸ்தாவுக்கு 'ஸம் திங்'. பிறகு, ஹெட் கிளார்க்குக்குக் காணிக்கை. இப்படி வரிசையாகக் கொடுத்துக் கொண்டே போனால் தான் கீழே இருக்கும் பைல் மேலுக்கு வரும். சம்பந்தப்பட்ட அதிகாரியின் மேஜை

**வெள்ளிமணியில் வெளியாகும் அரசியல் விஷயங்களில் காணப்படும் பெயர்கள் யாவும் நிஜப்பெயர்களே**

க்குக் குறிப்பிட்ட காகிதம் போய்ச் சேருவதற்குள் ஸ்ரீமான். பொது ஜனத்தின் சட்டைப் பை நிச்சயமாகக் காலியாகிவிடும்.

இத்தகைய லஞ்சப் பேய்கள் கூடிக் கொண்டு தான் இப்போது பஞ்சப்படி கேட்கிருர்கள். வருமானம் போதவில்லை என்று வாதாடுகிருர்கள். மத்திய சர்க்கார் சிப்பந்திகளுக்கு அளிக்கப்படுவது போல் தங்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று பிடிவாதம் காட்டுகிருர்கள். இதற்காகத்தான் ஸ்டிரைக் செய்திருக்கிருர்கள். ஸ்டிரைக் செய்தால் தங்கள் குடும்பத்தின் கதி என்ன ஆகும் என்பதைப் பற்றி அவர்கள் யோசிக்காமலில்லை. ஒரு மாதம் இரண்டு மாதத்துக்குக் குடும்பத்தைக் காப்பதற்கு வேண்டிய பணத்தை அவர்கள் தங்களுடைய 'கிம்பள'த்தின் மூலம் சேர்த்து வைத்திருக்கிருர்கள். இரண்டு மாதம் போன பிறகுதான் யோசிக்க வேண்டியிருக்கும். இதற்குள் சர்க்காரே பணிந்து வரும் என்று அவர்கள் எதிர்பார்க்கிருர்கள்.

அட்வைஸரி சர்க்காருக்குத் தாஸாநு தாஸர்களாய்ப் பெட்டிப் பாம்பைப் போல் அடங்கிக் கிடந்த லஞ்சப் பேய்கள் இப்போது பொது ஜன சர்க்கார் ஆரம்பித்ததும் கிளர்ச்சி செய்யத் தொடங்கி யிருக்கிருர்கள்.

"இப்போதைய நிலையில் சர்க்கார் சிப்பந்திகளின் சம்பளத்தை உயர்த்துவதானுல் மேற்கொண்டு வரி விதித்தால் தான் முடியும். அப்படி வரி விதித்தால் அதைக் கிராம வாசிகள் தான் கொடுக்க வேண்டும். கிராமவாசிகளை விட சர்க்கார் சிப்பந்திகள் கஷ்ட தசையில் இல்லை. ஆகையால் சம்பள உயர்வு என்பது முடியாத காரியம். சர்க்காரின் நிதி அதற்கு இடமளிக்கும்போதே அதைப் பற்றி யோசிக்க முடியும்" என்று நமது மாகாணத்தின் பிரதமர் ஓமந்தூர் ராமஸ்வாமி ரெட்டியார் திட்டமாக அறிவித்து விட்டார். அத்துடன் பஞ்சப்படி விஷயத்தையும், வீட்டு வாடகை அலவன்ஸை உயர்த்துவதைப் பற்றியும் இப்போது சர்க்கார் பரிசீலனை செய்து வருகிறதென்றும் பிரதமருடைய அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

இவ்வளவு தூரம் விஷயத்தை விளக்கிக் கூறிய பிறகும் கூட சர்க்கார் சிப்பந்திகள் வேலை நிறுத்தம் செய்திருக்கிருர்கள். தானு பாவை காங்கிரஸ் கமிட்டித் தலைவர்களும் சேர்ந்து சமரச மனப்பான்மையுடன் கேட்டுக் கொண்டும் கூட என். ஜி. ஓ. சங்கத்தார் பிடிவாதமாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிருர்கள். ரொம்ப நல்லதாய்ப் போயிற்று. சென்னை சர்க்கார் இந்த அருமையான சந்தர்ப்பத்தைத் தகுந்த முறையில் பயன் படுத்திக் கொண்டு லஞ்சப் பேயை இனி சர்க்கார் கட்டிடங்களுக்குள் புக முடியாதபடி ஏற்பாடு செய்வார்கள் என்று எதிர்பார்க்கிருேம். நாமாகச் செய்ய வேண்டிய ஒரு காரியம் இப்போது தாளுகவே செய்து கொள்ள முன் வந்திருக்கிறது.

தங்கள் சுய லாபத்தைக் கருதி சுதந்திர சர்க்காருடன் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டிருக்கும் சிப்பந்திகளுக்குச் சரியான முறையில் பாடம் கற்பிக்க வேண்டும். அவர்கள் இத்தனை வருஷ காலமாக சர்க்கார் கட்டிடங்களில் இருந்து கொண்டு புரிந்து வந்த பாபச் செயல்களுக்கெல்லாம் பிராயச்சித்தம் தேட வேண்டும். உடனே காலியான சர்க்கார் காரியாலயக் கட்டிடங்களைப் புண்ணிய தீர்த்தம் கொண்டு புனிதப் படுத்த வேண்டும். லஞ்சப் பேய் ஒழிந்ததென்று தலை முழுக வேண்டும்.


# பார்த்திபன் கனவு

**கல்கி**

எழுதிய அற்புத சரித்திரக் கதை

★

நாலாம் பதிப்பு

விலை ரூ. 6-8-0

**தமிழ்ப் பண்ணை**

தியாகராய நகர் — சென்னை





## மாதர் மகாநாடு

"ஆணோடு பெண் சரி சமம் இந்த நாட்டிலே" என்று அமர கவி ஸ்ரீ சுப்ரமணிய பாரதியார் பாடிவிட்டுப்போனுர். அந்த அற்புதக் கனவு சென்னையைப் பொறுத்த வரையில் பலித்துக்கொண்டு வருவதைப் பார்க்கிருேம். சென்னை மாகாணத்தில் பெண் குல திலகங்கள் தேச விடுதலைப் போராட்டத்திலும், இலக்கிய, சங்கீதத் துறையிலும் முன்னணியில் நின்று ஆண்களுக்குச் சரி நிகர் சமானமாகி வருகிருர்கள்.

இம்மாதம் இருபத்தொன்பதாம் தேதி இருபதாவது அகில இந்திய மாதர் மகாநாடு சென்னை தேனும்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் நடை பெறப் போகிறது என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிருேம். ஸ்ரீமதி அநசூயா பாய் காளே மகா நாட்டுக்குத் தலைமை வகிக்கிருர். மகாநாட்டின் போது கண் காட்சி ஒன்றும் நடை பெறப் போவதாக அறிகிருேம். மகா நாட்டில் நாட்டு நலனுக்குப் பயன்தரக் கூடிய பேச்சுக்களும், சுதந்திர இந்தியாவில் பெண்களின்



ஸ்ரீமதி அம்புஜம்மாள்

பங்கு எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றியும் தீர்மானம் நிறைவேற்றுவார்கள் என்றும் தெரிகிறது.

இந்த மாபெரும் மாதர் மகாநாட்டுக்கு அகில இந்தியாவிலிருந்தும், வெளி தேசங்களிலிருந்தும் கூட பிரதிநிதிகளும் விசிடர்களும் விஜயம் செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விருந்தோம்பும் அருங்குணம் படைத்தத் தமிழ் நாட்டுப் பெண்மணிகள் மகாநாடு நடத்துவதால், வருகிறவர்களைத் தக்கபடி உபசரித்து அனுப்பும் மகத்தான பொறுப்பும் இந்த ரேஷன் காலத்தில் அவர்களுடைய தலையிலே சுமந்திருக்கிறது.

மாதர்கள் மகாநாட்டை வெற்றிகரமாக நடத்திக் கொடுக்கும் பொறுப்பு முக்கியமாக நன்கொடை அளிக்கும் சகோதர சகோதரிகளையே பொறுத்திருப்பதால், அவரவர்கள் அனுப்ப விரும்பும் நன்கொடையை, இந்திய மாத சங்கம், 96, "மேரு" மௌபரீஸ் ரோடு, மயிலாப்பூர், சென்னை என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிருேம். மேற்படி மகாநாட்டுக்கு வரவேற்புக் கமிட்டித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் ஸ்ரீமதி எஸ். அம்புஜம்மாள் அதற்கு ரொம்பவும் தகுதியானவர் என்று சொல்லத் தேவையில்லை. அவரது வரவேற்பு ஏற்பாடுகளின் கீழ் மாதர் மகாநாடு மகத்தான மகா நாடாக நடைபெறும் என்பதிலும் சந்தேகமில்லை.

## சோதிக்கிருர்கள்!

இந்திய சர்க்காரின் முடிவை ஒட்டி சென்னை சர்க்காரும் உணவுக் கட்டுப்பாட்டைச் சிறிது சிறிதாகவும், மூன்று கட்டங்களாகவும் ரத்து செய்ய முன் வந்திருக்கிருர்கள். அதன் படி முதன் முதலாக ராயல சீமையிலுள்ள பெல்லாரி, அனந்தப்பூர், கர்நூல், கடப்பை ஆகிய ஜில்லாக்களைச் சேர்ந்த கிராமங்களில் உணவுக் கட்டுப்பாட்டை ரத்து செய்யப் போகிருர்கள். அடுத்த படியாக தஞ்சை, திருச்சி தென்னுற்காடு போன்ற உபரி ஜில்லாவைச் சேர்ந்த கிராமப் பிரதேசங்களுக்கும் இந்தத் திட்டம் அமுலுக்கு வரும். கடைசி கட்டமாகக் கட்டுப்பாடும் ரேஷன் முறையும் தேய் பிறை போல் தேய்ந்து அழிந்து போகும்.

இந்தச் சோதனையில் மேற்படி கிராமங்கள் வெற்றி பெற்ருல் தான் படிப்படியாகத் தங்கள் திட்டத்தை நிறைவேற்றப் போகிருர்கள். இல்லையென்ருல் மறுபடியும் கடுமையான கண்ட்ரோலும் ரேஷனும் அமுலுக்கு வந்து விடும் என்று கூறுகிருர்கள்.

உணவு மந்திரி டாக்டர் ராஜன் கொஞ்ச காலமாகக் குரல் கொடுத்துக் கொண்டு வருவதைப்பார்த்தால் 'கொள்முதல் சரிவர வசூலாக வில்லை; பருவ மழை ஏமாற்றி விட்டது' என்று சோக கீதம் பாடுவதாகவே சொல்ல வேண்டி யிருக்கிறது. அவரைப் பின்பற்றி சென்னை விவசாய டைரக்டரும் அறிக்கை விட்டிருப்பதை நாம் அறிவோம். இப்படிப் பட்ட சந்தர்ப்பம் பார்த்துச் சென்னை சர்க்கார் கண்ட்ரோலையும் ரேஷனையும் நீக்கும் திட்டத்தில் முழு மூச்சுடன் இறங்கி யிருப்பது உண்மையில் சோதனையான காரியம்தான். இந்தச் சோதனையில் கிராமவாசிகளும், அத்துடன் சென்னை சர்க்காரும் வெற்றிபெற வேண்டும் என்று ஆசைப்படுகிருேம். இந்தக் கட்டுப்பாட்டைத் தளர்த்தும் விஷயத்தில் ஜாக்கிரதை யுடனும், சிரத்தையுடனும் சென்னை சர்க்கார் காரியத்தில் ஈடுபட வேண்டும் என்று எச்சரிக்கிருேம்.

## முழக்கம் கேட்கிறது!

தென்னுப்பிரிக்க இந்தியப் பிரச்னை பற்றி, புது டில்லியில் முழக்கம் கேட்கிறது! பிரதமர் பண்டித நேரு,



இந்தியாவின் குரல் அமெரிக்காவிலுள்ள ஐக்ய தேசச் சங்கத்தின் காதில் எட்டும்படி சங்கநாதம் செய்திருக்கிருர். தென்னுப்பிரிக்க இந்தியர்கள் சம்பந்தமாகச் சமீபத்தில் ஐக்ய தேச சபையில் விவாதம் நடந்த போது இந்தியாவுக்கு மூன்றில் இரு பங்கு வோட் கிடைக்கவில்லை என்பதற்காகச் சாதகமான முடிவு செய்யப்படவில்லை அல்லவா? ஆனுலும் "சென்ற வருஷத்திய முடிவைக் காற்றிலே விட்டுவிட மாட்டோம்" என்கிருர் நேருஜி. தென்னுப்பிரிக்காவும், இந்தியாவும் கலந்து பேசி ஒரு சமரசமான முடிவுக்கு வந்தும் அதை ஐக்ய தேசச் சபைக்கு அறிவிக்க வேண்டும் என்பதே சென்ற வருஷத்திய முடிவாகும். அந்தத் தீர்மானத்தின்படி தென்னுப்பிரிக்க ஜெனரல் ஸ்மட்ஸ் துரை நடந்து கொள்ளாத வரை நஷ்டம் தென்னுப்பிரிக்காவுக்குத்தான். காரணம், தென்னுப்பிரிக்க இந்தியர் சம்பந்தமான, பேச்சு வார்த்தையை முடித்தால்தான், தென்னுப்பிரிக்க—இந்திய வர்த்தக உறவு ரத்தை வாபஸ் வாங்க முடியும் என்று இந்திய சர்க்கார் ஸ்பஷ்டமாக அறிவித்து விட்டார்கள். எனவே, ஸ்மட்ஸ் துரை எப்படியும் நிச்சயமாகவழிக்கு வருவார் என்று எதிர்பார்க்கலாம்.



# மழையின் வெற்றி!

நமது கிரிக்கெட் நிருபர்

அன்று டிராம் வண்டியில் ஸென்ட்ரல் ஸ்டேஷனை நோக்கிப் போய்க் கொண்டிருந்தேன். டிராம் மௌண்ட் ரோடை அடைந்தபோது வண்டியிலிருந்த முக்கால் வாசிப் பேர் எழுந்து நின்று, மேற்குத் திசையைப் பார்த்தார்கள்.

"என்ன விசேஷம்? ஏதாவது விபத்து நேர்ந்து விட்டதா?" என்று அருகில் நின்று கொண்டிருந்தவரைக் கேட்டேன்.

"ஆமாம், விபத்துதான்! நம்மவர்கள் பாடு அதோ கதிதான். பிராட்மன் கொன்னுட்டான்!" என்பதைப் போன்ற வரர்த்தைகள் என் காதுகளில் விழுந்தன.

பக்கத்திலிருந்தவர் சொன்னார்: "இன்றுதானய்யா இந்தியாவுக்கும், ஆஸ்திரேலியாவுக்கும் முதல் டெஸ்ட் கிரிக்கெட் மாட்ச் ஆரம்பமாகிறது. 'ஹிந்து' ஆபீஸ் மாடி மேல் இன்றைய ஆட்ட 'ஸ்கோர்' போட்டிருப்பதைத் தான் பார்த்தோம். ஆஸ்திரேலியர்கள் 3 விக்கட்டுகளுக்கு 273 ஓட்டங்கள் எடுத்திருக்கிறார்கள். 600, 700 ஓட்டங்களுக்குக் குறையப் போவதில்லை. பிராட்மன் இன்றுமட்டும் 160 ஓட்டங்கள் எடுத்திருக்கிறார். நாளைக்கும் ஆடப் போகிறார். அதனால் தான் இந்தியாவுக்கு விபத்து என்றேன். இந்தியக் கோஷ்டி தோற்றுப் போனால் இந்தியா தோற்ற மாதிரி தானே?" என்று முடித்தார்.

எனக்கும் அப்பொழுது தான் கிரிக்கெட் பந்தய விஷயம் ஞாபகம் வந்தது. அன்று தான் முதல் டெஸ்ட் ஆரம்பமாகியிருந்தது. உலகம் புகழ் கிரிக்கெட் மன்னன் பிராட்மன் தலைமையில் ஆஸ்திரேலியர்கள் ஆடத் தொடங்கி அன்றைய ஆட்ட முடிவில் 273 ஓட்டங்கள் எடுத்திருந்தார்கள். பிராட்மன் மட்டும் தன் பங்குக்கு 160 ஓட்டங்கள் எடுத்திருந்தார். ஓடாமலேயே அவருக்கு 68 ஓட்டங்கள் கிடைத்திருந்தன! (இதைத்தான் கிரிக்கட் பாஷையில் 'பவுண்டரி' என்கிறார்கள். ஆட்டக்காரர் அடிக்கும் பந்து ஆட்டம் நடக்கும் மைதானத்தின் எல்லைக் கோட்டைத் தாண்டிப் போய் விட்டால் அவருக்கு ஓட வேண்டிய அவசியமில்லாமலேயே 4 ஓட்டங்கள் கிடைத்து விடுகிறது. பந்து எல்லைக் கோட்டைத் தாண்டிப் போய்க் கீழே விழுந்தாலோ ஆறு ஓட்டங்கள் கிடைக்கிறது! இதற்கு 'ஸிக்ஸர்' என்று பெயர்.)

இரண்டாம் நாளன்று மழை வந்து விட்டது. இந்தியக் கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் செல்லும் இடங்களிலெல்லாம் கூடவே மழையையும் கொண்டு போகிறார்கள் என்று தோன்றுகிறது. இந்த நிலைமையில் இந்தியர்களின் வெற்றிக்குக் குறுக்கே நிற்பவர்களில் முதன்மை ஸ்தானம் வருண பகவானுக்கே கிடைக்கிறது!

இரண்டாம் நாள் ஆட்ட முடிவில் ஆஸ்திரேலியர்கள் மேலும் ஆள் (விக்கட்) சேதமில்லாமல் தங்கள் முதல் இன்னிங்ஸ் (ஆட்ட) ஸ்கோரை 309 ஓட்டங்கள் வரையில் கொண்டு போக முடிந்தது.

மூன்றாம் நாள் விசேஷ தினம். பிரபல ஆட்டக்காரரான பிராட்மனால் கூட மழையினால் சேதப்பட்டிருந்த மைதானத்தில் ஆட முடியவில்லை. நம் ஊர் ஆட்டக்காரர்களான அமர்நாத்துக்கும் ஸோஹனிக்கும் எதிராக அவர் திணறியதைக் கண்டு கிரிக்கெட் பழம் பெருச்சாளிகளெல்லாம் அதிசயப் பட்டுப் போனார்கள். கடைசியில் பிராட்மன் தானாகவே ஸ்டம்புகளை வீழ்த்திக் கொண்டு 'அவுட்'டானதைப் போன்ற அதிசயம் இதற்கு முன் நடந்ததே இல்லை என்று கூறுகிறார்கள்.

பிராட்மனே திணறிப் போன போது மற்றவர்கள் என்ன செய்ய முடியும்? அதற்குப் பிறகு இந்தியர்களுக்கும், ஆஸ்திரேலியர்களுக்கும் போட்டி நடந்தது என்று சொல்வதை விட கிரிக்கட் ஆட்டக்காரர்களுக்கும் மழைக்கும் பலத்தயுத்தம் நடந்தது என்று கூறுவது மிகவும் பொருந்தும்.

ஆஸ்திரேலிய கோஷ்டி எட்டு ஆட்களை இழந்து 382 ஓட்டங்கள் எடுத்த பிறகு பிராட்மன் இந்தியர்களை ஆடச் செய்தார். அமர்நாத் நான்கு பேரையும், மன்காட் மூன்று பேரையும் வீழ்த்திப் பெருமை யடைந்தார்கள்.

இந்தியர்களில் அமர்நாத்தைத் தவிர வேறு எவரும் சரியாக ஆடவில்லை. மொத்தம் 58 ஓட்டங்கள் எடுத்து இந்தியர்கள் யாவரும் 'அவுட்'டானார்கள். அமர்நாத் மட்டும் 22 ஓட்டங்கள் எடுத்தார்.

இரண்டாவது முறையாக இந்தியர்களே ஆட வேண்டியிருந்தது. அந்த துரதிருஷ்டம் மிகுந்த மூன்றும் நாள் ஆட்ட முடிவில் இந்திய கோஷ்டி மேலும் நான்கு விக்கட்டுகளை இழந்து 48 ஓட்டங்களை மட்டுமே எடுத்திருந்தனர்.

நான்காம் நாள் காலை ஹஸாரேயும், ஸர்வாதேயும் ஆட வந்தார்கள் ஐயா! அன்று அவர்கள் ஆடிய ஆட்டத்தைப் புகழாதவர்களே கிடையாது. சுமார் ஒன்றரை மணி நேரம் விடாப் பிடியாக ஆஸ்திரேலியர்களுடன் போர் புரிந்தார்கள். அன்றைய ஆட்டத்தில் அவர்களை வீழ்த்தவே முடியவில்லை. 70 ஓட்டங்களுடன் ஆட்டத்தை நிறுத்த வேண்டி வந்தது. இதற்குள் மழை வந்து விட்டது. "சரி! இந்தியர்கள் தோற்க மாட்டார்கள். வெற்றி—தோல்வி என்பதில்லாமல் ஆட்டம் முடிந்து விடும்" என்றே எல்லோரும் எண்ணினார்கள்.

ஐந்தாம் நாள் மழை விடாமல் பெய்து ஆட்டமில்லாமல் செய்து விட்டது. கடைசி நாளாகிய ஆறாவது நாள் தான் மிகவும் முக்கியமான தினம். அன்று மழை வெற்றிபெற்றது! மழையினால் பாழ்பட்டிருந்த இடத்தில் இந்தியர்களால் வெகு நேரம் நின்று ஆட முடியவில்லை. "உடம்புக்கு ஆகாது." என்று நினைத்தோ என்னமோ போனவர்கள் உடனுக்குடனே திரும்பி விட்டார்கள்.

ஆஸ்திரேலியர்கள் இரண்டாவது தடவை ஆடாமலேயே வென்றனர். உண்மையில் மழைதான் இந்தியர்களைப் படு தோல்வி யடையச் செய்து விட்டது.

# துப்பறியும் குரங்கு



சிங்க ராஜனின் மகளுக்குக் கல்யாணம் நிச்சயமாகியிருந்தது. ஒரு மாதத்திற்கு முன்னாலிருந்தே பலத்த ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன. விருந்துக்கு வேண்டிய சாமான்களெல்லாம் வந்து குவிந்தவண்ணமிருந்தன. உக்கிராண அறைக்கு நரியார் காவலாக அமர்த்தப் பட்டார்.

மறு நாள் திடீரென்று நரி வேலைக்கு வரவில்லை. சிங்க ராஜனுக்கு விஷயம்எட்டியது.

சிறிது நேரத்தில் முயல் ஒன்று வியர்க்க விருவிருக்க ஓடி வந்து, "மகாராஜா, குகையில் நரியாரைக் காணவில்லை. குகைக்கு வெளியிலெல்லாம் இரத்தம் சிந்தி யிருக்கிறது. எங்களுக்குச் சந்தேகமா யிருக்கிறது. நரியாரை யாராவது கொலை செய்திருந்தால்?........" என்றது.

"முட்டாள் முயலே, நரி கொலையுண்டிருந்தால் அதனுடைய உடல் எங்கே?" என்று கேட்டது சிங்கம்.

சபையில் பரபரப்பு உண்டாயிற்று. மிருகங்களின் முகத்தில் ஈயாடவில்லை. இதற்குள் குரங்கு எழுந்துநின்று, "ராஜாதி ராஜனே, இந்த வேலையை என்னிடம் ஒப்படையுங்கள். நான் கண்டு பிடிக்கிறேன்" என்றது. சிங்கம் அதற்கு அனுமதியளித்தது.

உடனே, குரங்கு டாக்டர் யானையுடன் நரியின் குகையை அடைந்தது. குகையில் அதற்கு முன் தினம் நரி வந்ததற்கு அறிகுறிகள் தென்பட்டன. குகைக்கு வெளியிலும் உட்புறத்திலும் இரத்தம் சிந்தி யிருந்தது. குரங்கு தன் சோதனைகளை முடித்துக் கொண்டு யானையைப் பார்த்து, "டாக்டரவர்களே! இரத்தம் இங்கு சிந்தி சுமார் எத்தனை மணி நேரம் ஆகி யிருக்கும்? இது எந்த மிருகத்தினுடைய இரத்தம் என்னும் விவரங்களைக் கண்டு பிடித்துச் சொல்லும்" என்று உத்தரவிட்டது.

யானை தன் ரசாயனக் கருவிகளை எடுத்து வைத்துக் கொண்டு இரத்தம் படிந்த மண்ணைப் பரீட்சை செய்தது.

பிறகு மெதுவாகக் குரங்கின் காதோடு காதாக ஏதோ இரகசியம் கூறியது.

அன்று பகல் முழுவதும், குரங்குக்குச் சரியான வேலை. இரகசியமாக ஏதேதோ ஏற்பாடுகள் செய்து முடித்தது.

அன்றிரவு சுமார் பன்னிரண்டு மணி யிருக்கும். மிருகேந்திரனின் அரண்மனைத் தோட்டத்திற் கருகே இருந்த உக்கிராணக் கிடங்கின் பக்கத்துப் புதரில் குரங்கு இரண்டு போலீஸ் கரடிகளுடன் சந்தடி செய்யாமல் வந்து பதுங்கி யிருந்தது.

நரி மெதுவாக வேலியினுள் நுழைந்து கொண்டிருந்தது. கரடிகள் குரங்கின் முகத்தை உற்று நோக்கின.

சுமார் ஐந்து நிமிஷம் வரையில் திரும்பவும் நிசப்தமா யிருந்தது. கரடிகள் தயாராக இருந்தன. திடீரென்று திரும்பவும் ஒரு சலசலப்புச் சத்தம். அதைத் தொடர்ந்து ஒரு கோழியின் அலறல். குரங்கு "கீச்கீச்" சென்று கத்தியது. கரடிகள் குபீரென்று பாய்ந்து வெளியே ஓடி வந்த நரியைப் பிடித்துக் கொண்டன.

நரியார் வாயில் ஒரு கோழியைக் கவ்விக் கொண்டிருந்தார். எதிர்பாராத விதமாய் மாட்டிக் கொள்ளவே, அவர் கோழி திருடிய நரியைப் போல் விழித்தார்!

மறு நாள் ராஜ சபையில் பெருங் கூட்டம். நரியார் கையில் விலங்குகளுடன் மிருகேந்திரனுக் கெதிரில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டார். போலீஸ் கரடிகள் இறந்து போன கோழியைக் கொண்டு வந்து காட்டின. "சபாஷ் குரங்காரே! என்ன நடந்தது?" என்றது.

குரங்கு நகைத்து, "மகாராஜா, முதலில் நானும் என்ன செய்வதென்று நினைத்தேன். நமது டாக்டர் யானையாரைக் கொண்டு நரியின் குகையில் சிந்தியிருந்த இரத்தத்தைப் பரிசோதனை செய்ததும் எனக்கு உண்மை விளங்கி விட்டது. குகையில் சிந்தி யிருந்ததும் கோழியின் இரத்தம் தான். உக்கிராண அறைக்குக் காவலாக இருந்த நரியார் பல நாட்களாகவே இப்படிக் கோழிகளைத் திருடுவது என்று மனதிற்குள் திட்டம் போட்டு வந்திருக்கிறார்" என்றது.

மிருகராஜன் குரங்கைப் பாராட்டியது.

வேகம்

# புனர் ஜன்மம்

காபன்

ஊருகியோடும் வெள்ளிபோல் அருவி விழுந்துகொண்டிருந்தது. அருகிலே புஷ்பங்கள் நிறைந்த நந்தவனம். அதில் துள்ளிக் குதித்து அங்குமிங்குமாக ஓடிக்கொண்டிருந்தது ஓர் புள்ளிமான். மானைத் தொடர்ந்து கல்லிலும் புதரிலும் அடிவைத்து நடக்கிறாள் ஓர் அழகிய பெண்மணி. வனத்தில் சதா சஞ்சரிக்கும் மோஹினி அவள் தானோ என்னமோ? எங்கிருந்தோ சங்கீதத்தின் மதுர த்வனி கேட்கிறது. காதல் ததும்பும் இசை. அவளது பேரெழிலில் சொக்கிப் போன காதலனது வேதனை ததும்பும் இதயம்தான் அப்படி இன்னிசையாக இளகியோடுகிறது. ஆம்; அவன் இளவரசன் விமலன் தான். அவள் கமலி. அவன் மனதைக் கொள்ளை கொண்ட காதலி. கரைகாணாத உணர்ச்சியோடு கமலியின் கரங்களைப் பற்றிக் கொள்கிறான் விமலன்.

அந்த நேரத்தில் ஒரு பெரிய கூக்குரல், "நிறுத்து; நிறுத்து. நில்... விமலா...இல்லை...சந்தானம்...நில்" என்று டைரக்டர் உத்தரவிட்டார். விர்ரென்று சுழன்று கொண்டிருந்த காமராவும் சட்டென்று நின்றது. ஒலிப்பதிவு செய்து கொண்டிருந்த கருவியும் திடுதிப்பென்று நிறுத்தப்பட்டது.

டைரக்டருக்குக் கோபம் கரை புரண்டு ஓடும் வெள்ளம்போல் பொங்கியெழுந்தது. சுமார் ஆயிரம் அடி படம் வீணாகப் போனது பற்றிக் கோபமில்லை. தான் சொன்னபடி கேட்காமல் தான் தோன்றியாக அவள் நடித்ததில் கூட அவ்வளவு கோபமில்லை. ஆனால், இவன்—இந்த சந்தானம் என்றைக்கு அந்த ஸ்டூடியோவிற்குள் நுழைந்தானோ, அன்று முதல் அவன், கமலியாக நடித்த ஸ்டூடியோ நட்சத்திரம் மங்களேசுவரியிடம் நடந்துகொள்ளும் விதம் டைரக்டருக்குச் சுத்தமாகப் பிடிக்கவேயில்லை! எத்தனையோ சந்தர்ப்பங்களில் பார்த்திருக்கிறார். அதன் பலனாக அவர் மனதில் சந்தேகமும் வருத்தமும் இடம் பெற்று நின்றன.

* * *

மங்களேசுவரியை நட்சத்திர ஸ்தானத்துக்குக் கொண்டு வந்தவர் டைரக்டர் 'ராம்ஜி'தான். நான்கு வருஷங்களுக்கு முன் வேறொரு 'ஷூட்டிங்' விஷயமாக பம்பாய் செல்லும்போது பஞ்சையாய்ப், பரிதாபமாய், மெலிந்து வாடி வதங்கிப்போன ஓர் சிறுமி இரயிலில் டிக்கட் இல்லாமல் ஏறி பாட்டுப்பாடி பிச்சை எடுத்துக் கொண்டிருந்தாள். அவளது குரலின் நயமும் முகத்தின் சாயலும் கலைப்பண்பு வாய்ந்த 'ராம்ஜி'யின் மனதைக் கவர்ந்துவிட்டன. அவளுடைய வரலாற்றை விசாரித்தார். தாய் தந்தையற்ற—இந்த உலகிலேயே யாதொரு கதியுமற்ற - ஓர் அபலைப் பெண் அவள் என்று அறியவே அவளைத் தன் ஸ்டூடியோவுக்கு அழைத்து வந்தார். அன்றைய தினத்திலிருந்து பட உலகில் அவளை முன்னுக்குக் கொண்டுவருவது என்ற சங்கல்பத்துடன் முயன்றார். வசீகரமான முகமும் குருகுருத்த கண்களும் சாந்தம் தவழும் வதனமும் அற்புதமான கானமும் அவளிடம் அமைந்திருப்பதைக் கண்டதும் அவர் மனம் பரவசமடைந்தது. திரையுலகில் தன்னையும் அந்த ஸ்டூடியோவையும் வெகு உயர்ந்த-உன்னத நிலைக்குக் கொண்டு வரக்கூடிய நட்சத்திரம் இவள்தான் என்று மனம் பூரித்தார். முதல் படத்திலேயே அவளுக்கு நல்ல பெயர் கிடைத்துவிட்டது. பொதுஜனங்களிடையே அந்தப் புது முகத்துக்கு மதிப்பு ஏற்பட்டது. சூட்டோடு சூடாக நாலைந்து படங்களில் அவளுக்குப் பிரதான பாகம் கொடுத்துப் படங்களை வெளிக் கொணர்ந்தார். அவரது பெயரும் டைரக்ஷன் திறனும் அகில இந்தியப் பிரக்யாதி பெற்றது. சொந்த ஸ்டூடியோவை நூதன வசதிகளுடன் அமைத்துக் கொண்டார். மங்களேசுவரியை விட்டுவிடக்கூடாது என்று முடிவு செய்துகொண்டார். அவளை 'ரிஜிஸ்தர் விவாகம்' செய்துகொண்டால் என்ன என்று கூட யோசித்தார்.

அதிர்ஷ்டத்தோடு அதிர்ஷ்டம் சேருவதுபோல 'சந்தானம்' என்ற திறமை வாய்ந்த நடிகன் டைரக்டர் ராம்ஜியிடம் சமயம் பார்த்து வந்து சேர்ந்தான்.

டைரக்டரின் உத்ஸாகத்துக்குக் கங்குகரையில்லை. இதுவரை தகுந்த ஆண் நடிகர் கிடைக்காத காரணத்தால் அவர் மிகவும் கஷ்டப் பட்டுக் கொண்டிருந்தார். பெண்ணுக்கு முக்கிய பாகமும், பிரதான நடிப்பும் அமைகிற கதைகளாகவே தேடிப் பிடிக்க வேண்டியிருந்தது. அந்தக் குறை இப்போது நீங்கிவிட்டது.

சந்தானத்தோடு பத்து வருஷத்துக்குத் தன் ஸ்டூடியோவில் மட்டும் நடிப்பதென்ற ஒப்பந்தம் செய்து முடித்தார் ராம்ஜி. ரஸமான நூதனக் கதைகளைத் தேர்ந்தெடுத்தார். கதாநாயகனாக சந்தானமும், கதாநாயகியாக மங்களேசுவரியும் நடிப்பதென்றால் படத்தின் பெயருக்கும் புகழுக்கும் வசூலுக்கும் கேட்கவும் வேண்டுமா என்ன ?

பணமும் பெயரும் புகழும் பெருகப் பெருக டைரக்டர் ராம்ஜியின் மனதில் அதிகமான ஆசைகளும் ஏற்பட ஆரம்பித்தன. 'நடிகை மங்களேசுவரியோடு யார் நடித்தாலும் நன்றாகச் சோபிக்க முடியும்...நாம் மட்டும் ஏன் நடிக்கக் கூடாது ?...ஹாலிவுட்டுக்கு அவளுடன் சென்று புதிய படங்களை எடுத்து ஏன் உலகம் முழுதும் விநியோகிக்கக் கூடாது ?......'

மங்களேசுவரியின் மீது அன்பு அதிகமாகிக் கொண்டுபோகும் போதே மற்றொருபுறம் சந்தானத்தின்மீது துவேஷம் வளர ஆரம்பித்தது. சந்தானமும் மங்களேசுவரியும் ரிஜிஸ்தர் விவாகம் செய்துகொள்ளப் போகிறார்களாம்......... இந்த ஸ்டூடியோவிலிருந்து விலகிச் சொந்த முயற்சிகளில் இறங்கப் போகிறார்களாம்...இந்தத் தகவல்கள் ராம்ஜியின் காதில் விழுந்தன. பளிச்சென்று சந்தானத்தை அழைத்து, கடிந்து பேசி "ஸ்டூடியோவை விட்டு வெளியே போய் விடு......உன் ஒப்பந்தம் இதோடு ஒழியட்டும்" என்றார்.

அவர் எதிர்பார்த்தபடி சந்தானம் பயந்து திகைத்துவிடவில்லை—சோர்வடைந்து மன்னிப்புக் கேட்கவுமில்லை. "நல்லதாய்ப் போச்சு" என்று விடை பெற்றுக்கொண்டு வெளியேறினான்.

ராம்ஜி எதிர்பார்த்தபடி மங்களேசுவரி மனம் பூரிப்படையவில்லை. சோர்ந்து வருந்தி மனம் கசந்து போயிருந்தாள்.

* * *

ஹாலிவுட் ஸ்டூடியோவில் "நடன மோஹனா" என்ற படம் எடுப்பதென்றும் அதில் மோஹனாவாக மங்களேசுவரியும் அவள் காதலனாகத் தானும் நடிப்பதென்று முடிவு செய்துகொண்டு விமானமேறத் தயாரானார் ராம்ஜி.

புறப்படும் நாளைக்கு முதல் நாள் இரவே நடிகை மங்களேசுவரி காணாமல் போய்விட்டாள். அவர் மேஜை மீது ஓர் கடிதம் இருந்தது.

"தெய்வம்போல் என்னைக் காத்து முன்னுக்குக் கொண்டு வந்த தந்தையாகிய தாங்கள் இப்போது வஞ்சக வலையில் என்னை வீழ்த்தலாமா ?......தங்கள் மனோரதங்களைக் கேள்விப்பட்டது முதல் எனக்குப் பெரும் பயமாயிருக்கின்றது......ஆயினும் தங்கள் மனதை வீணாகப் புண்படுத்த நான் விரும்பவில்லை. பாபி—துரோகியென்றும் விசுவாசமில்லாதவள் என்றும் உலகம் என்னைத் தூற்றுமுன் இந்த பாப ஜன்மத்தைக் காவிரியின் பிரவாகத்தில் முடித்துக் கொள்கிறேன். தந்தையே...... மன்னியுங்கள்...என்னைத் தேடாதீர்கள்" என்று அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தது.

பாவம், ராம்ஜி என்ன செய்வார் ? மனம் பதறினார். எங்கும் தேடினார். மங்களேசுவரி அகப்படவேயில்லை.

யானை தன் தலையில் மண்ணை அள்ளிப் போட்டுக் கொண்டது போலாயிற்று. ஏழெட்டு நாட்களுக்குப் பிறகு நதிக்கரை யோரமாக ஒரு கிராமத்தில் அங்க அடையாளம்தெரியாதபெண் ஒருத்தியின் உடலம் ஜலத்தால் கரையில் ஒதுக்கப்பட்டுக் கிடப்பதை அறிந்த போலீஸார் சுறு சுறுப்படைந்து புலன் விசாரிக்கத் தொடங்கினர். 'பிரபல நடிகை மங்களேசுவரியின் கொலை வழக்கு' என்ற வழக்கு வெகு பிரசித்த மடைந்தது. அதில் சம்பந்தப் பட்டவர்களில் முக்கியஸ்தர் என்பதாக டைரக்டர் ராம்ஜி கைது செய்யப்பட்டார். வழக்கு விசாரணையின் போது அவருடைய ஸ்டூடியோவும் செல்வமும் அனைத்தும் காலியான





சிஷ்யர் :— எல்லாக் கீர்த்தனங்களையும் மனப் பாடம் பண்ணிட்டேன். இன்னும் 'மங்களம்' மட்டும் சொல்லித் தரவில்லையே.

குரு :—அவசிய மில்லையப்பா ! 'பவமான'ன்னு ஆரம்பிச்சதுமே எல்லோரும் எழுந்துடுவா. எனக்கும் மங்களம் முழுக்கத் தெரியாது

தோடு ஏகப்பட்ட கடன்களும் ஆகிவிட்டது. இரண்டு வருஷங்களாக நடைபெற்ற அந்த வழக்கில் கடைசியாகக் குற்றவாளியல்ல என்ற தீர்ப்புக் கூறப்பட்டு விடுதலையடைந்தார். ஆனல் அவர் முன்னைப் போல் உத்சாகத்துடன் இருக்கவில்லை. 'வீணுக ஓர் அபலைப் பெண்ணின் மனதை அறியாமல்... அவள் காதலித்த சந்தானத்தை விரட்டி விட்டாயே...நீ ஓர் பாவி. ஒரு சின்னஞ் சிறு பெண்ணை வயதும் முறையும் பொருந்தாமல் இத்தனை வயதுக்குப் பிறகு கல்யாணம் செய்ய நினைத்தாயே...துரோகி' என்றுஅவர் மனம் இடித்துத் துன்புறுத்திக் கொண்டேயிருந்தது.

* * *

இரண்டு வருஷங்கள் சென்றன. ஒரு காலத்தில் பிரபல டைரக்டராயிருந்த ராம்ஜி—சாதாரண மனிதனுக—மனம் கசந்து நொந்த ஆத்மாவாக தேசயாத்திரை செய்து கொண்டு வந்தவர் புதுச் சேரியில் ஒரு சத்திரத்தில் தங்கினர். எதிரே "சுவாமி விமலானந்தா" என்ற நாடக விளம்பரம் அவர் கண்களில் பட்டது. அருகிலுள்ள தியேட்டரில் நாடகம். ஏழைகள் சகாய நிதிக்காக நடைபெற்றது. அன்றிரவு நாடகத்துக்குச் சென்று தரையில் உட்கார்ந்தார் ராம்ஜி. ஒரு காலத்தில் அவர் எழுதிய 'சுவாமி விமலானந்தா' என்ற கதை தான் அது! என்ன ஆச்சரியம்? நடிப்பவர்கள் சந்தானமும் மங்களேசுவரியும் தான்...ஆம்...சந்தேகமே இல்லை...இதென்ன கனவா...மங்களேசுவரி சாகவில்லையா...? ராம்ஜியின் நெஞ்சு வெகு வேகமாக அடித்துக் கொண்டது. தலை சுற்றியது. யாரோ ஒருவர் அவர் காங்களைப் பற்றித் தரையிலிருந்து கூட்டத்தின் நடுவே இழுத்துச் செல்வது போலிருந்தது...மேடை ஏறி திரைக்குப் பின் நாடக பாத்திரங்கள் வேஷமிடும் அறையை அடைந்தார்.

"அப்பா...அப்பா...நீங்கள் தான......நிஜமாகவா ?" என்று ராம்ஜியின் காங்களைப் பற்றிக் கொண்டு கதறி அழுதாள் மங்களேசுவரி. கூப்பிய கரங்களோடு அவர் எதிரே நின்று கொண்டிருந்தான் சந்தானம்.

ராம்ஜிக்கு தன் சுய நினைவு வருவதற்கு வெகு நேரமாயிற்று.

"அப்பா, என்னை மன்னியுங்கள். அவரை விட்டுப் பிரிந்து இருக்க என் மனம் துணியவில்லை. அதனல் தான்;தங்களிடம் கூடச் சொல்லிக் கொள்ளாமல் வந்து விட்டேன்.

"மறு தினமே நாங்கள் விவாகம் செய்து கொண்டோம்......அது முதல் ஒரு சிறு நாடகக் கம்பெனியை ஏற்படுத்திக் கொண்டு பிழைக்கிரேம். இப்போது எங்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. இதோ தொட்டிலில் தூங்குகிருன், பாருங்கள்......உங்கள் பேரன்......பாபு என்று பெயரிட்டிருக்கிரேம்" என்று கூறினள் மங்களேசுவரி.

வேஷ அறையின் ஓர் மூலையில் தொட்டிலில் உறங்கிக் கொண்டிருந்த பச்சிளங் குழந்தையை நடுங்கும் கரங்களால் எடுத்து மன்னிப்புக் கோரும் இதயத்தோடு முத்தமிட்டார். மகளையும் மருமகனையும் அருமைப் பேரனையும் காணும் அந்த பாக்கியத்தில் தான் புனர் ஜன்மம் பெற்றது போல் ராம்ஜி தன்னுடைய துன்பங்களை யெல்லாம் அடியோடு மறந்து மனம் பூரித்துப் போனர்.


# Mr. Mrs. – or – Miss – !

*This is the EXACT THING You're looking for –*

A.-E. I.

**STEEL TOILET STAND**


— DESIGNED TO SUIT YOUR NEEDS AND PURSE YOUR TOILET, BATH, SHAVE OR POOJA ARTICLES ACCOMODATED JUST TWO NAILS HOLD IT ON THE WALL. STURDY SINGLE-SHEET STEEL STAND —

Price : Rs.4/- Postage Extra.

Manufacturers :


**ALLIED ENGINEERING INDUSTRIES**

MALLESWARAM P.O., BANGALORE





# ரேடியோ வாங்கினேன்



கேயம்

## 3. வரதன் விஜயம்

"முகத்திலே எள்ளும் கொள்ளும் வெடித்தது" என்று கதைகளிலே வர்ணிக்கிருர்கள். அப்படிப்பட்ட முகத்தை என்ருவது ஒரு தினம் நேரில் பார்த்து விடவேண்டும் என்று நான் வெகு நாட்களாக ஆசைப்பட்டுக் கொண்டிருந்தேன்.

மேற்படி அபிலாஷையைத் தீபாவளி அன்றைக்குப் பூர்த்தி செய்து வைத்த என் ரேடியோவுக்கு என்னுடைய மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் மூன்று மணி எப்போது அடிக்கும் என்று கண் கொட்டாமல் காத்திருந்து விட்டு அவள் ரேடியோவிடம் இரண்டாவது முறையாக ஜாம் ஜாமென்று நடந்து வந்தாள். மறுபடியும் பழைய கதை தான் !

வெளிச்சம் தெரியவில்லை. உள்ளே 'கமுரா' சப்தம் கூடக் கேட்கவில்லை. பாட்டும் பாடவில்லை. அப்போது தான் அவள் முகத்திலே எள்ளும் கொள்ளும் வெடித்தது ! அந்தக் காட்சியை நானும் கண்டு விட்டேன்.


"இதோ பார்! அவசரப்படுகிருயே; பாடப் போகிற பாகவதர் தீபாவளி விருந்தில் மெய்ம்மறந்து சற்றுத் தாமதமாக வரலாம். பொறுத்துப் பாரேன் !" என்று சமயோசிதமாகப் பதில் சொல்லி வைத்தேன். ஆனல், அடுத்த வீட்டு ரேடியோவில் அந்தப் பாழும் பாடகர், "வருகலாமோ, ஈசா!" என்று பாடி விட்டார்.

என் பாடு ஆபத்தாகி விட்டது. தன்னந் தனியாகச் சிக்கிக்கொண்டேன். என்னைக் காப்பாற்றச் சந்துருவோ, அப்புவோ வந்த பாடில்லை! என்னை இந்த ஆபத்திலிருந்து காப்பாற்ற "ஈசா ! நீ கண்டிப்பாய் வரத்தான் வேண்டும்" என்று சொல்லத் தோன்றியது.

வாசற் கதவை யாரோ பிளக்கும் சப்தம் கேட்டது. என்னைக் காப்பாற்ற ஈசன் தான் வந்து விட்டானே என்று நினைத்து "இதோ வந்து விட்டேன் !" என்று சொல்லிக் கொண்டே விழுந்தடித்துக் கொண்டு ஓடி வாசற் கதவைத் திறந்தேன்.

என் சின்ன மைத்துனன் வரதன் தன் சைகிள் வாகனத்துடன் அலுத்துப் போய் நின்று கொண்டிருந்தான். "வந்தாயா, வரதா ! நல்ல வேளையாக வந்தாயே ! நீயும் உன் *1903*-ம் வருஷ மாடல் சைகிளும் நீடூழி காலம் சென்னை ரோடுகளில் வாழவேண்டும்" என்று மனப்பூர்வமாக ஆசிர்வதித்துக் கொண்டே அவனை உள்ளே இழுத்துக்கொண்டு போனேன்.

தனக்கு இவ்வளவு அமோக வரவேற்பு ஏன் என்பதை வரதன் ரேடியோவிற்கு அருகே வந்து, உற்றுக் கவனித்த பிறகுதான் புரிந்து கொண்டான்.



சைகிள் வாகனத்துடன்...

ரேடியோவைத் தனது காத்தால் அலட்சியமாக ஒருதூக்குத்தூக்கிப் பார்த்து விட்டு, "எப்போ அத்திம்பேரே ?" என்று ரேடியோ வாங்கிய விஷயத்தைப் பற்றிக் கேட்டு அறிந்து கொள்ள ஆசைப் பட்டான். இதற்குள் அவள் "ஏண்டா. வரதா! உங்கள் அத்திம்பேர் வாங்கிக் கொண்டு வந்திருக்கிற அவதாரத்தைப் பார்த்தாயா? பாடவே மாட்டேங்கறது! நீ ஏதாவது ரிப்பேர் செய்து பாரேன். உனக்குத் தான் இதெல்லாம் தெரியுமே" என்று தம்பிக்குச் சகல பொறுப்புகளையும் தாராளமாக வழங்கினள்.

வரதன் எப்போதுமே வெறும் வாயை மெல்லுகிறவன். ஒரு ஓட்டைக் கடிகாரத்தை ஒன்பது நாள் குடைந்து கொண்டிருப்பவன். ரிப்பேருக்கு ரேடியோவே கிடைத்து விட்டால் கேட்க வேண்டுமா ?

"சரி அக்கா!" என்று சொல்லி விட்டு மல்யுத்தம் செய்யக் கிளம்புகிறவன் போல், பனியனும் தானுமாகத் தயாராகி விட்டான் ! "இதோ ஒரு நிமிஷம்" என்று சொல்லி விட்டு எங்கள் பதிலை எதிர்பாராமலே விர்ரென்று சைகிளில் ஏறி எங்கேயோ பறந்து போனன். வருகிற போது சில ரிப்பேர் ஆயுதங்கள் சகிதம் வந்து சேர்ந்தான். வந்திருந்த சாமான்களில் எது அதிகமாக உபயோகப் பட்டாலும், படாவிட்டாலும் சுத்தியும், உளியும் ரொம்பவும் இன்றியமையாதவை போலத் தோன்றின. அந்த இரண்டை மட்டும் தன் கையில் அலங்காரமாகப் பிடித்துக் கொண்டபோது வரதாயுத பாணியாகக் காட்சி அளித்தான் அவன்.

"சீக்கிரம் ஏதேனும் உருப்படியாக்கு அப்பனே!" என்று மட்டும் ஒரு வார்த்தை சொல்லி விட்டு நான் அந்த அறையை விட்டு நகர்ந்து விட்டேன். அதற்குப் பிறகு அரை மணி நேரத்துக்குச் சுத்தியும், உளியும் ரொம்ப உபயோகமாக இருந்தது என்பதை அந்த அறையிலிருந்து எழுந்த சப்தத்திலிருந்து ஊகித்துக் கொண்டேன். உப்பு, புளி போட்டு வைப்பதற்காவது அவன் உருப்படியாக ஏதாவது செய்து விட்டுத் தான் போவான் என்ற நம்பிக்கைக்கு மேற்படி ஊகம் மிகவும் உதவி செய்தது.



'உள்ளே என்ன நடக்கிறது என்று'...

வரதன் ரேடியோவுடன் எத்தனை மணி நேரம் இடை விடாமல் போராடினனே தெரியாது! அவனுக்கு அடிக்கடி பலமான உபசாரம் நடந்து கொண்டிருந்தது. காப்பியும், டிபனும் படையெடுத்தன. கூஜா கூஜாவாகத் தீர்த்தம் போய்க் கொண்டிருந்தது. பிறகு விசிறியும், வெற்றிலைத் தாம்பாளமும், கொண்டு போகப் பட்டன. என் தலை தீபாவளிக்குக் கூட அவள் அப்படி உபசாரம் செய்யவில்லை. வரதன் கொடுத்து வைத்திருந்தான்!

ரிப்பேர் செய்கிறவன், தன் சுய மூளையைக் கொண்டு பிறருக்குத் தொந்தரவு கொடுக்காமல் செய்து தொலைக்கக் கூடாதா? அடிக்கடி "அத்திம்பேரே!" என்று அலற ஆரம்பித்தான். சிற்சில சமயங்களில் இந்த அலறல் என்னைக் கட்டிலில் இருந்து தூக்கி வாரிப் போட்டதும் உண்டு. பயல் ஒரு வேளை கையைக்காலைக் கொடுத்து விட்டுக் கூக்குரல் போடுகிருனே அல்லது ஒரு வேளை 'ஷாக்' அடித்து விட்டதோ என்று நினைக்கும்படி இருந்தது. இன்னும்சிலசமயங்களில்நான் "போதும், வரதா! வந்த வேலையைப் பார்த்துக்கொண்டு கிளம்பு. நாங்களும் ரேடியோவும் எக்கேடாவது கெட்டுப் போகிறோம்" என்று சொல்ல நினைத்தேன். ஆனால் சாட்சாத் தம்பியைக் கொண்டு இரண்டிலொன்று செய்யாமல் அவள் அந்த அறையை விட்டுக் கிளம்பக் கூடாது என்று திடசங்கல்பம் செய்து கொண்டவள் போலக் கம்பீரமாக நின்று கொண்டிருந்தாள்.

கடைசியாக, வரதனையும் மீறி விட்டது ரேடியோ. அதற்காக வரதன் அதை வெறுமனே விட்டு வைக்கவில்லை. அக்கு வேறு ஆணி வேருகக் கழற்றி அறை முழுவதும் கடை பரப்பி வைத்திருந்தான். "இவ்விடத்தில் பழைய இரும்பு சாமான்கள் சரசமாக விற்கப்படும்" என்று போர்டு மாட்ட வேண்டியது தான் பாக்கி.

அதன் நடுவே வரதனைத் தேடிக் கண்டு பிடித்து ஆறுதல் சொன்னுள் அவள். "உன்னால் முடியா விட்டால், அத்திம்பேரை அழைத்துக் கொண்டு எந்த ரேடியோ ஷாப்பிற்காவது அந்த இழவை எடுத்துக் கொண்டு போ" என்று தம்பிக்கு யோசனை சொல்லிக் கொடுத்ததும் காதில் விழுந்தது.

அக்காவின் அபிப்ராயத்தை வேறு வழியின்றி, விள்ளாமல் விரியாமல் ஒப்புக் கொண்டான் தம்பி வரதன். பிறகு "அத்திம்பேரே!" என்று வழக்கப் பிரகாரம் குரல் கொடுத்தான்.


"என்ன வரதா! உன்னால் முடியவில்லையா?" என்று பளிச் சென்று கேட்டேன்.

"முடியும் அத்திம்பேரே, முடியும்! ஆனல் 'வால்வ்' அறுந்து விட்டது. அதனால்தான் என்ன செய்யலாம் என்று யோசிக்கிறேன்" என்று ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கி இருப்பவன் போலப் பாவனை செய்தான் வரதன்; முகத்தையும் அதற்கேற்றபடி வைத்துக்கொண்டான்.

"இந்த ரேடியோவிற்கு மொத்தம் எத்தனை வால்கள்? அதில் ஒன்று அறுந்து போனல் குடி முழுகியா போய்விடும்?" என்று கேட்டேன்.

வரதன் 'கெக்கெக்கே' என்று இளித்து விட்டு, "அத்திம்பேரே! வால் இல்லை 'வால்வ்'" என்று புரிய வைத்தான்.

மூவரும் கூடி ஏகோபித்துத் தீர்மானித்தோம். ரேடியோவிற்கு மேற்கொண்டு எவ்வளவு பணம் செலவழிந்தாலும் சரி, அதை ரிப்பேர் செய்து பார்த்து விடுவது என்பதே எங்களுடைய இறுதித் தீர்மானம்.



ரேடியோவின் வால்...

எனவே, வரதன் பக்கத்திலிருந்த பழைய கள்ளிப் பெட்டியைத் தாவி எடுத்து அதிலிருந்த குப்பைக் கூளங்களை எல்லாம் தலைகுப்புறச் சாய்த்து விட்டு, கலகலத்துக் கிடக்கும் ரேடியோ பாகங்களை ஒவ்வொன்ருக எடுத்து அதில் நிரப்பினன். சைகிளுக்குப் பின்னல் வைத்துக் கட்டிக கொண்டு சிட்டாய்ப் பறந்தான்.

"வரதா, சற்று நில்!" என்று குரல்கொடுத்துக்கொண்டே தெருவில் குதித்து சைகிளுக்குப் பின் ஓடினேன். அந்தக் காட்சி பார்க்கிறவர்களுக்கு வரதன் என் வீட்டில் எதையோ திருடிக் கொண்டு ஓடுவது போலவும், நான் அவனைத் துரத்திக் கொண்டு போவது போலவும் தோன்றியிருக்க வேண்டும்.

* * *

இப்படியாக ரேடியோ பாடுவதற்குப் பதிலாக சைகிளுக்குப் பின்னல் உருண்டு உருண்டு ஓடியது! நானும் அதற்குப் பின்னல் "வரதா!" என்று ஒலி பரப்பிக் கொண்டே ஓடினேன்.


சந்தா விவரம்

உள்நாடு:

| | | |
|---|---|---|
| ஒரு வருடம் | ரூ. | 12 0 0 |
| ஆறு மாதம் | ரூ. | 6 0 0 |

வெளிநாடு:

| | | |
|---|---|---|
| ஒரு வருடம் | ரூ. | 18 0 0 |
| ஆறு மாதம் | ரூ. | 9 0 0 |

மானேஜர்:

வெள்ளிமணி

தியாகராயநகர் சென்னை 17







ஐந்தாம் அத்தியாயம்

## வேலை கிடைத்தது

கோர்ட்டிலிருந்து வெளியே இழுத்துக் கொண்டு போய் விடப்பட்ட தேவகி ஸப்-இன்ஸ்பெக்டர் வீட்டை அடைந்ததும் உன்மத்தம் பிடித்தவளைப் போலானுள். பிறந்தது முதல் தகப்பனை விட்டுப் பிரிந்தறியாத தன்னைத் தகப்பனிட மிருந்து பிரித்து விட்ட மாஜிஸ்டிரேட் மீது ஆத்திரமும் ஆங்காரமும் பற்றிக் கொண்டு எழுந்தது.

குழந்தைப் பருவத்திலேயே தாயைப் பிரிந்து விட்ட தேவகியைப் பாண்டுரங்கம் தன் கண்ணுக்குக் கண்ணாக வளர்த்து வந்தான். தன் காரியங்களைக் கவனித்துக் கொள்ளப் பிராயம் போதாத அறியாக் குழந்தையாயிருந்த தேவகியைத் தன் கையாலேயே வளர்த்து வந்தான்.

இந்தக் காரணங்களினுல் தேவகிக்குத் தந்தையிடம் இயற்கையாக இருந்த பாசம் பன்மடங்காகப் பெருகி வளர்ந்திருந்தது. தந்தையோடு இருப்பதில்தான் அவளுக்கு எப்போதும் ஆனந்தம். அப்பாவோடு சாப்பிடுவதிலேதான் குதூகலம். அவருடன் வேடிக்கையாகப் பேசுவதில்தான் சந்தோஷம். அவரோடு சண்டை பிடிப்பதிலே கூடத் தனி இன்பம் இருப்பதாக நினைத்தாள்.

பாண்டுரங்கமும் அப்படியே. மில்லில் வேலை செய்த நேரம் போக, சிவ வடிவேல் சுவாமியாரின் காலட்சேபம் கேட்கும் சமயம் தவிர, தேவகியை விட்டுப் பிரியமாட்டான். ஏன், தன்னுடைய ஆருயிரே தேவகியின் ரூபத்தில் நடமாடுவதாகத்தான் அவன் எண்ணிக் கொண்டிருந்தான். இத்தகைய அன்பும் பாசமும் வைத்திருந்த தந்தையைப் பிரித்து வைத்த மாஜிஸ்டிரேட் மீது தேவகிக்கு கோபமும் ஆத்திரமும் ஏற்பட்டதில் ஆச்சரியமில்லை அல்லவா?

தேவகி உன்மத்தம் பிடித்தவளைப் போல் உட்கார்ந்திருப்பதைக் கண்ட ஸப்-இன்ஸ்பெக்டர் வீட்டுப் பெண்கள் அவளைச் சமாதானப் படுத்திச் சாந்த நிலைக்குக் கொண்டு வரப் பெரு முயற்சி எடுத்துக் கொண்டார்கள். ஸப்-இன்ஸ்பெக்டருடைய மூத்த பெண் விமலை தேவகியைத் தன் சொந்த சகோதரியைப் போல் நேசித்தாள். அவளைக் குளிக்கச் சொல்லிப் பெட்டியிலே வைத்திருந்த தன்னுடைய ஆரஞ்சு வர்ணப் புடவையை எடுத்துக் கொடுத்து உடுத்தச் சொன்னுள். அந்தப் புடவையை உடுத்திக் கொண்டதும் தேவகியின் அழகு பன்மடங்காகச் சோபித்தது. பிறகு விமலை தன் கையாலேயே அவளுக்குச் சாதம் பறிமாறினுள். தேவகி வேண்டா வெறுப்புடன் விமலையின் தொந்தரவுக்காகச் சாப்பிட்டாள்.

தேவகியின் வாழ்க்கையில் இவ்வாறு ஏழெட்டு தினங்கள் கழிந்து விட்டன. மனதைச் சாந்தப்படுத்திக் கொள்ளுவதைத் தவிர வேறு மார்க்கமில்லை என்பதை உணர்ந்த தேவகி தந்தையின் ஞாபகம் வரும்போதெல்லாம் அதை அடக்கித் தன் சிந்தனையை வேறு காரியங்களில் செலுத்தினள்.

ஒரு நாள் காலை ஸப்-இன்ஸ்பெக்டருடைய மனைவி தேவகியைக் காரில் அழைத்துக் கொண்டு 'ரத்னவில்லா'வுக்குப் புறப்பட்டாள். வெளியே புறப்படுகிற வரையில் தேவகிக்குத் தான் எங்கே செல்லுகிறோமென்பதே தெரியாமலிருந்தது.

காரில் சென்றபோது வழியில் ஸப்-இன்ஸ்பெக்டருடைய மனைவியே அதைக் கூறினள். ரத்னவில்லாவில் வசிக்கும் மிஸஸ் ஜனார்த்தனம் தன்னுடன் படித்தவளென்றும், தனக்கு ஆப்த சிநேகிதை என்றும், தன் சொல்லைத் தட்டமாட்டாளென்றும், ஆகையால் தேவகியை அந்த வீட்டில் கொண்டு போய் வேலைக்கு அமர்த்தப் போவதாகவும் கூறினள்.

தன்னிடம் இவ்வளவுதூரம் அன்பு பாராட்டும் ஸப்-இன்ஸ்பெக்டர் மனைவி மீது தேவகிக்கு அளவிலாத பக்தியும் நன்றியும் தோன்றியது.

"அம்மா, தாங்கள் தான் என்னுடைய தாய். தாங்கள் செய்யும் இந்தப் பேருபகாரத்துக்கு நான் எந்த விதத்தில் ஈடு செய்யப் போகிறேன்?" என்று சொல்ல வாயெடுத்தாள். மறு கணம் அம்மாதிரி சொல்லுவது வெறும் உபசார வார்த்தையாக இருக்கும் என்று எண்ணிப் பேசாமலிருந்து விட்டாள். அத்துடன் ஏதோ ஒருவித லஜ்ஜையும் குறுக்கிட்டு அந்த வார்த்தைகளைச் சொல்லவொட்டாமல் தடுத்தது.

கார் ரத்னவில்லா பங்களாவை நோக்கி மலைச்சரிவில் ஏறும் போது தேவகிக்கு ஒரு கணம்பிரமைதட்டியது. பத்து தினங்களுக்கு முன்னல் தன்னுடைய வாழ்க்கையில் இத்தகைய பெரும் மாறுதல் நிகழப் போகிறது என்று அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. இப்போது இந்தக் கணத்தில் இப்படிப்பட்ட ஒரு வனப்பு வாய்ந்த அதிசயமான இடத்திலே கார்ப் பிரயாணம் செய்யப் போகிறோம் என்றும் அவள் நினைக்கவில்லை.

எனவே, மலை மேல் கார் பறந்துசென்றபோது சொப்பனத்தில் ஆகாசத்தில் பறப்பதைப் போலவே தோன்றியது. சில்லென்ற மலைக் காற்று காரின் கண்ணாடி வழியாகப் பாய்ந்து அவள் முகத்தில் வீசியது, அவளுக்குப் புது அனுபவமாயிருந்தது. கார் ரத்ன வில்லா மாளிகையின் முன்வாசல் 'போர்ட்டிகோ'வில் போய் நின்றதும், முதலில் ஸப்-இன்ஸ்பெக்டர் மனைவி காரை விட்டு இறங்கினள். வாசலிலே நின்ற வேலைக்காரர்களில் ஒருவன் ஸப்-இன்ஸ்பெக்டருடைய மனைவியைப் பார்த்து விட்டு பங்களாவுக்குள் ஓடிச் சென்றான். அடுத்த நிமிஷம் ஸ்ரீமதி ஜனார்த்தனம் வாசலிலே ஆஜராகி ஸப்-இன்ஸ்பெக்டர் மனைவியைக் குதூகலத்துடன் வரவேற்றாள். பின்னர், தேவகியையும் அழைத்துக்கொண்டு இருவரும் உள்ளே சென்றார்கள். ஸப்-இன்ஸ்பெக்டர் மனைவியும் மிஸஸ் ஜனார்த்தனமும் பால்ய சிநேகிதைகளானதால் ரொம்பவும் நெருங்கிப் பழகிச் சல்லாபித்தார்கள். அன்று மாலை வரை ஸப்-இன்ஸ்பெக்டர் மனைவி ரத்னவில்லாவிலேயே தங்கி இருந்து விட்டுப் போகும் போது தேவகியை ஜாக்கிரதையாக இருக்கும்படியும், தான் அடிக்கடி வந்து பார்த்துக் கொள்வதாகவும் கூறிச் சென்றாள். அப்போது தேவகிக்குத் தன் சொந்தத் தாயார் தன்னைப் புக்ககத்தில் கொண்டு விட்டுப் போனல் எந்த வித உணர்ச்சி ஏற்படுமோ அத்தகைய உணர்ச்சி ஏற்பட்டது.

ஸப்-இன்ஸ்பெக்டர் மனைவி புறப்பட்டுப் போகும் போது மிஸஸ் ஜனார்த்தனத்திடம், "தேவகியை உங்கள் சொந்தப் பெண்ணைப் போல் பார்த்துக் கொள்ள வேண்டும்" என்று கூறியதும், அதற்கு அந்த அம்மாள், "நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாதீர்கள். நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று விடை கொடுத்தனுப்பியதும் தேவகியின் காதில் விழுந்தது.

* * *

ரத்ன வில்லாவில் பணிப் பெண் உத்தியோகத்தில் அமர்ந்த தேவகிக்கு முதலில் ஐந்தாறு





நாட்கள் வரை கட்டிப் போட்டதைப்போல் இருந்தது. பங்களாவின் சூழ்நிலை, சுற்றியிருந்த மனிதர்களின் மனோபாவம் எல்லாவற்றையும் உணர்ந்து அதற்குத் தக்கபடி தன்னைச் சரிப்படுத்திக் கொள்ள தேவகிக்கு ஒரு மாத காலம் பிடித்தது. இந்த ஒரு மாத காலத்தில் அந்தக் குடும்பத்தில் அவளுக்கு ரொம்பவும் சிநேகிதமானவள் சாந்தினி என்ற பெண் தான். அடுத்தபடி அந்த பங்களாவைக் காவல் காத்துக் கொண்டிருந்த 'டைகர்'!


சாந்தினி பெயருக்கேற்ற குணமும் பொறுமையும் படைத்தவளாயிருந்தாள். டைகரும் பெயருக்கேற்ற குணமுடையதாக இருந்த போதிலும், தேவகியைக் கண்டால் பசுவைப் போல் அடங்கி விடும். காரணம், தேவகி அந்த வீட்டுக்கு வந்ததிலிருந்து டைகரின் ஆகார விஷயங்களை அவளே கவனிக்கலானள்!

இதற்கு முன் இவ்வளவு பெரிய பங்களாவில் வசித்துப் பழக்கமில்லாத தேவகி கப்பல் போன்ற அந்தப் பெரிய பங்களாவைச் சாந்தினியுடன் ஒரு தடவை சுற்றிப் பார்த்தாள். விசாலமான அறைகளுடன் கூடிய அந்த பங்களா மூன்று அடுக்கு மாடிகள் கொண்டதாயிருந்தது.

எல்லாவற்றுக்கும் மேலே நிலா மாடம் ஒன்றிருந்தது. இராக் காலத்தில் மேல் உப்பரிகையிலிருந்து கவனித்தால் முன்னூறு அடிக்குக் கீழே யிருந்த சந்திரகிரி நகரம் மின்சார தீபங்களுடன் அழகாகத் தோற்ற மளிக்கும். அந்தக் காட்சி நட்சத்திரங்கள் நிறைந்த ஆகாசம் கீழே இறங்கி வந்து விட்டதைப் போல் தோன்றும்.

* * *

அந்த பங்களாவில் தேவகிக்கென்று சில குறிப்பிட்ட வேலைகள் இருந்தன. தோட்டக்காரர்களுக்கும், வண்டிக்காரர்களுக்கும் படி அளந்து கொடுப்பது; நாய்க்கு வேளை தவறாமல் குளிப்பாட்டி ஆகாரம் போடுவது, சாந்தினி காலேஜுக்குப் போகுமுன்னல் 'டிபன் பாக்ஸில்' ஆகாரம் எடுத்து வைப்பது, அன்றாட உபயோகத்துக்கான ஜலத்தைத் தோட்டத்து நீர்த் தொட்டியில் நிரப்பி வைப்பது, எல்லோருடைய உடுப்புக்களையும் கணக்கெழுதி வைத்துக் கொண்டு சலவைக்குப் போடுவது, பிறகு அவற்றைக் கணக்குப் பார்த்து வாங்கி வைப்பது முதலிய சகல சில்லறைக் காரியங்களையும் கவனிக்க வேண்டியது அவள் பொறுப்பில் விடப்பட்டிருந்தது. இந்த வேலைகளை, வந்தது முதல் தவறாமல் செய்து வந்ததன் காரணமாக வீட்டு எஜமானி யம்மாளிடம் நல்ல பெயர் எடுத்திருந்தாள் தேவகி.



இரவு, சாப்பாடான பிறகு தேவகிக்குப் படுக்கு மிடம் சாந்தினியின் அறைதான். பகலெல்லாம் வேலை செய்த அலுப்பினல், தேவகி படுத்த உடனேயே அயர்ந்து தூங்கி விடுவாள். சாந்தினி மட்டும் விளக்கை ஏற்றி வைத்துப் படித்துக்கொண்டே யிருப்பாள்.

சில தினங்களில் மணி பன்னிரண்டு ஒன்று, இரண்டு அடித்த பிறகும்கூட சாந்தினி படித்துக் கொண்டே இருப்பாள். அப்படி ஓயாமல் கண் விழித்து எதைத்தான் படிப்பாளோ என்று தேவகிக்கு அதிசயமாயிருக்கும்.

இரவு பத்தரை மணிக்கு மேல் சாந்தினி படிக்கக் கூடாது என்பது அவளுடைய அக்காவின் உத்தரவு. பத்தரைக்குமேல் அவள் படிக்கக் கூடாது என்பதற்காகவே 'மெயின் ஸ்விச்'சை 'ஆப்' செய்துவிட வேண்டுமென்று மிஸஸ் ஜனார்த்தனம் வேலைக்காரர்களுக்கு உத்தரவு போட்டிருந்தாள். ஆனலும் சாந்தினி, அக்காவுக்குத் தெரியாமல் பத்தரைக்கு மேல் விளக்கேற்றிப் படித்துக் கொண்டிருப்பாள். இரவு மணி பத்தரை ஆனதும் அந்த பங்களாவின் 'மெயின் ஸ்விச்'சைக் கீழே 'ஆப்' செய்து விடுவார்கள். அந்த சமயங்களில் திடுதிப்பென்று சாந்தினியின் அறையில் மின்சார விளக்கும் அணைந்து விடும். அம்மாதிரி சந்தர்ப்பங்களில் சாந்தினிக்கு விளக்கேற்றிக் கொடுப்பதும் தேவகியின் முக்கிய ஜோலிகளில் ஒன்று.

அன்று தேவகிக்கு ஏனே மணி பத்தரை ஆகியும் தூக்கம் வரவில்லை. தந்தையைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தாள். அப்பா இத்தனை நேரம் சிறையிலே என்ன செய்து கொண்டிருப்பார்? ஒரு வேளை தன்னைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருப்பாரோ? படுத்துத் தூங்குவதற்குச்

சிறையிலே பாய் கொடுப்பார்களா? தலைக்கு வைத்துக் கொள்ள என்ன கொடுப்பார்கள்? இந்த மார்கழி மாதக் குளிர் உடம்பை இப்படிக் குலுக்கி எடுக்கிறதே! அப்பா என்னத்தைப் போர்த்திக் கொள்ளுவார்?—இவ்வாறெல்லாம் அவளுடைய சிந்தனை ஓடிக் கொண்டிருந்தது. "சாந்தினி; நீ ரொம்ப ரொம்பப் படிக்கிறாயே; உனக்கு எல்லாம் தெரிந்திருக்குமே; அப்பாவுக்குச் சிறையிலே போர்த்திக் கொள்ளக் கம்பளி கொடுப்பார்களா?" என்று கேட்டாள்.

"நீ இன்னுமா விழித்துக் கொண்டிருக்கிறாய்? அதிசயமாயிருக்கே, என்னம்மா உனக்கு?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் சாந்தினி. இந்த சமயத்தில் மணி பத்தரை ஆகிவிட்டதால் மின்சார விளக்கு 'டப்' பென்று அணைந்தது. தேவகியை விளக்கேற்றித் தரும்படி வேண்டினாள் சாந்தினி. தேவகி விளக் கேற்றித் தந்து விட்டு மறுபடியும் தன் சந்தேகத்தைக் கேட்டாள். பாவம்; தேவகியின் நிலைமையை நினைத்த போது சாந்தினிக்கு மிகவும் வருத்தமாயிருந்தது.

"தேவகி! கவலைப்படாதே; அப்பாவுக்குச் சிறையிலே கீழுக்குப் போட்டுக்கொள்ள சணல் பாயும், மேலுக்குப் போர்த்திக் கொள்ளக் கம்பளிப் போர்வையும் கொடுப்பார்கள்" என்று கூறினாள் சாந்தினி.

தேவகிக்குச் சாந்தினியினுடையபதில் அவ்வளவாகத் திருப்தியை அளிக்க வில்லை. தான் கவலைப் படாமல் இருக்க வேண்டு மென்பதற்காகவே சாந்தினி அவ்வாறு பதில் சொல்லுகிறாள் என்று தேவகிக்குத் தோன்றியது. எனவே, மேலும் அவள் தேவகியை விடாமல் சில கேள்விகள் கேட்டாள்:

"சாந்தினி, உனக்கு இது எப்படித் தெரியும்?"

சாந்தினி அப்போது ஒரு தமிழ் நாவலைப் படித்துக் கொண்டிருந்தாள். மேற்படி நாவலில் வரும் கதாநாயகன் இருபத்தாறும் அத்தியாயத்தில் தன்னுடைய சிறைவாச அனுபவத்தைப் பற்றித் தன்னுடைய காதலிக்கு ஒரு கடிதம் எழுதுகிறான். அந்தக் கடிதத்தில் சிறைக் கைதிகளுக்குக் கம்பளியும், சணல் பாயும் கொடுக்கும் விவரமும் எழுதியிருந்தது. சாந்தினி அப்போது தான் அந்த விஷயத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். தேவகி மேலே கண்ட கேள்வியைக் கேட்டதும் சட்டென்று பதில் கூறினாள். தேவகியின் சந்தேகம் தெளியும் பொருட்டு மேற்படி இருபத்தாறும் அத்தியாயத்தைத், தானே ஒரு தடவை படித்துக் காண்பித்தாள். தேவகிக்கு சாந்தினி படித்ததைக் கேட்டதும் இன்னொரு சந்தேகம் உதித்தது. "சாந்தினி! அப்படியானால் சிறையிலே இருப்பவர்களுக்கு வெளியிலே இருப்பவர்கள் கடிதம் எழுதலாமா?" என்று கேட்டாள்.

"ஓ, பேஷாக எழுதலாம்" என்று பதில் கூறினாள் சாந்தினி.

தேவகி சாந்தினியைப் பார்த்துக் கெஞ்சினாள்: "சாந்தினி! அப்படியானால் நான் இங்கே இருப்பதாக என் அப்பாவுக்கு ஒரு கடிதம் எழுதிப் போடுவோமா?" என்று கேட்டாள். "போடலாம்; ஆனால், அது உன் அப்பாவுக்குப் போய்ச் சேர வேண்டுமே," என்று சந்தேகத்துடன் கூறினாள் சாந்தினி.


சாந்தினி ஏன் சந்தேகப்படுகிறாள் என்பதைத் தெரிந்துகொள்ள தேவகி விரும்பினாள். சாந்தினி தேவகிக்கு விஷயத்தை விளக்கினாள். "தேவகி! இந்த வருஷத்தில் தேசத்தில் எங்கு பார்த்தாலும் காங்கிரஸ்காரர்கள் தண்டவாளத்தைப் பெயர்த்தும், தந்திக் கம்பங்களை அறுத்தும் பயங்கர இயக்கம் நடத்தினார்களல்லவா? அதன் காரணமாக இந்த ஜில்லாவில் ஆயிரத்துக்கு மேல்பட்ட கைதிகள் சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். பயங்கர இயக்கம் நடத்தியவர்கள் என்பதற்காக அவர்களைக் கடுமையான பாதுகாப்பில் வைத்திருக்கிறார்கள். கடிதப் போக்குவரத்தோ, நேரில் பார்த்துப் பேசவோ ஒன்றுக்கும் அனுமதிப்பதில்லை. காங்கிரஸ்காரர்கள் உள்ள மத்திய சிறையில்தான் உன்னுடைய அப்பாவும் வைக்கப்பட்டிருப்பார். உன் அப்பா கிரிமினல் கைதியாக இருந்த போதிலும் அரசியல் கைதிகளைப் போலத்தான் நடத்தப்படுவார். ஆகையால் நீ கடிதம் போட்டாலும் அதைச் சிறை அதிகாரிகள் பத்திரமாக வைத்திருந்து விடுதலை ஆகி வரும்போதுதான் கொடுப்பார்கள்," என்று கூறினாள்.

சாந்தினிக்குச் சிறையைப் பற்றின எல்லா விஷயங்களும் தெரிந்திருந்தது, தேவகிக்கு ஆச்சரியமாக இருந்தது. தானும் அவளைப் போல் ஆங்கிலப் படிப்பு படிக்கவில்லையே என்பதை நினைத்தபோது அவளுக்கு வெட்கமாக இருந்தது.

"சாந்தினி! தினமும் அப்படி என்னத்தைப் படிக்கிறாய்? நீ படிப்பதை எனக்கும் கொஞ்சம் சொல்லேன்" என்று கேட்டாள் தேவகி.

தேவகியின் குழந்தை உள்ளத்தை நினைத்தபோது சாந்தினிக்குச் சிரிப்பாய் வந்தது. பாவம்; சாந்தினி படிக்கும் பாட புத்தகங்களில் இம்மாதிரியான பொது விஷயங்கள் கிடையாது என்பதும், பத்திரிகைகளிலிருந்தும், கதைப் புத்தகங்களிலிருந்துமே அவற்றை அவள் தெரிந்து கொண்டிருக்கிறாள் என்பதும் தேவகிக்குத் தெரியாதல்லவா?





"தேவகி! இம்மாதிரி விஷயங்களெல்லாம் என்னுடைய பாட புத்தகங்களிலே கிடையாது. அந்தக் கர்ம காண்டத்திலே இம்மாதிரியான சுவாரஸ்யமான விஷயங்கள் ஏது? "இதெல்லாம் நான் படிக்கும் நாவல்களில் அல்லவா வருகின்றன" என்று, தான் படிக்கும் நாவல்களைப் பற்றிப் பெருமையுடன் சொல்லிக் கொண்டாள் சாந்தினி.


"அப்படியா, சாந்தினி? அந்தக் கதைகளை எனக்கும் தான் படித்துக் காண்பியேன்" என்று வேண்டிக் கொண்டாள் தேவகி. அன்று முதல் சாந்தினி தான் படிக்கும் நாவல்களின் கதைச் சுருக்கத்தைத் தேவகிக்கும் சொல்லிக் கொண்டிருந்தாள். கொஞ்சம் கொஞ்சமாகச் சாந்தினியின் நாவல் பைத்தியம் தேவகியையும் பிடித்துக் கொண்டது. சாந்தினி ஏன் தினமும் அப்படி விளக்கேற்றி வைத்துக் கொண்டாவது நாவல் படிக்கிறாள் என்ற மர்மம் தேவகிக்கு அப்புறம் தான் விளங்கியது!

சாந்தினிக்கும் தேவகிக்கும் ஏற்பட்ட சிநேகம் நாவல் படிப்பின் மூலம் பன் மடங்காகப் பெருகியது.

இருபது தினங்களுக்கு முன்னால் வெளிவந்த ஒரு பெரிய நாவலை சாந்தினி விலைக்கு வாங்கி வந்திருந்தாள். அந்த அற்புதமான நாவலை, சாந்தினியும் தேவகியும் இரவெல்லாம் கண் விழித்துப் படித்தார்கள். அப்படிப் படித்தும் கூட இருபது அத்தியாயங்களுக்கு மேல் முடிய வில்லை. புத்தகம் மூன்று பாகங்கள் கொண்ட பெரிய பைண்டு புத்தகமாயிருந்தது. அந்தப் புத்தகத்தின் ஆசிரியர் பிரசித்தி பெற்ற எழுத்தாளர். இதற்கு முன்னால் பல நாவல்களை எழுதிப் பெயரும் புகழும் அடைந்தவர். பல்லாயிரக் கணக்கான வாசகர்களின் அன்புக்கும் மரியாதைக்கும் பாத்திரமானவர். அவருடைய நாவல்கள் மட்டும், வெளியான பத்து தினங்களுக்குள் மள மள வென்று தீர்ந்து போவது வழக்கம். 'சந்திரநாத்' என்ற புனை பெயரில் எழுதிக் கொண்டிருந்தார். சந்திரநாத்தை ஒரு தடவை நேரில் பார்க்க வேண்டுமென்றும், தன் கையால் அவருக்கு ஒரு விருந்து வைக்க வேண்டு மென்றும், சாந்தினி அளவிலாத ஆசை கொண்டிருந்தாள். தேவகியினிடம் இரவு நேரங்களில் பேசும்போதெல்லாம் அநேகமாய் சந்திரநாத்தைப் பற்றிய பிரஸ்தாப மில்லாமலிருக்காது.

அன்றிரவு இரண்டு மணியாகியும் சாந்தினி, தேவகிக்கு வெகு நேரம் வரையில் கதை படித்துச் சொல்லிக் கொண்டிருந்தாள். சாந்தினியும் தேவகியின் கட்டிலின்மேல் உட்கார்ந்த வண்ணம் சுவாரஸ்யமாகக் கதை கேட்டுக் கொண்டிருந்தாள். அப்போது அறைக் கதவை வெளியிலிருந்து யாரோ தட்டும் சத்தம் கேட்டு இருவரும் திடுக்கிட்டனர். தேவகி நடுங்கிக் கொண்டே போய்க் கதவைத் திறந்தாள்.

(தொடரும்)




'கணபதி வில்லா' என்ற அந்தப் புதிய வீடு மோகனமான நிலவொளியில் பிரகாசித்து நின்றது. இரவு எட்டு மணியே ஆகியிருந்தும் ஊரடங்கி யிருந்தது. தூரத்தில் சமுத்திரம் பௌர்ணமிச் சந்திரனை நோக்கிப் பொங்கி ஆரவாரம் செய்து கொண்டிருந்தது.

அந்தப் புது வீட்டு மொட்டை மாடியில் முன்னும் பின்னும் உலாவிக் கொண்டிருந்த சகுந்தலையின் மனதிலும் நிம்மதியில்லை. எண்ண அலைகள் அவள் மனதில் பொங்கி எழுந்த வண்ணமாயிருந்தன. அவளுடைய நினைவுகள் நான்கு வருஷம், ஐந்து வருஷம் பின்னேக்கிச் சென்று எதை எதையோ அவள் மனதில் கிளறி விட்டுக் கொண்டிருந்தன.

அன்று மாலை சகுந்தலை கல்லூரியிலிருந்து திரும்பி வந்ததும் வராததுமாக அவளுடைய தந்தை "சக்கு! இந்த வருஷம் உனக்குக் கல்யாணமாகிவிடும் என்று தோன்றுகிறது. ஒரு நல்ல வரன் யதேச்சையாகக் கிடைத்திருக்கிறது. இந்தப் பையனுக்கும் ரமணி என்றுதான் பெயராம்," என்று மலர்ந்த முகத்துடன் கூறினார்.

"இப்பொழுது கல்யாணத்திற்கு என்ன அவசரம், அப்பா? முதலில் படிப்பை முடித்துக் கொள்ள வேண்டாமா?" என்றாள் சகுந்தலை.

"எதெது எந்தெந்த சமயத்தில் நடக்க வேண்டுமென்றிருக்கிறதோ, அப்பொழுது நடந்துதானே தீரவேண்டுமம்மா? இந்த வருஷம் பிராப்தம் இருந்தால் நடந்து விட்டுப் போகட்டுமே! மன நிம்மதிக்காகத்தானே நீ படிக்கிறாய்? இடையில் படிப்பை நிறுத்தி விடுவதால் ஒன்றும் குறைந்து போகப்போவதில்லையே..." என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

"அதற்குச் சொல்லவில்லையப்பா. என்னுடன் படிப்பவர்களுக்கெல்லாம் என்ன பதில் சொல்வது என்றுதான் கவலைப் படுகிறேன்" என்று கூறினாள் சகுந்தலை.

"கல்யாணம் செய்து கொண்டு, வேண்டுமானால் படியேன். இன்னும் இரண்டு வருஷம் தானே?" என்றார் அவள் தந்தை.

சகுந்தலைக்கு வரன் வந்தது அது முதல் தடவையல்ல. ஐந்து வருஷங்களுக்கு முன் அவளுக்கு விவாகம் நடப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆயினும், ஏதோ சில காரணங்களினால் அந்தக் கல்யாணம் நின்று போயிற்று.

அதற்குப் பிறகு அவளுக்கு வேறுவரன் பார்க்கும் உற்சாகமே அந்த வீட்டினருக்கு உண்டாகவில்லை. 'அதது நடக்க வேண்டிய சமயத்தில் தானாக நடந்து விட்டுப் போகும்' என்ற வேதாந்த மனப்பான்மை ஏற்பட்டிருந்தது அவளுடைய பெற்றோருக்கு. ஆகவே, தம்முடைய ஒரே அருமையான பெண்ணை மேலும் படிக்க வைத்துவிட்டு, புது வீடு கட்டுவதில் முனைந்தார் சகுந்தலையின் தகப்பனார்.

சகுந்தலையின் தந்தை ராமய்யர் ஒரு பிரபல ஆங்கிலக் கம்பெனியில் மானேஜராயிருந்து மாதம் மூந்நூறு ரூபாய் சம்பாதித்துக் கொண்டிருந்தார். அவருடைய மனைவி லட்சுமி அம்மாளும் நல்ல குடும்பத்திலிருந்து வந்தவள்.

தம்பதிகள் ஊருக்கே லட்சிய வாழ்க்கை நடத்தினார்கள். 'அரக்கோணத்தில் ராமய்யர் வீட்டைப் போலுண்டா?' என்று எல்லோரும் பெருமைப் பட்டுக் கொள்ளும்படி அவர்களுடைய வாழ்க்கைச் சக்கரம் சுழன்று வந்தது.

அவர்களுடைய ஒரே குழந்தைதான் சகுந்தலை. பெண் பிறந்த அதே சமயத்தில் லட்சுமி அம்மாளுக்கு துரதிர்ஷ்ட வசமாய் ஆஸ்துமா நோய் வந்து விட்டது.

ராமய்யர் தம்மனைவியை மிகவும் ஜாக்கிரதையாகக் கவனித்து வந்தார். ஆளோடு போகும் வியாதியல்லவா ஆஸ்துமா? ஆகவே, வைத்தியத்திற்கு ராமய்யர் செய்த செலவு தர்மச் செலவாகத்தான் இருந்தது.

சகுந்தலை செல்வமாக வளர்ந்தாள். நாளடைவில் தன் பெற்றோருக்கு ஏற்ற மகளாய் விளங்கினாள். பணம் புரளுகிறதே என்று கர்வப் பட்டவர் அந்த வீட்டில் ஒருவரும் கிடையாது. வீட்டுக் காரியங்களை அவர்களேதான் செய்து கொண்டார்கள். லட்சுமி அம்மாளுக்கு உடம்புக்கு வந்தவுடன் ஒத்தாசைக்கு ஒரு அத்தைக் கிழவி வந்து சேர்ந்தாள். ராமய்யர் தன் பிதிரார்ஜிதக் கடனை முதலில் தீர்த்தார். பிறகு பணம் சிறுகச் சிறுகச் சேர்த்தார்.

பெண்ணை நல்ல இடத்தில் வாழ்க்கைப் படுத்த வேண்டும்; சென்னையில் வீடு கட்டி அதில் வாழ வேண்டும் என்ற யோசனை அவருக்கிருந்தது. ஆபீஸ் விஷயமாக அடிக்கடி சென்னைக்குச் செல்லும். அவருக்குச் சென்னையில் வாழ்க்கைநடத்த வேண்டுமென்னும் பலமான ஆசை இருந்தது. வேலையை விட்டு விலகிக் கொண்டு, சொந்த வீட்டில் நகர வாழ்க்கையை நிம்மதியாக அனுபவிக்க அவர் திட்டம் போட்டிருந்தார். ஆகவே, தம்முடைய எண்ணங்களை நிறைவேற்றும் வேலைகளில் ஈடுபட்டார்.

* * *

சகுந்தலை அந்த வருஷம் நான்காவது பாரம் பரீட்சை எழுதியிருந்தாள். அவளுடைய தகப்பனார் வீடு கட்டுவதற்காக மாம்பலத்தில் மனை வாங்கி யிருந்தார். அவளுடைய அம்மாவுக்கு நோய் சிறிது கடுமையாக இருந்தது.

சகுந்தலை படிப்பை நிறுத்திக் கொள்ள விரும்பினாள். தாய் தனக்கு ஏதாவது நேருமுன் பெண் கழுத்தில் மூன்று முடிகள் விழுவதைக் காண விரும்பினாள். தந்தையும் பெண்ணின் விவாகத்தை முடித்தால், மிஞ்சியதில் வீடுகட்ட ஏற்பாடு செய்யலாமே என்று எண்ணினார்.

எல்லாவற்றையும் உத்தேசித்து, வரன் வேட்டையில் இறங்கினார். தம்மிடமுள்ள பணத்தை மட்டும் கொண்டு, 'குழந்தைக்கு நல்ல இடம் தேடி விடலாம்' என்று எண்ணியிருந்த அவருக்கு ஏமாற்றமே உண்டாயிற்று. வரன் அகப்படுவது மிகவும் சிரமமாயிருந்தது.

அவருடைய அந்தஸ்துக்குத் தாம் ஏற்றவர்களல்ல என்று சிலர் ஒதுங்கினர். வேறுசிலர் தங்கள் அந்தஸ்துக்குப் பெண்ணின் படிப்பு போதாது என்றெண்ணினர். இவர்கள் ராமய்யரை விடப் பணத்தில் பெரியவர்கள். சிலர் தாயின்வியாதி பெண்ணுக்கும் இருக்கலாம் என்ற ஹேஷ்யத்தின் பேரில் பெண் பார்க்கவும் அஞ்சினர். இப்படி அநேக வரன்கள் போய் விட்டன.

ராமய்யர் விழித்துக் கொண்டார். அதன் காரணமாக ஒரு நல்ல வரன் வரத்தான் செய்தது. அவருக்குத் தெரிந்த ஆபீஸர் ஒருவர் மூலம் மேற்படி வரனின் விலாசம் ராமய்யருக்குக் கிடைத்தது.

வரனுக்குத் தாய் தந்தை கிடையாது. ஒரு சகோதரி மட்டும் இருந்தாள். அவளும், அவளுடைய கணவரும் அவர்களுடைய குழந்தைகளும் கிராமத்தில் இருந்து கொண்டு அந்தப் பையனுடைய பிதிரார்ஜிதமான நிலத்தைப் பார்த்துவந்தார்கள். பையன் திருச்சியிலே காலேஜில் படித்துக் கொண்டிருந்தான்.

பையனுக்குக் கடிதம் எழுதி, அவனையும் அழைத்துக் கொண்டு வருவதாக அவர்கள் சொன்னார்கள். ராமய்யரும் ஊர் திரும்பி, அவர்களை வரவேற்கத் தயாரானார்.

சொன்னபடி அவர்கள் ஒரு குறிப்பிட்ட நாளில் வந்தார்கள். பையன், அவனுடைய தமக்கை, அவளுடைய கைக்குழந்தை மூன்று பேர்தான். அவள்தான் சகுந்தலையைப் பார்த்தாள்.

சகுந்தலையை அவளுக்குப் பிடித்திருந்தது. சகுந்தலை தயாரித்த காப்பியைக் குடித்துவிட்டு அவளைப் பெரிதும் பாராட்டினாள். இவ்வளவு பணக்கார வீட்டுப் பெண்ணும் பதவிசாகக் காரியங்களைச் செய்கிறாளே என்று அதிசயப் பட்டாள். அதிகம் படித்துவிட்டுக் கர்வம் கொண்டு, வெளி வேஷம் போடும் பெண்களைப் போல அவள் இல்லாததைக் குறித்து மகிழ்ந்தாள்.

இவ்வளவுக்கும் பையன் சகுந்தலையை ஒரே ஒரு முறைதான் பார்த்தான். அதிலிருந்து அவனுடைய மனதை அறிந்து கொள்ள முடியவில்லை. அவன் சம்மதத்தைப் பற்றி 'அவன் பாடு; அவன் அக்கா பாடு' என்றிருந்தார் ராமய்யர்.

சகுந்தலைக்கோ பையனை ரொம்பவும் பிடித்து விட்டது. அவன் அழகாகத்தான் இருந்தான்.

விவாகப் பேச்சு தொடர்ந்து நடந்தது. எல்லா விஷயங்களிலும் ராமய்யர் அனுசரணையாகவே நடந்து கொண்டார். அவருக்கு இருந்ததெல்லாம் ஒரே பெண்; அவளுக்காக எதைத்தான் செய்யமாட்டார்? ஏற்பாடுகள் திருப்திகரமாக முடிந்தன. மனசுக்குத் திருப்தி ஏற்பட்ட பிறகு ஜாதகம் கூடப் பார்க்க வேண்டாமென்று பையனுடைய அக்கா கூறிவிட்டாள். சம்பிரதாயத்துக்காக ராமய்யர் அவளிடம் சகுந்தலையின் ஜாதகமொன்றைக் கொடுத்து வைத்தார்.

அவர்கள் ஊருக்குப் போய் முகூர்த்த தினத்தை நிச்சயித்து எழுதுவதாகச் சொன்னார்கள். ராமய்யரும் அவர் மனைவியும், "எப்படியும் சீக்கிரமாக முகூர்த்தத்தை வைத்துக் கொள்ளுங்கள்" என்று வேண்டி வேண்டிச் சொல்லி அனுப்பினார்கள்.

தனியாக வந்த பையன் சகுந்தலையின் உள்ளத்தையும் கூடவே கொண்டு போய் விட்டான்!

அவர்கள் ஊருக்குப் போய் ஒரு வாரத்திற்குப் பின் அவர்களிடமிருந்து கடிதம் வந்தது. பையனின் அத்திம்பேர் எழுதி யிருந்தார். முகூர்த்தத்தை உடனே வைத்துக்கொள்வது சாத்தியமில்லை என்றும், சில அசந்தர்ப்பங்களினால் கல்யாணத்தை இன்னும் ஒரு மாத காலத்திற்கு நடத்துவதற்கில்லை என்றும் எழுதப்பட்டிருந்தது. ஒரு மாதத்தில் தாமே நேரில் வருவதாகவும், அது வரை வேறு ஒன்றும் செய்ய வேண்டாம் என்றும் அவர் எழுதியிருந்தார்.

ராமய்யர் ஒரு மாதம் பொறுத்திருந்தார். சகுந்தலை ஒரு யுகம்காத்



"எழுத்தாளர் சாம்புவின் நடை எனக்கு சுத்தமா பிடிக்கவில்லை."
"எனக்குக் கூடத்தானுங்க! காலை இழுத்து இழுத்து விகாரமா நடக்கிறாரு...!"

திருந்தாள். அதாவது, அவளுக்கு ஒரு மாதம் போவது ஒரு யுகமாகத் தோன்றியது. எழுதியபடி அவர் வந்து சேர்ந்தார். நிலத்தில் சில தகராறுகள் இருந்ததாகவும் அவை தீர்ந்து விட்டதாகவும் விவரமாகச் சொன்னார்.

இருவரும் கலந்து, தேதி குறிப்பிட்டார்கள். ஆகஸ்ட் இருபது என்று முடிவு செய்து, கல்யாணப் பத்திரிகையை அச்சடிக்கக் கொடுத்து விட்டு அவர் ஊருக்குச் சென்றார்.

விவாகப் பத்திரிகையிலிருந்த 'ரமணி என்னும் வெங்கட ரமணிக்கு' என்ற வரியைச் சகுந்தலை பல தடவைகள் படித்தாள். அவளுடைய மனதைச் சுற்றி அந்தப் பெயர் வட்டமிட்டது. அவனுடைய உருவமோ அவளுடைய மனதில் நிலைபெற்று விட்டது.

பதினைந்து வயது நிரம்பாத சகுந்தலையின் மனம் அப்பொழுதே பிற்கால வாழ்க்கையைப் பற்றிக் கோட்டை கட்ட ஆரம்பித்து விட்டது. தன் கணவனுடன் தான் நடத்தப்போகும் இல்லற வாழ்க்கை எப்படி அமையப் போகிறது என்பதைப் பற்றி அவள் கற்பனை செய்யத் தொடங்கி விட்டாள். லட்சிய வாழ்க்கை வாழ வேண்டுமென்று அவள் விரும்பினாள். அந்த இளம் உள்ளத்தில் இன்னும் எத்தனையோ எண்ணங்கள் உதித்தன.

விநாடிகளும், நிமிஷங்களும், மணிகளும், வேளைகளும், நாட்களும் கழிந்து சென்றன. ஆகஸ்ட் ஒன்பது வரை தேதித்தாள்கள் கிழிந்து விட்டன.

அந்த ஆகஸ்டில்தான் நாட்டில் பெரும் போராட்டம் தொடங்கியது. சகுந்தலையின் மனதில் ஆகஸ்ட் ஒன்பதுக்கு முன்பாகவே தொடங்கிய போராட்டத்தின் வேகமோ இன்னும் அதிகரித்தது.

ஆகஸ்ட் பத்து, பதினொன்று, பன்னிரண்டு தேதிகள் போய்விட்டன. பதின்மூன்றாம் தேதி உதயமாயிற்று. விவாகத்திற்கு இன்னும் ஒரே ஒரு வாரம்தான் இருந்தது. துரதிருஷ்டம் பிடித்த எண்ணான பதின்மூன்று, சகுந்தலை விஷயத்திலும் சதி செய்து விட்டது.

அன்றையத்தபாலில் ஒருசோகக் கடிதம் வந்து சேர்ந்தது. ரமணியின் தமக்கை புருஷர்தான் எழுதியிருந்தார். அதில் முக்கிய விஷயம் அவருடைய மனைவி திடீரென்று காலமாகி விட்டாள் என்பதும் அதனால் விவாகம் நின்று போக வேண்டியிருக்கிறது என்பதும் தான். கடிதம் இந்தத் துக்க சமாசாரத்துடன் நிற்காமல் சகுந்தலையின் ஜாதக விசேஷத்தையும் குற்றம் சாட்டியிருந்தது. அவளுடைய ஜாதக விசேஷம்தான் தம்முடைய மனைவி இறக்க நேர்ந்தது என்றும், ரமணி எங்கேயோ காணாமற் போய்விட்டானென்றும் அவர் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். ஜாதகப் பொருத்தம் பார்க்காமல் முகூர்த்த நாள் நிச்சயித்தது தமது முட்டாள்தனம் என்றும், அதனுடைய பலனைத் தாம் அனுபவித்துக் கொண்டிருப்பதாகவும் அவர் கடிதத்தை முடித்திருந்தார்.

சகுந்தலையின் மனோராஜ்யம், சில தினங்களாக அவள் அருமையாக நிர்மாணித்த ராஜ்யம்—அந்த க்ஷணமே சிதைந்து போயிற்று. ராமய்யர் தம்முடைய ஜாதக விசேஷத்தை நொந்து கொண்டார். பெண்ணின் கல்யாண விஷயம் இப்படி முடிந்ததே என்று அங்கலாய்த்துக் கொண்டார்.

சகுந்தலையின் தாயார் அடைந்த துயரத்தைப் பற்றிக் கூற வேண்டியதில்லை. ஆஸ்துமாவுடன் மனநோயும் சேர்ந்து அவளைப் பிடித்துக் கொண்டது.

அதற்கு முன்பாகவே கல்யாணப் பத்திரிகைகள் எல்லோருக்கும் அனுப்பப் பட்டிருந்தன. அவர்களுக்கெல்லாம் என்ன சமாதானம் சொல்வது? என்ன தான் சொன்னாலும் நம்புவார்களா? உள்ளுக்குள் ஏதோ நடந்திருக்கிறது என்றல்லவா சந்தேகப் படுவார்கள்?...வேறு இடத்தில் வரன் தேடுவதற்கும் இந்தச் சம்பவம் இடைஞ்சலாக அல்லவா இருக்கும்?...மேற்படி எண்ணங்கள் லட்சுமி அம்மாளை வருத்தின. ராமய்யரும் விசாரப்பட்டார்.

விசாரத்தினிடையே வேதாந்த எண்ணங்களும் தோன்றின. "எதற்கும் காலம் வர வேண்டும்? அது வந்து விட்டால் தானாகவே எதுவும் நடந்து விட்டுப் போகும்" என்று நினைத்து அவர்கள் சகுந்தலையைப் பள்ளிக்கூடத்தில் சேரச் சொன்னார்கள்.

சகுந்தலையும் ஐந்தாவது பாரத்தில் சேர்ந்தாள். அவளுக்கு மிகவும் சமீபத்திலிருந்த மண வாழ்க்கை அவளை விட்டு வெகுதூரத்தில், கண்ணுக் கெட்டாத தூரத்துக்குப் போய்விட்டது. அதைப் பற்றிய நினைவை அறவே மறந்து படிப்பில் ஊக்கம் செலுத்தினாள் சகுந்தலை.

ராமய்யரும் தாம் வாங்கிய மனையில் வீடு கட்டத் தொடங்கினார். நாட்கள் பறந்தன. கட்டடம் உயர்ந்து கொண்டே சென்றது.

☆ ☆ ☆

ஒரு பிரெஞ்சுத் தொழிலாளி முதலாளித்துவத்தை வெறுத்தான். பொது உடமைக் கூட்டங்களுக்குப் போவது அவனுடைய வழக்கம். அவனுடைய எஜமானருக்குத் தம் வேலைக்காரனுடைய போக்கு பிடிக்காவிட்டாலும், சகித்து வந்தார்.

ஒரு நாள் வேலைக்காரன் எஜமானரிடம் வந்து, "நான் இனிமேல் பொது உடமைக் கட்சியின் கூட்டங்களுக்குப் போகப் போவதில்லை" என்றான்.

"ஏன் அப்படி?" என்று கேட்டார். வேலைக்காரன் பதில் சொன்னான்:

"சென்ற நடவை நடந்த கூட்டத்தின் போது ஒரு உண்மை தெரிந்தது. தேசத்திலுள்ள செல்வத்தை தேச மக்களிடையே சரி சமமாகப் பங்கிட்டால் ஒவ்வொருவருக்கும் இரண்டாயிரம் பிராங்குகள் கிடைக்குமாம்" என்று கூறினான்.

எஜமானர்: "அதற்காக?"

"என்னிடம் ஐந்தாயிரம் பிராங்குகள் அல்லவா இருக்கின்றன?" என்றான் அந்தப் பொது உடமை வாதி!



ஐந்து வருஷம் கழிந்தது. ராமய்யர் கம்பெனி வேலையிலிருந்து விலகிக்கொண்டு, சென்னையில் சொந்த வீட்டில் குடி யேறிவிட்டார். அவர்கள் சென்னையில் குடியேறி இரண்டு வருஷங்கள் ஆகி விட்டன.

* * *

தனக்கு மறுபடியும் வரன் வந்திருக்கிறது என்று கேள்விப் பட்ட சகுந்தலைக்கு மறந்துபோன பழைய சம்பவங்கள் யாவும் நினைவுக்கு வந்தன. 'இந்த வரனின் பெயரும் ரமணியாமே! முன் தடவை போலவே, இந்தச் சந்தர்ப்பமும் நழுவிப் போகுமோ?...... போனால் போகட்டும். அதைப் பற்றி நான் அதிகமாகக் கவலைப் படப் போவதில்லை' என்று அவள் எண்ணினாள்.

அவளுடைய தந்தை கூறின செய்தி அவள் உள்ளத்தில் முன் தடவையைப் போல் எந்தவிதக் கிளர்ச்சியையும் உண்டு பண்ணவில்லை.. 'தனக்கு விவாகம் நடந்தாலும் நடக்கலாம்' என்னும் விஷயத்தில் அவள் உற்சாகம் கொள்ளவில்லை. அந்த இளம் உள்ளத்தில்—அந்தப் பிள்ளைப் பிராயத்தில்—அவள் மனதில் மண வாழ்க்கையைப் பற்றிக் கிளைத்தெழுந்த பசுமையான எண்ணங்கள் கருகி மடிந்து போனபின், மறுபடியும் அவற்றுக்குத் தன் மனதில் இடம் தர அவள் விரும்பவில்லை. யதேச்சையாக மனதினால் ரமணியை வரித்த அவளுக்கு, அதே இடத்தில் வேறொருவனை வைப்பது சற்று கடினமாகத்தான் இருந்தது.

ராமய்யர் தன்னுடைய மனைவியிடம் கூறிக் கொண்டிருந்த வார்த்தைகள் அவள் காதுகளில் விழுந்தன. "லக்ஷ்மி! இந்தத் தடவை நிச்சயம் கல்யாணம் நடக்கும். நான் சொல்கிறேன், பார்! ...அதோ கோவில் மணிகூட அடிக்கிறது" என்று கூறிக் கொண்டிருந்தார்.

அதே சமயத்தில், வாசல் கதவை யாரோ தடதட வென்று இடித்த சப்தம் கேட்டது. சகுந்தலை திடுக்கிட்டெழுந்து, மாடியிலிருந்தவாறு கீழே நோக்கினாள். பால் போன்ற நிலவொளியில், கதவருகே நின்றிருந்த இரண்டு வாலிபர்களையும் நோக்கினாள். அவளுடைய கண்களும், முகமும் ஆச்சரியத்தினாலும், மகிழ்ச்சியினாலும் மலர்ந்தன.

[அடுத்த இதழில் முடியும்]


ஹாஸ்யச் சுரங்கம்

ஸ்ரீ ரா. பார்த்தசாரதியின் (பாரகன்)
ஹாஸ்யக் களஞ்சியம்

விலை ரூ. 2.8.0

கண்ணன்
தமிழ்ப் பண்ணை தியாகராய நகர் சென்னை 17


GUIDES AS LIGHT & GUARDS AS FORT
MIDLAND INSURANCE CO. LTD.

மிட்லண்டு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
தலைமை ஆபீஸ்: 13-14, செகண்டு லைன் பீச், சென்னை

டைரக்டர்கள்:
ஸ்ரீ. கே. வெங்கடசாமி நாயுடு பி.ஏ., பி.எல்., டெப்டி பிரசிடெண்ட், மெட்ராஸ் லெஜிஸ்லேடிவ் அசெம்பிளி
ஸ்ரீ. எம். சத்திய நாராயணா செக்ரடரி, இந்துஸ்தானி பிரசாரசபா, மதராஸ்
ஸ்ரீ. சி. சுப்பிரமணியம் பி. ஏ., பி. எல்., கோயம்புத்தூர், மெம்பர் கான்ஸ்டிட்யூயன்ட் அசெம்பிளி
ஸ்ரீ. ஆர். ரவை மாணிக்க முதலியார், ப்ரொப்ரைட்டர், ரவை அண்டு சன்ஸ், மதராஸ்
ஸ்ரீ. ஏ. வி. ராகவ ராவ் எம். எஸ். சி., பி. ஈ., பெஜவாடா
டைரக்டர், தி ஜெயபூர் ஷுகர் கம்பெனி லிட்,
தி ஜெயபூர் மைனிங்சின்டிகேட் லிட்.

இக்கம்பெனியில் நீங்கள் ஒரு பாலிசி எடுப்பதும், அல்லது கம்பெனியின் பிரதிநிதியாக இருப்பதும் உங்கட்கு நன்மையையே பயக்கும். விவரங்கட்கு எழுதவும்.

அ. வெ. தியாகராஜா, ஜெனரல் மானேஜர்



# ரயில்வே ஸ்டேஷன்

☆ சுவாமி ☆

"கோவில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம்" என்பது ஔவை காலத்திய பழமொழி. அந்தப் பாட்டி காலத்தில் ரயில் ஓடாமல் இருந்ததால் கோவில் இடம் பெற்றது. 'ரயில்வே ஸ்டேஷன் இல்லாத ஊரில் ராத்திரி கூடத் தங்க வேண்டாம்' என்பது என் புதுமொழி.



நான் குடியிருக்கும் ஊரில் கோவில், ரயில்வே ஸ்டேஷன் இரண்டுமிருப்பது கோவில் செய்த புண்ணியமோ, அல்லது ரயில்வேக்காரர்கள் செய்த புண்ணியமோ தெரியவில்லை.

சில சமயங்களில் ரயில் கிடைக்காவிட்டால் அந்தத் தண்டவாளத்தில், கீழே விழுந்துவிடாமல் நான் ஓடுவேன். காலையிலும்மாலையிலும் ஸ்டேஷன் போய்த் திரும்புவேன்.

ஸ்டேஷனில் நுழைந்தவுடன், "நீங்கள் காசிக்குப் போகவில்லையா?" என்ற போர்டு யாரையும் வரவேற்கும். எப்போதோ ஒட்டிய நோட்டீஸ் இன்னும் கிழிக்கப்படவில்லை யென்றால் எங்கள் ஊரின் நம்பிக்கைத் தன்மையையும் ஸ்டேஷனின் வயதையும் நீங்கள் தாராளமாக ஊகித்துக் கொள்ளலாம். பக்கத்தில் "அவசியமானல் "பிரயாணம் செய்" என்ற நோட்டீஸைப் பார்த்து எனக்குச் சிரிப்பு வருவது வழக்கம். எங்கள் ஊரில் ரயில் பிரயாணம் செய்பவர்களுடைய எண்ணிக்கை நாள் ஒன்றுக்கு ஐம்பது அல்லது ஐம்பத்தொன்று என்பது ரயில்வே போர்டாரின் புள்ளி விவரக் கணக்கு. ஸ்டேஷனில் மற்ருெரு இடத்தில் "டிக்கட்டில் பிரயாணம் செய்யாதீர்கள்" என்பதைப் பார்த்து பிரமிப்பு அடையாதீர்கள்! கூர்ந்து கவனித்தால் 'ப' என்ற எழுத்தை யாரோ ஒரு வாண்டுப் பயல் அழித்திருப்பது தெரியவரும். பையன் ஹாஸ்யத்தோடு மட்டுமல்லாமல், உலக நிலையையும் நன்ருக உணர்ந்திருக்கிருன். டிக்கட் எடுத்துப் பிரயாணம் செய்ய முடியாது என்பதை அவன் சுருங்கச் சொல்லி, ரயில்வே போர்டாரின் செலவிலேயே, விளங்க வைத்திருக்கிருன்!

இரவு பகல் எந்த நேரத்திலும் டிக்கட் கொடுக்கப்படும் என்று எழுதியிருந்த பலகையின் கீழ் உள்ள ஜன்னல், இரவு பகல் எந்த நேரத்திலும் அடைத்தே இருக்கும். டிக்கட் கொடுப்பது, பணம் வாங்குவது எல்லாம் மற்ருெரு ஜன்னல் வழியாகவே நடைபெறும். ஸ்டேஷன் மாஸ்டர், புக்கிங் கிளார்க், பார்சல் கிளார்க், சாவி கொடுப்பவர், வாங்குபவர் எல்லாம் ஒருவரேஎன்பதை நான் சொல்லி வாசகர்களுக்கு அறிவிக்க வேண்டியதில்லை!





சாரை சாரையாக டிக்கட் எடுப்பதற்காகக் கையில்பணத்துடனும், மடியில் கையுடனும் நின்று கொண்டிருப்பார்கள். அறைக்குள்ளே 'சட்...சட்'என்று சப்தம் கேட்கும். கிராமத்து ஜனங்கள் அவர் டிக்கட் அச்சடிக்கிருர் என்று நினைத்துக் கொள்வார்கள். மறுபுறம் ஜன்னல் வழியாகப் பார்த்தால் ஒரு கையினுல் ஏதோ புஸ்தகத்தில் எழுதிக் கொண்டிருப்பார். மேஜையின் மேலுள்ள வேர்க்கடலை இத்யாதிப் பொருள்களை மற்ருெரு கை உடைத்துக் கொண்டிருக்கும்! வண்டி வர கால் மணி நேரத்திற்கு முன்பாக அந்த ஜன்னலைத் திறப்பார். பணம் ஒரு கையில், டிக்கட் மற்ருெரு கையில் மீதம் ரூபாய்கள் கொடுப்பது எல்லாம் சரசர வென்று நடந்தேறும். பிச்சைக்காரர்களுக்கு அலட்சியமாக வீசும் காசைப் போல டிக்கட் வந்து விழும். சந்தேகம் வந்தால் டிக்கட் வாங்குபவர்கள் எவ்வளவு குனிந்து கொண்டு உள்ளே பார்த்தாலும் டிக்கட் கொடுப்பவரின் முகம் தெரியாது! ஐந்து ரூபாய் பத்து ரூபாய்களை வாங்கிக்கொண்டு துளிபோல டிக்கட் கொடுப்பவர்களின் முகத்திலேயே முழிக்கக் கூடாது என்று ஜனங்களின் நன்மையை உத்தேசித்து ரயில்வேக்காரர்கள் முன் யோசனையுடன் இப்படிக் கட்டியிருக்கிருர்கள் என்று நினைக்கிறேன்.

'வருகிற வழி' என்ற வழியின் கதவு எப்போதும் அடைத்தேயிருக்கும். பக்கத்திலுள்ள ஒரு கம்பி நீக்கிவிடப் பட்டிருக்கும். அதுதான் எல்லோரும் வரும் வழி! 'குடிக்கும் தண்ணீரல்ல' என்ற போர்டு போட்டிருக்கும் தொட்டியில் தாகத்தைத்தீர்த்துக்கொள்வார்கள். திரும்பும் போது "குடிக்கும் தண்ணீர்" என்று போட்டிருக்கும் மண் ஜாடியில் கையையும் காலையும் அலம்பிக் கொள்வார்கள் பாயின்ட்ஸ்மேனிடம் கற்ற பாடம் அது.

பாயின்ட்ஸ்மேன் 'சாமி நாலஞ்சு புடலங்காய், ஒரு வீசை கத்திரிக்காய் தான்' என்று பிளாட்பாரத்தில் விழுந்து கிடந்த காய்கறிகளைத் தூக்கிக்கொண்டு வருவான். ரயிலிலிருந்து எறியப்பட்ட பொருள்களை ஒருவரும் கைவைப்பதில்லை. காரணம் அது ஸ்டேஷன் தெய்வங்களுக்கு மாமூலாக வழங்கப்படும் காணிக்கைகள் என்பது அனைவருக்கும் தெரியும்.





# அந்தக் கடிதம்

கே. ஆனந்த தீர்த்தன், பி. ஏ. ஆனர்ஸ்.,

சாந்தாவுக்கு அன்று வேலையே ஓடவில்லை. தலை ரொம்பவும் வலித்தது. ஜுரம் கூட வரும் போலத் தோன்றியது. ஆகவே பேசாமல் 'டைப்ரைட்ட'ரை மூடி வைத்துவிட்டு ஒரு காகிதத்தில் லீவு விண்ணப்பம் எழுதிக் கொண்டு போய் ஆபீஸரின் முன் வைத்தாள். அதைப்பார்த்துவிட்டு அவர் "சரி, நீ உன் விடுதிக்குப் போகலாம். காப்டன் சிவசங்கர் வந்ததும் உன்னிடம் அனுப்புகிறேன்" என்று சொன்னர். அவருக்கு வந்தனம் கூறிவிட்டு சாந்தா தன் அறைக்கு வந்து ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டாள். எதிரே சுவரில் மாட்டப்பட்டிருந்த காலண்டரின் தாள்கள் காற்றில் லேசாகப் படபடத்தன. அதைப் பார்த்த சாந்தா தன்னை யறியாமலே பெருமூச்செறிந்தாள். தான் ராணுவத்தில் சேர்ந்து இன்றைக்குச் சரியாக ஒரு வருஷம் ஆயிற்று என்பதை அது ஞாபக மூட்டியது. அவள் மனக் கடலில் சிந்தனை அலைகள் குமுறத் தொடங்கின.

* • *

எஸ். எஸ். எல். ஸி பரீட்சையில் தேறிய சங்கதி தெரிந்ததும் சாந்தாவின் தகப்பனர் ராமய்யர் அவளுக்கு வரன் தேடும் வேலையில் ஈடுபட்டார். விவாகத்திற்குத் தனக்கு அவசரமில்லை யென்றும் இன்னும் மேலே படிக்க வேண்டுமென்றும் சாந்தா மன்ருடினள். அவள் தகப்பனரும் அவளிஷ்டப்படி அவளைக் கல்லூரியில் சேர்க்க வேண்டு மென்றுதான் ஆசைப்பட்டார். ஆனல், அவருடைய ஆசைக்குக் குறுக்கே நின்றது பணமுடையும் அவர் மனைவி சீதாலக்ஷ்மி அம்மாளுடைய ஆக்ஷேபணையும். ஆகையால் சாந்தாவின் மேல் படிப்பு யோசனை கைவிடப்பட்டது. சாந்தாவும் தன் விதியை நொந்து கொண்டு பெற்ருேர்களுடைய இஷ்டப்படி தாம்பத்ய வாழ்க்கையை மேற்கொள்ளச் சம்மதித்தாள்.

எப்படியும் இந்த வருஷத்திற்குள் கலியாணத்தை முடித்துவிட வேண்டுமென்று நிச்சயம் செய்து கொண்ட ராமய்யர் சாந்தாவின் ஜாதகத்தைக் கையிலெடுத்துக் கொண்டு வரன் வேட்டையில் தீவிரமாக ஈடுபட்டார். இரண்டு மூன்று நல்ல இடங்கள் அகப்பட்டன. ஆனல், சாந்தாவின் ஜாதகத்தில் தோஷம் ஏதோ இருந்ததால் அந்த வரன்கள் நிச்சயமாகவில்லை. மேலும் சாந்தாவின் ஜாதகத்தில் இருந்த தோஷம் அவருடைய கவலையை அதிகரிப்பதற்கும் காரணமாயிற்று.

எவ்வளவோ இடங்களைப் பார்த்துக் கடைசியில் சேலத்திற் கருகிலுள்ள ஒரு கிராமத்திலிருந்து ஒரு வரனை நிச்சயம் செய்து கொண்டு வந்தார். அந்த வரனுடைய ஜாதகத்திலும் சாந்தாவின் ஜாதகத்தில் இருந்ததைப் போல தோஷம் இருப்பதாகவும், மற்றப் பொருத்தங்கள் சரியாயிருப்பதால் யாதொரு தயக்கமுமின்றி விவாகத்தை நடத்தலாமென்று ஜோஸ்யர்கள் சொல்லி விட்டார்கள். வரதக்ஷிணை விஷயமும் சீர்வகை முதலிய பேச்சுக்களும் இருதரப்பினருக்கும் திருப்திகரமாக முடிந்து, முகூர்த்தத்துக்குத் தேதியும் குறிப்பிட்டுவிட்டு ஊர் வந்து சேர்ந்தார் ராமய்யர். 'பெண் பார்க்க' வேண்டியது ஒன்றுதான் பாக்கி யிருந்தது. இரண்டு மூன்று தினங்களில் தாங்கள் பெண் பார்க்க வருவதாகவும், பெண் மனதுக்குப் பிடித்து விட்டால் குறிப்பிட்ட முகூர்த்தத்தில் கலியாணத்தை நடத்தி விடலாமென்றும் பிள்ளையின் தகப்பனர் சொல்லியிருந்தார்.

இரண்டுமூன்றுநாட்களில்பெண் பார்க்க வருவதாகச் சொன்னவர்கள் ஒரு வாரமாகியும் வரவில்லை. யாதொரு தகவலும் தெரியவில்லை. கலியாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதா, வேண்டாமா என்று தத்தளித்துக் கொண்டிருந்தார் ராமய்யர். கடைசியாக வரட்டுமென்று பிள்ளையின் தகப்பனருக்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டுவிட்டு பதிலை எதிர்பார்த்திருந்தார். அவருடைய கடிதத்துக்குக் கிடைத்த பதிலைப் படித்து விட்டு ராமய்யர் மனம் இடிந்து போனர். கடிதத்தில் எழுதியிருந்தது: "உங்கள் கடிதம் கிடைத்தது. உங்களுக்கு ஏமாற்றத்தை அளிப்பதற்காக வருந்துகிறேன். ஆனல், குற்றம் எங்களுடையதல்ல; நாங்கள் பெண் பார்ப்பதற்காகப் புறப்பட எல்லா ஏற்பாடுகளும் செய்து முடித்தோம். அதற்குள்ளாக உங்கள் ஊரிலிருந்து அநாமதேயக் கடிதம் ஒன்று வந்தது. தங்கள் விதவைத் தங்கை யொருவள் சிறு வயதில் ஊரைவிட்டு ஓடிப்போய் விட்டாளாம். இது விஷயம் உண்மையா பொய்யா என்று நான் யோசிக்கப் போவதில்லை. உங்கள் விரோதிகள் யாராவது வேண்டுமென்று செய்திருக்கலாம். இருந்தாலும் நல்ல காரியம் ஆரம்பிக்கும் பொழுது இது மாதிரி ஏற்பட்டது அபசகுனம் என்று கருதுகிறேன். ஆகவே, இந்த விஷயத்தை இத்துடன் விட்டுவிட முடிவு செய்து விட்டேன். தயவு செய்து மன்னிக்கவும்" என்பதுதான்.

கலியாணம் வேறு எந்தக் காரணத்திற்காக நின்று போயிருந்தாலும் ராமய்யர் அவ்வளவு மனமுடைந்து போயிருக்க மாட்டார். ஊரிலிருந்து வந்த கடிதத்தில் தன் தங்கையைப் பற்றிய பிரஸ்தாபத்தைப் படித்ததுதான் அவருக்கு துக்கம் தாங்கவில்லை. இருபது வரு

ஷங்களுக்கு முன் நடந்த அந்த விஷயத்திற்காக இப்பொழுது தன் பெண்ணின் கலியாணம் நின்று போனதை நினைத்த பொழுது ஜனங்களின் மூட நம்பிக்கைக்காகவும், அர்த்தமற்ற சம்பிரதாயங்களுக்காகவும் மிகவும் மனம் நொந்து கொண்டார்.

சாந்தாவுக்கு துக்கமோ சந்தோஷமோ எந்தவிதமான உணர்ச்சியும் உண்டாகவில்லை. முதலிலிருந்தே அவளுக்கு விவாகம் செய்து கொள்ளுவதில் பிரியமிருக்கவில்லை. பெற்றோர்களுடைய கட்டாயத்திற்காக ஒருவாறு சம்மதித்தாள். இப்பொழுதுதான் எதிர் பாராத விதமாக ஏற்பாடான கலியாணமும் நின்று விடவே அவளுக்கு ஒரு விதத்தில் மகிழ்ச்சி உண்டாயிற்று. ஆனால், தன்னால் தனது தகப்பனாருக்கு ஏற்பட்ட மன அதிர்ச்சி அவளுக்குத் துக்கம் தந்தது. இவ்விரு உணர்ச்சிகளுக்கிடையில், தான் இதுவரை கண்டு கேட்டறியாத தன் அத்தை ஒருவள் இருந்ததைப் பற்றியும் அவளால் தன் வாழ்க்கை பாதிக்கப்படுவதையும் நினைத்து, அந்த அத்தையைப் பற்றிய சகல விஷயத்தையும் அறியும் ஆவல் மேலிட்டுத் தவித்து நின்றாள்.

சாந்தாவின் தகப்பனாருக்கு வசந்தா என்றொரு தங்கையிருந்தாளாம். நல்ல அழகுடையவள். யாருடனும் சகஜமாகச் சிரித்துப் பேசி அவர்கள் பிரியத்தைப் பெற்று விடுவாள். வீட்டு வேலைகளிலும் நல்ல கெட்டிக்காரி. ஒரு நிமிஷம் கூட சோம்பேறியாக உட்கார்ந்திராமல் ஓடியாடி வேலை செய்து கொண்டே இருப்பாள். இவ்வளவெல்லாமிருந்தும் ஒரு விஷயத்தில் மாத்திரம் வசந்தா அதிர்ஷ்ட மற்றவளாயிருந்தாள். பழைய காலத்துச் சம்பிரதாயத்தைச் சேர்ந்த அவளது பெற்றோர்கள் அவளுக்கு எட்டாவது வயதிலேயே விவாகம் செய்து வைத்து விட்டார்கள். மகளுடைய மணக் கோலத்தைக் கண்டு களித்த பெற்றோரின் கண்கள் அடுத்த வருஷமே அவளுடைய விதவைக் கோலத்தையும் கண்டு கண்ணீர் சொரிந்தன. ராமய்யருடைய ஆட்சேபணையினால் தான் அவளுக்கு விதவைக்குரிய சடங்குகள் யாதொன்றும் செய்யாமல் விடப்பட்டது. தங்கையின் மேல் அநுதாபமும் உள்ளன்பும் கொண்ட ராமய்யர் அத்துடன் தன் கடமை முடிந்து விட்டதாக நினைக்காமல் பெற்றோருடன் வாதாடி அவர்கள் கோபத்தையும் பொருட்படுத்தாது விதவை வசந்தாவைப் பள்ளியில் சேர்த்துப் படிக்குமாறு செய்தார். பள்ளிப்படிப்பு முடிந்த பிற்பாடு அவளைக் கல்லூரியில் சேர்ப்பதிலும் வெற்றி பெற்றார். வசந்தாவின் கல்லூரிப் படிப்பு முடிந்த பிறகு அவளை நல்லதொரு வரனுக்கு மணமுடித்து மீண்டும் அவளைச் சுமங்கலியாக்கவேண்டும் என்னும் தன் உள்ளக் கிடக்கை யாருக்கும் வெளிப் படுத்தாமல் வைத்திருந்தார்; ஆனால் திடீரென்று வசந்தா யாரும் அறியாவண்ணம் வீட்டை விட்டு மறைந்தாள். எங்கு சென்றாள், என்னவானாள் என்று யாருக்கும் தெரியவில்லை. ராமய்யர் மனம் குன்றிப் போனார்.

ஐந்தாறு மாதங்களுக்குப் பிறகு வசந்தாவிடமிருந்து ஒரு கடிதமும் போட்டோவும் வந்தன. சிங்கப்பூரிலிருந்து எழுதியிருந்தாள். தான் மாதவ ராவ் என்பவருடன் இருப்பதாகவும், சிங்கப்பூரில் அவருக்கு நல்ல வேலை கிடைத்திருப்பதாகவும் தாங்கள் விவாகம் செய்து கொண்ட போட்டோவை அனுப்பியிருப்பதாகவும் தங்களை ஆசிர்வதிக்க வேண்டுமென்றும் எழுதியிருந்தாள்.

இச் சம்பவங்கள் நடந்து ஐந்தாறு வருஷங்களுக்குப் பிறகு ராமய்யருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைதான் சாந்தா. குழந்தையின் புன்னகை தவழும் முகத்தைக் கண்டும் மழலை மொழிகளைக் கேட்டும் ராமய்யர் தன் தங்கையின் நினைவை மறந்தார். அவளிடமிருந்து அதன் பிறகு கடிதமும் வரவில்லை.

அத்தையின் வரலாற்றைக் கேட்ட சாந்தாவுக்கு ஏற்பட்ட உணர்ச்சிகள் இன்னதென்று அவளுக்கே விளங்கவில்லை. ஆனால், அவளுடைய தைரியத்தை மாத்திரம் சாந்தா மெச்சினாள்.

ஒரு நாள் எதையோ தேடுவதற்காகத் தன் தாயாருடையபெட்டியைக் கிளறிய சாந்தாவின் கைகளில் ஒரு பெரிய கவர் அகப்பட்டது. ஆச்சரியத்தால் தூண்டப் பட்டவளாய் அதைப் பிரித்துப் பார்த்தாள். அழகிய தம்பதிகளின் போட்டோ. "அன்புடைய அப்பா, அம்மா, அண்ணா அவர்களுக்கு சமர்ப்பணம் வசந்தா" என்று கீழே சுந்தர எழுத்துக்களில் எழுதப் பெற்றிருந்தது. படத்தைக் கண் இமை கொட்டாது பார்த்தாள். அப்பேர்ப்பட்ட அழகனின் மையலில் சிக்கிய தன் அத்தை ஊர் துறந்து சென்றது, அவளுக்கு அவ்வளவு ஆச்சரியமாகத் தோன்றவில்லை.

கலியாணம் நின்று போன சில நாட்கள் கழித்துச் சாந்தா மீண்டுமொரு முறை தன் மேல் படிப்பைக் குறித்துத் தகப்பனாரிடம் பேச முயன்றாள்.

ராமய்யரின் முகம் சுண்டியது. ஒன்றுமே கோபித்துக் கொள்ளாத அவர், "ஏன் நீயும் காலேஜிலே சேர்ந்து கெட்டுப் போகிறேன் என்கிறாயா? ஒரு அவமானம் போதாதென்று நீ புதுசாக இன்னொன்றைக் கொண்டு வா" என்று இரைந்தார்.

சாந்தாவின் உள்ளம் வெதும்பியது. என்றுமே இரைந்து பேசி அறியாத தன் தகப்பனார் அன்று நடந்துகொண்ட விதத்தால் உள்ளமுடைந்து கண்ணீர் சொரிந்தாள். இப்பேர்ப்பட்ட மன நிலையில் சாந்தா தான் செய்வது சரியா தப்பா என்று யோசிக்காமல் ராணுவத்தில் சேரத் தீர்மானித்து விட்டாள்.

கோயமுத்தூரை விட்டுக் கிளம்பிய புளூ மௌண்டன் எக்ஸ்பிரஸ் சேலத்தைத் தாண்டிய பிறகுதான் சாந்தாவின் மனம் சுருக்கென்றது. தான் செய்தது பெருந்தவறு என்பதை உணர்ந்தாள். ஏற்கெனவே புண்பட்ட உள்ளத்தோடிருக்கும் தன் தகப்பனாருக்குத்தன்னுடைய இச்செயலால் எப்பேர்ப்பட்ட நோவுண்டாகும் என்பதை எண்ணியபோது அவள் மனம் பதை பதைத்தது. சென்னைக்குச் சென்ற பிறகு மறுநாள் மீண்டும் கோயமுத்தூருக்குத் திரும்பி விடலாமா என்று கூட யோசித்தாள். ஆனால் அது அசாத்தியம் என்று நிராசையடைந்தாள்.

அஸ்ஸாம் எல்லையிலுள்ள ராணுவ முகாமுக்கு வந்து சேர்ந்த



சில நாட்களுக்கெல்லாம் காப்டன் சிவசங்கரைக் காணும் சந்தர்ப்பம் நேரிட்டது. அவர் அந்த விடுதிக்கு மெடிகல் ஆபீசராக இருந்தார். நல்ல களை பொருந்திய முகம். சிரித்துச் சிரித்து சகஜமாகப் பழகும் சுபாவம். சாந்தா அவருடைய அழகிற்குத் தன் மனத்தைப் பறி கொடுத்தாள்.

* * *

டக் டக் என்ற 'பூட்ஸ் காலின் சப்தம் கனவுலகிலிருந்து சாந்தாவை எச்சரித்தது. அடுத்த நிமிஷம் காப்டன் சிவசங்கர் உள்ளே நுழைந்தார்.

"வாங்கோ, டாக்டர்!"

"பார்த்தியா, மறுபடியும் ஆரம்பித்து விட்டாயே. டாக்டர் என்னைக் கூப்பிடாதே என்று எத்தனை தடவை சொல்லி யிருக்கிறேன்!"

"பின் எப்படிக் கூப்பிட வேண்டும்? மிஸ்டர் சிவசங்கர் என்று கூப்பிடட்டுமா?"

"அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். வெறுமே சங்கர் என்று கூப்பிட்டால் போதும்."

........"ஒரு விஷயம் மறந்தே போனேன் சாந்தா. அடுத்த வாரம் நான் கோயமுத்தூருக்குப் போகிறேன்."

"கோயமுத்தூருக்கா? அங்கே யார் இருக்கிறார்கள், உங்கள் சொந்தக்காரர்கள்? எனக்குச் சொல்லவே இல்லையே நீங்கள்?" என்றாள் சாந்தா ஆச்சரியம் நிறைந்த குரலில்.

"என்னுடைய மாமா ஒருத்தர் அங்கே இருக்கிறார். நான் அவரைப் பார்த்ததுகூடக் கிடையாது. என் தாயார் சொல்லிக் கேட்டிருக்கிறேன். இறந்து போவதற்கு முன்னால் என்னிடம் தன் தமையனாரைப் பற்றிச் சொல்லி அவரைக் கண்டிப்பாகப் போய்ப் பார்க்கும்படிச் சொல்லி உயிர் நீத்தாள். நானும் எவ்வளவோ நாட்களாகப் போக வேண்டுமென்று திட்டம் போட்டும் ஏதாவது அசந்தர்ப்பத்தினால், போக முடியாமல் போய் விட்டது. இந்த முறை கண்டிப்பாகப் போய்ப் பார்த்து விட்டு வருவதென்று இருக்கிறேன். நீயும் வேண்டுமானால் வருகிறாயா? கோயமுத்தூர் உன் சொந்த ஊர் தானே? எனக்கும் ஒத்தாசையா யிருக்கும்" என்றார் டாக்டர் சிவசங்கர்.

தானும் கோயமுத்தூர் போய் வரலாமா என்று சாந்தா யோசித்தாள். ஆனால் தன் தகப்பனார் தன்னைப்பற்றி என்ன நினைப்பார்? தான் ராணுவத்தில் சேர்ந்த பிற்பாடு எழுதிய இரண்டு மூன்று கடிதங்களுக்கு அவரிடமிருந்து பதிலே வரவில்லை. தன்னுடைய நடத்தை அவரைப் பெரிய துக்க சாகரத்தில் ஆழ்த்தி யிருக்க வேண்டும். ஆறி யிருந்த புண்ணை மீண்டும் கிளறி விட்டது போல் தான் சிவசங்கருடன் போய் அவர் முன் நின்றால் தனக்கு எப்பேர்ப்பட்ட வரவேற்பு கிடைக்குமோ? இவ்வாறெல்லாம் எண்ணியவளால் அவள் மௌனமாக உட்கார்ந்திருந்தாள்.

"என்ன சாந்தா? பலமாக யோசனை செய்கிறாய், என்னுடன் வருவதற்குப் பிரிய மில்லையா?" என்று அன்பு ததும்பக் கேட்டார் டாக்டர் சிவசங்கர்.

"அப்படியல்ல சங்கர், என்னுடைய கதை முழுவதும் நான் ஏற்கெனவே உங்களுக்குச் சொல்லி யிருக்கிறேன். நீங்களே யோசித்துப் பாருங்கள்."

"சாந்தா! நீ என்னை மன்னிக்க வேண்டும். கள்ளங் கபடமில்லாமல் நீ உன் வாழ்க்கை வரலாற்றை என்னிடம் சொன்னாய். அப்பொழுதே நானும் உன்னிடம் என்னுடைய சரிதத்தைச் சொல்லி யிருக்க வேண்டும். ஆனால் என்ன எண்ணத்தினாலோ சொல்லாமல் மறைத்து வைத்தேன். இந்தா இதைப் பார்" என்று கூறி தன்னுடைய தோல்பையைத் திறந்து அதிலிருந்து ஒரு போட்டோவை எடுத்து அவள் கையில் கொடுத்தார் சிவசங்கர்.

சாந்தா படத்தைப் பார்த்து வியப்படைந்தாள். நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. முன்பு ஒரு நாள் தன் தகப்பனாரின் பெட்டியில் தான் பார்த்த அதே அத்தையின் போட்டோ.



"அது இவரிடம் எப்படி வந்தது ? அத்தையின் புருஷரின் சாயலும் சிவசங்கரின் சாயலும் ஏறக்குறைய ஒரே மாதிரி இருக்கிறதே....அப்படியும் இருக்குமா ? சிவசங்கர் என்னுடைய அத்தானு ?.. ..."

" யாருடைய படம் இது ?"

" என் பெற்றோர்கள்."

" ஹா ! அத்தான், என் அத்தான் !" என்றவாறே தன் முகத்தை அவரது மார்பில் புதைத்துக் கொண்டாள் சில நிமிடங்கள் இருவரும் அந்நிலையிலேயே இருந்தனர். பிறகு சங்கர் மெதுவாகத் தன்னை விடுவித்துக் கொண்டு ஓர் கடிதத்தை அவள் கையில் கொடுத்துப் படிக்கும்படி சொன்னார். கடிதத்தில் எழுதி இருந்தது:

சிங்கப்பூர்,

............

அன்புள்ள அண்ணு,


இக் கடிதத்தைத் தபாலில் அனுப்பாமல் என் செல்வப் புதல்வன் சிவ சங்கரின் கையில் அனுப்புகிறேன். இக் கடிதம் உங்கள் கையில் சேரும்பொழுது நான் இவ்வுலகை விட்டு அகன்றிருப்பேன். என்னைப் பற்றி நீங்கள் என்ன எண்ணுகிறீர்களோ அறியேன். ஆயினும் மரணப் படுக்கையிலிருந்து உங்களை நான் வேண்டிக் கொள்ளுவது இது தான். நான் எத்தகைய தப்பு செய்ததாக உங்களுக்குப் பட்டாலும் என்னை மனதார மன்னித்து விடுங்கள். அப்பொழுது தான் என் ஆத்மா சாந்தி அடையும். உங்கள் மன்னிப்பின் அறிகுறியாக எங்கள் செல்வக் குழந்தை சிவ சங்கரனை வரவேற்றுக் கொள்ளுங்கள். ஆண்டவர் அருளால் உங்களுக்குப் பெண் குழந்தை ஒன்று இருந்தால் அவளை என் புத்திரனுக்குக் கொடுத்துப் பரலோகத்திலுள்ள என் ஆத்மாகளிகூறும்படி செய்யுங்கள்.

அநேக அன்பு
தங்கள் சகோதரி
வசந்தா."

கடிதத்தைப் படித்து முடித்து கண்ணீர் மல்கிய கண்களுடன் சிவ சங்கரன் மேல் சாய்ந்தாள் சாந்தா.

" எல்லாம் தெய்வச் சித்தம் சாந்தா!" என்று அன்பு கனியக் கூறினார் டாக்டர் சிவ சங்கர்.





# புத்தகம் எப்படி?

## அமுத கீதம்

[எழுதியவர்: சாம்ராஜ். விற்பனையாளர்: தமிழ்ப் பண்ணை, சென்னை. விலை ரூ. 1-6-0]

அழகிய தலைப்புடன் வெளி வந்திருக்கும் இந்தச் சிறு கதைத் தொகுதியில் ஒன்பது சிறு கதைகள் அடங்கி யிருக்கின்றன. கதைகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு சம்பவங்களையும், சூழ்நிலைகளையும் கொண்டிருப்பதுடன் சிறந்த கருத்துக்களையும் கொண்டிருக்கின்றன. சமூக சீர்திருத்த நோக்கம் கொண்டு எழுதப்பட்டிருக்கும் ஒன்பது கதைகளும் படிப்பதற்கு வெகு ரஸமாக அமைந்திருக்கின்றன.

இந்தப் புத்தகத்துக்கு முன்னுரை எழுதித் தந்துள்ள ஸ்ரீ நாமக்கல் கவிஞர் கூறுவதாவது :

..." ஸ்ரீ சாம்ராஜின் நடையிலே ஒளியும் அழகும் இருக்கின்றன. சிறு கதைகளுக்குரிய சிறந்த அம்சங்கள் இருக்கின்றன. உயர்ந்த கருத்துக்களைக் கதையிலே வைத்து மறைத்திருப்பதுடன் அவை மனதிலே பதியும் வண்ணம் கதைப் போக்கை அழகாக ஜோடித்துக் கொண்டு போகிறார். சமூக சீர்திருத்தங்களுக்கான பல கதைகள் இந்த அமுத கீதத்துக்குச் சுருதி போடுகின்றன......"

அமுத கீதம், ஆலமரத்துச் சாமியார், ரஜியா இம் மூன்று கதைகளையும் படிக்கும்போது பிரசித்த சிறு கதை எழுத்தாளரான ஸ்ரீ சோமுவின் நடை ஞாபகத்துக்கு வருகிறது . சில வரிகளைப் பாருங்கள் :—

ஒரு நாள் இரவு. சந்திரன் தன் முழுக் கிரணங்களையும் அழகாகத் தரையில் பரப்பி இருந்தான். சுல்தானுவின் படுக்கை அறையின் ஜன்னல் கதவுகள் திறந்து வைக்கப் பட்டிருந்தன. மதியின் ஒளியை வர வழைத்து நல்வரவு கூறுவதுபோல். 'லஸ்தார்' விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. சுல்தானு ஏதோ எண்ணமிட்ட வண்ணம் அறையினுள் நுழைந்தாள். உடனே ஜன்னலில் அருகிலிருந்த உயர்ந்த பஞ்சணையின் மீது சாய்ந்தாள். மெல்ல ஜன்னல் வழியாக வானை உற்று நோக்கினுள். அப்போது சந்திரன் மிக்க வேகமாகக் கரு மேகத்தில் மறைந்து, மறைந்து சென்ற வண்ண மிருந்தான். இதற்கிடையில் நீல வானத்தில் முத்துக்கள் இரைத்தாற்போல் நட்சத்திரங்கள் 'பளிச், பளிச்' சென்று மின்னிக் கொண்டிருந்தன.

அமுத கீதத்தின் ஆசிரியர் ஸ்ரீ சாம்ராஜ் சிறந்த எழுத்தாளராக வருவார் என்பதற்கு மேலே கண்ட வரிகளே சிறந்த அத்தாட்சி யாகும்.

## கல்லறை மோகினி

[ஆசிரியர் : சோமு. பிரசுரம் ஸ்டார், பாலக்கரை, திருச்சி : விலை ரூ. 3.0-0]

சிறந்த சிறு கதைகள்எழுதுபவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். அப்படி எண்ணும்போது பிரசித்த எழுத்தாளரான சோமுவின் பெயர் உடனே ஞாபகத்துக்கு வராமல் போகாது.

சோமுவின் சிறு கதைகளில் சிக்கல்கள் கிடையாது. ஒரே ஒரு கருத்தை வைத்துக் கொண்டுமிகத்தெள்ளியநடையில் கதைகள் வரைந்து விடுகிறார்.

ஸ்ரீ சோமுவின் கதைகளில் மற்றொரு விசேஷம் என்னவென்றால், கதைகளைப் படிக்கும்போது சம்பவங்களின் சூழ்நிலையும், பாத்திரங்களின் மனோபாவமும் நம் மனதிலே பதிந்து விடுகின்றன. ஆற்றங்கரையிலே கதை நடப்பதாயிருந்தால் நீரோட்டத்தின் சலசலப்பு நம் காதிலே விழுந்து கொண்டிருக்கும். கதாநாயகி அழுவதாயிருந்தால் நம் மனம் விம்மும். கதாநாயகன் கோபப்பட்டால் நம்முடைய கண்கள் சிவக்கும். இப்படி எல்லா உணர்ச்சிகளையும் தத்ரூபமாகச் சித்திரிக்கும் ஆற்றல் சோமுவின் எளிய நடையில் நர்த்தனம் புரிகிறது.

இந்தத் தொகுதியில் சேர்க்கப்பட்டிருக்கும் கதைகளில் பெரும்பாலானவை மிகச் சிறந்த கதைகள்.


இத்தகைய சிறந்த புத்தகத்தை வெளிக்கொண்டு வந்த ஸ்டார் பிரசுரத்துக்கு ஏதாவது பரிசு கொடுப்பதாயிருந்தால் மூன்று நட்சத்திரங்களைத்தான் பரிசாகக் கொடுக்க முடியும். நம் கைவசம் நட்சத்திரங்கள் கிடையாதாகையால் புத்தகத்தின் கிரயமான மூன்று ரூபாயைக் கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம்,

# சிறையில் தவம்

## மேற்கு வங்காள கவர்னர் ராஜாஜி.

வார்டர் பெருமாள் "சுதந்திரப் போர் எப்போது முடிவடையும்?" என்று என்னைக் கேட்டதும் "சீக்கிரமாக முடிவண்டயும். எல்லோரும் அதிகக் கஷ்டப்பட்டுப் போராடினுல் இன்னும் சீக்கிரமாகவே முடிவடைந்து விடும்" என்று நான் பதில் கூறினேன்.

அரசாங்கத்தார் எங்கள் எல்லோரையும் சகல விதத்திலும் சாதாரணக் கைதிகளைப் போலவே நடத்தத் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. அப்படியில்லையானுல் அவர்கள் அலட்சியமாயிருக்கிறார்கள் என்று தான் கூற



வேண்டும். சாதாரணக் கைதிகளுக்குக் கொடுக்கும் உணவையே எங்களுக்கும் தருகிறார்கள். அவர்களை அடைத்துத் திறக்கும் நேரத்திலேயே எங்களையும் அடைத்துத் திறக்கிறார்கள். அவர்களைப் போலவே நாங்களும் அசுத்தமான தரை மீது நின்றுகொண்டோ அல்லது உட்கார்ந்து கொண்டோதான், உணவைப் பிச்சைக்காரர்கள் மாதிரி அவசரமாக அள்ளி அள்ளிச் சாப்பிட வேண்டியவர்களாக இருந்தோம்.

ஆனுல், இந்த மாதிரி நடத்துவதைக் கொண்டு அவர்கள் எங்களைப் பணிய வைத்துவிட முடியாது. இது நம் மனதை மேலும் திடப்படுத்தவும் அதிகத் தியாகம் செய்யும்படி தூண்டவுமே செய்யும் என்பது அரசாங்கத்தாருக்குத் தெரியாது. சிறையில் விசேஷமான சௌகர்யங்கள் கிடைக்குமானுல் அவை நம்மை அறியாமலே நம்முடைய ஆற்றலுக்கு உலை வைத்து விடும்.

**டிஸம்பர் 23உ**

நேற்று இரவு சிறிது ஆஸ்துமாக் கஷ்டம் ஏற்பட்டிருந்தது. எனக்கு மாலை ஆகாரம் ஒத்துக் கொள்ளவே இல்லை. ஆனுல் அதற்காக நான் இப்பொழுதே கவலைப்படப் போவதில்லை.

நெல்லூர் நண்பர்களை வேறு பகுதிக்கு மாற்றிவிட்டதால், அவர்கள் இல்லாதது எனக்கு வருத்தமா யிருந்தது. மாலையில் ஆறுமணிக்குக் கதவைப் பூட்டியதும் உறக்கம் வந்து விடுவதில்லை. அந்த நேரத்தில் அவர்கள் பாட்டுப் பாடி ஆறுதல் அளிப்பார்கள். அது இல்லாமல் போய் விட்டது. வார்டர்கள் சளசள வென்று பேசிக் கொண்டிருப்பார்கள். அது எனக்கு மிகவும் அலுப்பாக இருக்கும்.

அறைகளைப் பெருக்க நல்ல துடைப்பம் கிடையாது. சிறை அதிகாரிகள் அறைகளின்சுத்தத்தைப்பற்றிக்கவனிப்பதேயில்லை. மூட்டைப் பூச்சிகள் இல்லாதது எங்கள் அதிர்ஷ்டம் தான். ஆனுல் கொசுக்கள் ஏராளமாக இருந்து ரீங்காரம் செய்து கொண்டிருந்தன.

நேற்று மாலை நான் வெளியில் உலாவிக் கொண்டிருந்த பொழுது ஒருவர் வந்து வேலியருகில் நின்று கொண்டு எங்களுக்கு நமஸ்காரம் செய்தார். அவர் தான் சிறைத் தலைமை அதிகாரிக்கு ஹிந்துஸ்தானி கற்றுக் கொடுக்கும் முன்ஷி என்று தோன்றுகிறது.

என்னுடைய அறைக்குப் பின் புறத்தில் யாரோ ஒரு முஸ்லிம் மத போதகர் மாதிரி உரக்க ஹிந்துஸ்தானியில் இடை விடாமல் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். அவர் யார் ?

அருணோதய சமயத்தில் என்னுடைய அறைக்குப் பின் புறத்தில் யாரோ அழும் குரல் கேட்டது. ஒரு வேளை மரண தண்டனை பெற்ற கைதிகளோ என்னவோ ?

எனக்குப் பலமில்லை. அது போதாதென்று கால்களில் வேறு பருக்கள். சிறிது வேலை செய்தால் கூட உடம்பு இளைக்க ஆரம்பித்துவிடுகிறது. இப்படிப்பட்டவர்கள் துணி துவைக்க வேண்டுமானுல் அதற்குக் கதர் அதிகக் கனமாயிருக்கிறது. நான் கஷ்டப்பட்டு என்னுடைய கதர் உடைகளைத் துவைக்கும் பொழுது வார்டர், "உங்கள் அதிர்ஷ்டம் நல்லதங்காள் அதிர்ஷ்டம் மாதிரிதான்" என்று கூறினார். அதைக் கேட்டு நான் புன்னகையுடன், " அத்தகைய துர்ரதிருஷ்டம் ஒன்றுமில்லை" என்று கூறினேன்.

இங்கே, சிறையில் ஒரு வருஷ காலம் கடுங்காவல் தண்டனை அனுபவிக்கத் தயாராக வந்திருப்பவர்கள் ஜாமீன் கொடுத்திருந்தால் தண்டனை பெற்றிருக்க மாட்டார்கள். வெளியே சுகமாகக் காலங்கழிக்கலாம். அப்படி யிருந்தும் சிறை வாசத்துக்கென்றே பிறந்தவர்கள் மாதிரி சந்தோஷமாக இங்குள்ள காரியங்களைச் செய்து கொண்டிருப்பதைக் கண்டு மகிழ்கின்றேன். சேஷ ரெட்டியும் இரண்டு நெல்லூர் வீர இளைஞர்களும் அந்த மாதிரி வந்தவர்களே. அவர்கள் "நாங்களும்தோட்டிகள்தானே?" என்று சொல்லிக்கொண்டு கையில் துடைப்பம் பிடித்து அறைகளைச் சுத்தம் செய்த காட்சி ஒரு நாளும் என்னுடைய மனத்தை விட்டு அகலாது.

தங்கள் வயதான தாய்மார்களையும் சிறு குழந்தைகளையும் வெளியிலுள்ள நண்பர்கள் பாதுகாப்பார்கள் என்று பரிபூரணமாக நம்பியே அவர்கள் சிறையில் தவம் செய்ய வந்திருக்கிறார்கள். இந்தவிஷயத்தை இன்னும்




ஜனங்கள் நன்கு உணர்ந்து கொள்ளவில்லை. இல்லையானுல் அவர்கள் உதவி செய்யும் விஷயத்தில் இவ்வளவு அலட்சியமாகவும் காலதாமதமாகவும் இருக்க மாட்டார்கள். ஆங்கிலத்தில் "ராபின்ஸன் குருஸோ" என்று ஒரு அழகான கதைப் புத்தகம் இருக்கின்றது. குருஸோ என்பவர் கப்பல் உடைந்து தன்னந் தனியாக ஒரு நிர்மானுஷ்யமான தீவில் அகப்பட்டுக் கொண்டார். ஆயினும் அவர் தீவில் வந்த சில காலம் கழித்து " ஏதே

னும் கப்பல் வந்து என்னை அழைத்துச் செல்லாதா?" என்று அடிக்கடி கடலை நோக்கிய வண்ணமாக நின்றார் என்று அந்தக் கதை கூறுகிறது. அது போல் இந்த நண்பர்களும் நம்பிக்கையை இழந்து விட வேண்டியது தானா?

இன்று மாலை ஐந்து மணிக்கு ஆம்பூரிலிருந்து பத்தே கான் என்பவர் ஜாமீன் கொடுக்க மறுத்துச் சிறைக்கு வந்து சேர்ந்தார். அவருக்கு ஒரு வருஷம் வெறுங் காவல் தண்டனை கொடுத்திருந்தார்கள். அவர் குட்டையான அழகிய மனிதர். புதிதாக ஒருவர் வந்தால் எங்கள் மனத்தில் அதிக இன்பம் உண்டாகின்றது. இந்தப் பெரிய போராட்டம் வெற்றி பெற வேண்டுமானால் இன்னும் பலர் வர வேண்டும். அவர்கள் மளமளவென்று மேலும் மேலும்வந்து குவிய வேண்டும்.

இரவில் என்னை ஆறு மணிக்கு அழைத்துத் தாழ்ப்பாளை இழுத்துப் பூட்டிச் சாவியை எடுத்துச் சென்ற பின்னரே, சுதந்திர தேவியின் முழுக் காட்சியையும் தினந்தோறும் காண்கின்றேன். நாங்கள் தான் சிறைப்பட்டிருக்கிறோம் என்பதில்லை. தேச மக்கள் அனைவருமே சிறைப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இரவில் மட்டுமா அடைக்கப் பட்டிருக்கிறார்கள்? அல்லும் பகலும் அனவரதமும் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால் அவர்களுடைய வாழ் நாள் முழுவதும் ஒரே அடிமை இரவுதான். இந்த உண்மையை ஏன் நம்முடைய ஜனங்கள் இன்னும் உணர்ந்து கொள்ளவில்லை? அன்னிய ஆட்சியில் சட்டத்தை மீறிச் சிறைக்குச் செல்பவர்களே சுதந்திரம் உடையவர்கள். அவர்களை அடிபணியும்படிச் செய்ய முடியாது. வேண்டுமானால் அவர்களைப் பலாத்காரமாகக் கட்டிப் போடலாம். அவ்வளவு தான் செய்ய முடியும். இந்த விஷயங்களை எல்லாம் நான் முன்னமேயே அறிவேன். அவற்றைப் பல மேடைகளில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆயினும், இந்த உண்மையை இப்பொழுது போல் எந்தக் காலத்திலும் நான் உணர்ந்ததில்லை.



பத்தே கான் மூன்று கட்டு மெழுகு வர்த்திகளைக் கொண்டு வந்திருந்தார். எனக்கு ஒரு கட்டுக் கொடுத்தார். அது உபயோகப்படக் கூடும்.

இன்று டிஸம்பர் மாதம் 24ம் தேதி. என்னுடைய கழுத்தில் மாட்டிக் கொள்வதற்காக என்னுடைய பதக்கத்தை ஒரு கயிற்றில் கட்டிக் கொண்டு வந்தார்கள். அந்தப் பலகைத் துண்டில் "8398. 21-12-21—20-3-22" என்று எழுதி யிருந்தது. முதலில் உள்ளது நான் சிறைக்கு வந்த தேதி. அடுத்தது நான் விடுதலை பெறும் தேதி.

என்னுடைய "சரித்திர அட்டை"யில் கீழ்க்கண்ட விவரங்களும் காணப்பட்டன :—

"அரசியல் கைதி. 8398. வந்த தேதி. 21-12-21. அப்பீல் செய்ய மறுத்துவிட்டார், 24.12.21. பெயர்: ஸி. ராஜகோபாலாச்சாரியார், பிராம்மணர். இந்திய தேசீயக் காங்கிரஸின் பொதுக் காரியதரிசி. கல்வி நிலை : ஸி."

"ஸி" என்பதன் பொருள் எழுத்து வாசனையில்லை என்பதாகும். இவ்வளவு அலட்சியமாகவே எழுதுகின்றார்கள்!

அதன் பின் கீழ்க் கண்ட விவரங்கள்.

"தண்டனை: 3 மாதம் வெறுங்காவல்.

தண்டனைத் தேதி : 21-12-21.

விடுதலைத் தேதி : 20.3-22.

வயது : 42.

உயரம் : 5 அடி 4 அங்குலம்.

நிறை : 104 ராத்தல்."

ரங்கம் செட்டி தாம் சிறைக்கு வருவதற்கு இரண்டு நாட்களுக்கு முன் தம்மை நிறுத்துப் பார்த்த பொழுது தம்முடைய நிறை 142 ராத்தல் இருந்ததாகக் கூறுகிறார். ஆனால் அவருடைய "சரித்திரம்" 137 ராத்தல் என்றே கூறுகிறது. பத்தே கான் முகம்மது கௌஸ் தம்மை நிறுத்தவர் 125 ராத்தல் என்று கூறியதாகவும் ஆனால் சரித்திரத்தில் 120 ராத்தல் என்று காண்பதாகவும் கூறுகிறார். இப்படி ஒவ்வொருவருடைய நிறையையும் ஐந்து ராத்தல் குறைத்து எழுதக் காரணம் என்ன? சிறை வாழ்வில் நிறை குறையும் என்று

10—12—47



விசேஷ அதிகார மசோதாவைக் கொண்டு வர இருந்த மேற்கு வங்கப் பிரதமர் டாக்டர் பி. ஸி. கோஷை எதிர்த்து, வங்க அசெம்பிளிக்கு எதிரில் சத்யாக்கிரகமும் ஆர்ப்பாடமும் நடந்தன.

11—12—47



"திருநெல்வேலி, ராமனுதபுரம் ஜில்லாக்களில், உணவுப் பஞ்சத்தைப் போக்க, உணவுப் பொருள் அவசரமாக அனுப்பப்பட்டது" என்று உணவு மந்திரி டாக்டர் ராஜன் அசெம்பிளியில் கூறினார்.

எதிர்பார்த்து முன் கூட்டியே குறைத்து எழுதுகிறார்களோ என்னவோ?

காலையில் 10-30 மணிக்கு, நாங்கள் ஆந்திர ஒத்துழையாமைக்காரர்களைக் கிணற்றடியில் பார்த்தோம். ஆனால் அவர்களைச் சந்திக்க எங்களுக்கு இன்னும் அனுமதி கிடைக்கவில்லை. நான் என் பகுதியிலிருந்த வண்ணம் வணக்கம் செய்தேன். அவர்களும் தாங்கள் இருந்த இடத்திலிருந்து கொண்டே எனக்கு நமஸ்காரம் செய்தார்கள். நாங்கள் சந்திக்கக் கூடாது என்பதற்காக அவர்களைக் கிணற்றுக்குக் கூட்டிப் போகும் நேரத்தில் எங்களைக் கூட்டிச் செல்வதில்லை.

இன்று நடுப்பகலில் சிறைத் தலைமை அதிகாரியும் இராணுவ உடை தரித்த மற்றொரு ஐரோப்பியரும் சிறையின் துணை அதிகாரியும் சிறையைச் சுற்றிப் பார்க்க வந்தார்கள். எங்கள் அங்க அடையாளங்களைச் 'சரி' பார்த்தார்கள். என்னுடைய மாலை உணவு என்னுடைய ஆஸ்துமா வியாதிக்கு ஒத்துக் கொள்ளவில்லை என்று நான் தலைமை அதிகாரியிடம் கூறினேன். அவர் என்னை வைத்தியசாலைக்கு அனுப்புவதாகச் சொன்னார். வைத்தியசாலை இதைவிடக் கேவலமாக இராது என்று எண்ணுகிறேன்.

இன்று பிற்பகல் கிணற்றடியில் நான் பல 'மாப்பிள்ளைமார்' ஜலம் எடுக்கக் கண்டேன். நான் அன்பாகப் பேசியதைக் கண்டு அவர்களுடைய முகங்கள் மலர்ச்சி அடைந்தன. அவர்கள் எல்லோரும் மாலாபுரத்தைச்சேர்ந்தவர்கள். நான் என்னுடைய அறைக்குத் திரும்பி வந்துகொண்டிருந்த பொழுது ஒருவரைக் கண்டேன். அவர் இராணுவ முறையில் வணக்கம் செய்தார். அவரிடம் பேசிய பொழுது அவரும் மாப்பிள்ளை ஜாதியினரே என்று அறிந்தேன். அவர் போர் எப்படி நடக்கிறது என்று விசாரித்தார். பலாத்காரத்தில் இறங்கியது தவறு என்பதை ஏற்றுக் கொண்டார்.

"சாதுக்களையே (அதாவது நிரபராதிகளையே) கைதி செய்திருக்கிறார்கள்.



நம்மையெல்லாம் கைது செய்த பின்னர், போர்செய்பவர்களைக் கைதுசெய்வது எளிது என்று எண்ணுவது போல் தெரிகிறது. நாம் இங்கே ஐந்து வருஷ காலம் இருக்க வேண்டுமா அல்லது அதற்குள் சுயராஜ்யம் வந்து விடுமா? தங்களைப் போன்ற பெரியவர்களும் பணக்காரர்களும் சிறைக்கு வருவதைக் காண எங்களுக்குச் சந்தோஷமாயும் உற்சாகமாயும் இருக்கிறது. எங்களுடைய மனத்தில் உண்டாகும் எண்ணங்களை எப்படி நாங்கள் கூற முடியும்?"—என்று இவ்வாறாகப் பல கேள்விகள் கேட்டார். அந்த வீரருடைய கண்களில் நீர் பெருகியது.

நான் அவருடைய கேள்விகளுக்கெல்லாம் தகுந்த பதில் சொல்லி தைரிய மூட்டினேன்.

"இந்த தேசம் முழுவதும் ஒரு சிறை தானே?" என்று சொன்னேன்.

"நாம் இந்தச் சிறிய சிறையில் இருக்கிறோம். நம்மை வெள்ளைக்காரர்கள் புலிகளைக் கூண்டுகளில் அடைத்து வைப்பது போல் அடைத்து வைத்திருக்கிறார்கள். வெளியே உள்ள ஜனங்களைப் பெரியசிறைகளில்வைத்திருக்கிறார்கள்" என்றேன்.


"நாம் புலிகள் தான்" என்றார் அவர்.

கைதி வார்டர் ஒருவர் வந்து அவரை அவசரமாக வேலைக்கு அழைத்துச் செல்லும் வரை நாங்கள் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தோம். அவர் தமக்கு கோதுமையை மாவாகத் திரிக்கும் வேலை கொடுத்திருப்பதாகச் சொன்னார்.

சித்தூரில் 17-ம் தேதி யன்று ஹர்த்தால் நடத்துமாறு துண்டுப் பிரசுரங்கள் வழங்கிய குற்றத்துக்காக தண்டிக்கப்பட்ட ஒரு முஸ்லிம் தையற்காரர் அன்று மாலை சிறைக்கு வந்து சேர்ந்தார். அவர் ஜாமீன் கொடுக்க மறுத்தபடியால் ஆறு மாதக் கடுங்காவல்தண்டனை அடைந்திருந்தார்.


என்னால் துணி துவைக்கும் வேலையைச் செய்ய முடியவில்லை. ஒரு வேளை இன்று பிற்பகல் வெயிலில் நின்று துவைத்தது தான் காரணமோ? என்னவோ தெரிய வில்லை. உடல் சோர்ந்து உட்கார்ந்து விட்டேன். (தொடரும்)

12—12—47



ராணுவம், நிதி முதலிய சகல விஷயங்களிலும் பாகிஸ்தானுக்கும், இந்தியாவுக்கும் திருப்திகரமான ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டதென்று இந்திய உதவிப் பிரதமர் சர்தார்படேல் அறிவித்தார்.

13—12—47




சர்க்காரின் 'ஸ்பெஷல் போலீஸ்' படையில் முஸ்லிம்களுக்கு இடமில்லை என்று சொல்லிவிட்டார் சென்னைப் போலீஸ் மந்திரி டாக்டர் சுப்பராயன்.

14—12—47



'என். ஜி. ஓ'க்கள் வேலை நிறுத்தம் செய்தால் 'டிஸ்மிஸ்' செய்யப்படுவார்களென்று சென்னை சர்க்கார் அறிக்கை யொன்று கூறுகிறது.


# காற்றிலே வந்த கானம்

ஞானஸ்கர்

வி. பத்மினி, வி. ஹேமமாலினி இருவரும் சேர்ந்து டிசம்பர் 8-ந் தேதி சென்னை நிலயத்தில் பாடினார்கள். சாரீரத்தில் இனிமையும் சுகபாவமும் அமைந்திருக்கிறது. 'சலமேலரா' கீர்த்தனத்தை சுருதி சுத்தமாய் இருவரும் இழைந்து பாடிய முறை நன்றாயிருந்தது.

அதே நாள் காலை ஆர். எம். சுந்தரம் நாகநந்தினி என்ற புது ராகத்தில் "நாயேன்" என்ற கோடீசுவரய்யரின் சாஹித்தியத்தை ரஸித்துப் பாடினார். பாடிய வழி நன்றாக இருந்ததால் கீர்த்தனம் சோபிதமாக இருந்தது.

செவ்வாய்க்கிழமை ரஸிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த செம்மங்குடி சீனிவாசய்யர் கச்சேரி நடைபெறவில்லை. பெரிய வித்வான்கள் ரேடியோவில் பாட ஒப்புக் கொண்டு கடைசியில் பாடாமல் இருந்து விடுவதை கௌரவம் என்று நினைக்கிறார்கள் போல் தோன்றுகிறது. ரேடியோ நிர்வாகிகள் திரும்பத் திரும்ப பெரிய வித்வான்களுக்கே 'சான்ஸ்' கொடுப்பதைநிறுத்திக் காலையிலும் மாலையிலும் நன்றாகப் பாடுகிற இளம் வித்வான்களுக்கு முழு நேரக் கச்சேரி கொடுத்து ஆதரிக்கலாம்.



தேரெழுந்தூர் சீனிவாஸாச்சாரி

செம்மங்குடிக்குப் பதிலாக மாயவரம் கோவிந்தராஜப்பிள்ளை தனிப் பிடில் கச்சேரி செய்தார். தோடி ராகம் வெகு சுகமாய் இருந்தது.

இப்பொழுதெல்லாம் நல்ல சங்கீதம் பாடுகிறவர்கள் அநேகமாகக் காலை வேளையில்தான் பாடுகிறார்கள். வெள்ளியன்று காலை தேரெழுந்தூர் சீனிவாஸாச்சாரி சென்னையில் பாடினார். சாரீரத்தில் நுண்மையும் காத்ரமும் இருக்கிறது. தன்யாசிராகத்தையும் கீர்த்தனையையும் நல்ல பாணியில் உழைத்துப் பாடினார். சாரீரமும் இனிமையாய் இருந்து, உயர்ந்த ஞானமும் இருந்தால் பாட்டு நன்றாக இருக்கக்கேட்பானேன்?

சென்னையில் அதே நாள் மாலை ஸ்ரீமதி வி. ஆர். சந்திரா பாடினார். பிகுசுருவாக சங்கராபரண ராகம் பாடி 'ஸரோஜதளநேத்ரி' கீர்த்தனம் பாடினார். சாரீரத்தில் நல்ல அழுத்தமிருப்பதால் ராகத்தில் சங்கதிகளெல்லாம் விவரமாகவும் செவிக்கின்பமாகவும் பாட முடிகிறது. நல்ல சங்கீதம் பாடுகிற சில பெண்மணிகளில் வி. ஆர். சந்திராவும் ஒருவர் என்பதற்குச் சந்தேகமில்லை.

ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடக்கும் முழு நேரக் கச்சேரிகளில் இந்த வாரம் வி. சூடாமணி பாடினார். ஒரு மணிநேரம் நடந்த அவருடைய கச்சேரி. ஏதோ நாலுமணி நேரம் கச்சேரி கேட்டது போல் இருந்தது. 'ஸங்கீத ஞானமு' கீர்த்தனையும் நாட்டைக்குறிஞ்சிகீர்த்தனையும் ஜீவனே இல்லாமல ரொம்பவும் 'டல்'லாக இருந்தது. கடைசியில் பாடிய நாதநாமக்கிரியா உருப்படி சுமாராய் இருந்தது என்று சொல்லலாம்.

சென்ற வாரம் நடந்த அநேக சிறந்த கச்சேரிகளில் ஸ்ரீமதி மீனாக்ஷி ராமகிருஷ்ணனுடைய கச்சேரி முதன்மையாய் விளங்கிற்று. காம்போதி ராகத்தை விஸ்தாரமாகப் பாடி மாஜானகி கிருதியை நன்றாய் போஷித்துப் பாடினார். சாரீரத்தில் நல்ல கனிப் பிருப்பதால் கேட்பதற்கு மிகவும் இன்பமாய் இருந்தது.


இப்பொழுது கச்சேரிகளில் அனேகமாக வர்ணம் பாடுவதையே விட்டு விட்டார்கள். மத்யமகால உருப்படிகளைப் பாடியே கச்சேரியை ஆரம்பிக்கிறார்கள். ரேடியோவில் முழு நேரக் கச்சேரி செய்யும் வித்வான்கள் வர்ணமே பாடுகிறதில்லை. செவ்வாய்க் கிழமை தனிப் பிடில் கச்சேரி செய்த [illegible] ஸ். வெங்கட்ராமய்யா, கல்யாணி ராக வர்ணத்துடன் கச்சேரியை ஆரம்பித்தார். அந்த வர்ணம் ஒன்றே ரஸிகர்களுக்குப் பரமதிருப்தியை உண்டாக்கி விட்டது. பிலஹரியும், ராகமாலிகையில் வாசித்த செஞ்சுருட்டியும் பிரமாதமாய் இருந்தன. [illegible] வெங்கட்ராமய்யாவைப் போல் மற்ற வித்வான்களும் ரேடியோக் கச்சேரிகளிலாவது வர்ணத்துடன் ஆரம்பித்தால் கச்சேரி இன்னும் சிறப்பாக விளங்கும் என்பதில் சந்தேகமில்லை.




மீனாக்ஷி ராமகிருஷ்ணன்

வியாழனன்று மாலை எஸ். சுரபி சென்னையில் பாடினார். சுகபாவம் நிறைந்த சாரீரம். ஸிம்ஹேந்திர மத்யம ராகமும் 'உன்னையல்லால்' என்ற கோடீசுவர அய்யர் ஸாஹித்தியமும் உயர்தரமாய் இருந்தன.


## சிறுவர் சித்திரம்



எல். ராகவன்
(வயது 11)
* மாம்பலம்.



* ஆர். கண்ணன்
(வயது 10)
சென்னை.



டி. ஹேமாவதி
(வயது 11)
திருப்பாப்புலியூர் (எஸ். ஏ.)

★ பரிசு பெற்ற குழந்தைகள்

Printed by R. [illegible]


குழந்தைகளுக்கு விருந்து!

## குருவிக் கூடு

என்ற இனிமை மிக்க கதை கவிதை 'குயிலன்' எழுதியது. நீதியும் அறிவும் புகட்டும் புத்தகம்.

விலை அணா மூன்று

★

தபாலில் பெற விருப்புவோர் நான்கு அணா தபால் ஸ்டாம்பு அனுப்பிப் பெறலாம்.

★

தமிழ்ப்பண்ணை
தியாகராயநகர் - சென்னை 17.

ரஸிகர்களுக்கு மற்றுமோர் விருந்து

## ரம்பா

ஒரு சினிமா மாதப் பத்திரிகை

ஆசிரியர்:
ஆர். ரங்கராஜன்

உதய சங்கருடன் பேட்டி; சினிமா நக்ஷத்திரங்களின் வாழ்க்கைச் சரித்திரம்; சிறு கதைகள்; விமரிசனங்கள்; ஸ்டுடியோ செய்திகள்; ரஸமான கட்டுரைகள்; வதந்திகள் இன்னும் பல புதிய அம்சங்களுடன் டிஸம்பர் கடைசி வாரத்தில் வெளி வருகிறது.

விலை 8 அணா

விவரங்களுக்கு:
"ரம்பா" காரியாலயம்
சென்னை-4.

## Mr. – Mrs. – or – Miss –!


*This is the* EXACT THING *You're looking for* —


A. E. I.
STEEL CORNER SHELF

— DESIGNED TO SUIT YOUR NEEDS AND PURSE. SO HANDY TO FIND YOUR PERSONAL THINGS WHERE EXACTLY YOU WANT THEM TO BE, MAKES THE BEST USE OF WALLSPACE. STURDY STEEL SHEET SHELF —

Price: Rs. 4. Postage Extra.

*Manufactures:*
ALLIED ENGINEERING INDUSTRIES
MALLESWARAM P.O., BANGALORE







# வள்ளிமணி

273
OFFICE OF THE REGISTRAR OF B...
22 JAN 1948
600 008



.12.47 VELLIMANI ~ விலை 4 அணா







OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 JAN 1948
MADRAS











நிக்கோ காயிலே

நமது தேசியக் கொடியின் மூவர்ணங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.




நிக்கோ பிரத்தியேகமாகத் தயாரிக்கும் சாமான்களாவன : சாதாரண செப்புக் கம்பிகள், கெட்டி செப்புக் கம்பிகள், ஈயம் பூசிய செப்புக் கம்பிகள், பியூஸ் ஒயர்கள், பலவிதங்களிலும், அளவுகளிலும் வி.ஐ. ஆர். கேபிள்கள், மோட்டார் கேபிள்கள் கோலியரி கேபிள்கள், நூல் சுற்றப்பட்ட ஒயின்டிங் ஒயர்கள், எனமல் ஒயர்கள் முதலியன..

எல்லா வி. ஐ. ஆர். கேபிள்களும் சர்க்கார் அதிகாரிகளால் பரிசோதிக்கப்பட்டு, அத்தாட்சியுடன் முத்திரை யிடப்படுகின்றன.

**தி நேஷனல் இன்ஸுலேடட்**

கேபிள் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்.

"ஸ்டீபன் ஹவுஸ்"

கல்கத்தா


பரத நாட்டிய உலகத்தின் இரு மணிகளாய் விளங்கும் குமாரிகள் ராதாவையும் ஆனந்தியையும் இந்த இதழ் அட்டையில் காண்கிறோம்.

தமிழ் நாட்டின் புராதனக் கலையான பரத நாட்டியம் தமிழ் மக்களின் அசட்டைக்குள்ளாகி மறையும் தருவாயிலிருந்தது.

மங்கிக் கிடந்த பரத நாட்டியக் கலைக்குப் புத்துயிரளிக்க ஒரு ரஸிகர் முன் வந்தார். "பரத நாட்டியம் அற்புதக் கலை; தமிழ் நாட்டுக்கே உரிய கலை; சிற்பம், சித்திரம், சங்கீதம் எல்லாவற்றுக்கும் ஆதாரமான கலை" என்று மேற்படி ரஸிகர் பிரசாரம் தொடங்கினர். ரஸிகமணி ஸ்ரீ டி. கே. சியின் பெரு முயற்சி காரணமாகப் பரத நாட்டியக் கலை புத்துயிர் பெற்றது. ஸ்ரீமதி பால சரஸ்வதியின் மூலம் ஜீவ களை பெற்றது. ஸ்ரீமதி ருக்மணி தேவியின் மூலம் கௌரவம் அடைந்தது.

பிறகு, பல உயர் குடும்பத்தைச் சேர்ந்த சிறுமிகள் இந்தக் கலைத் துறையில் ஈடுபட்டுப் பெயரும் புகழும் பெற்றார்கள். சமீப காலத்தில் பிரபல மடைந்துள்ள ராதா ஆனந்தியின் நடனம் பல சிறப்பான அம்சங்களுடன் கூடி விளங்குகிறது. குழந்தைகளின் அபிநயத் தோற்றங்களும், முக பாவ விளக்கங்களும், சுத்த நடனத்துக்குரிய ஜதி வரிசைகளும் தாளத் திருத்தத்துடன் கூடிய பாத அசைவுகளும் பார்ப்போர் கண்டு களிக்கும் முறையில் இருக்கின்றன. குழந்தைகள் ஆடுவதைப் பார்க்கும் போது சில சமயம் பரத நாட்டிய சாஸ்திரமே இரு உருவங்கள் பெற்று ஜதி போடுகின்றனவோ என்று தோன்றுகிறது.

நாளது டிசம்பர் மாதம் 30உ யன்று சென்னைத் தமிழிசைச் சங்கத்திலும், வரும் ஜனவரி முதல் தேதி மயிலாப்பூரில் மியூஸிக் அகாடமியிலும் ராதா-ஆனந்தியின் நடனக் கச்சேரிகள் நடைபெறுகின்றன என்பதை யறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

# வெள்ளி மணி


வெள்ளி 1] 26—12—47 [மணி 30

21848
0-1-008

## ஆரம்பமும் முடிவும்!




சர்க்கார் சிப்பந்திகள் ஸ்டிரைக்கை வாபஸ் பெற்று, எவ்வித வாக்குறுதியும் இன்றி வேலைக்குத் திரும்பினர்கள்.



தீ வருகிறது! ஜாக்கிரதை!!

சென்னை மாகாணத்தில், அகில இந்திய முஸ்லிம் லீகைப் புனருத்தாரணம் செய்வதற்காக சென்னை லீக் தலைவர் முகமது இஸ்மாயில் கராச்சியிலிருந்து சென்னைக்குத் திரும்பி வருகிறார்!

# வாழ்த்துக் கூறி வழி அனுப்புகிறோம்!

நாட்டுக்குச் சுதந்திரம் வாங்கித் தந்த நல்ல வருஷத்துக்கு வாழ்த்துக் கூறி வழி அனுப்புகிறோம்.

இன்னும் ஐந்து தினங்களிலே சொல்லாமல் கிளம்பப் போகும் நாற்பத் தேழாம் ஆண்டுக்கு நன்றியுடன் விடை கொடுத்து அனுப்புகிறோம்.

வருகிற புதன் கிழமை இரவு சரியாக மணி பன்னிரண்டு அடித்ததும் பார்த்தால், தேதிக் காலண்டரின் கடைசித் தாள் உதிர்ந்து கிடக்கும். அந்த அர்த்த ராத்திரி இருட்டிலே 1947-ம் ஆண்டு இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும்.

கெடியாரத்தில் பன்னிரண்டு மணி அடிக்கும் அதே சுப வேளையில் ஸ்ரீமான் 1948 தன்னுடைய ஆட்சியை ஆரம்பிப்பார். சுதந்திர இந்தியாவில் சுதந்திரச் செங்கோல் பிடித்து ஆளப்போகும் 1948-ம் ஆண்டை ஆசி கூறி வரவேற்கிறோம்.

* * * *

1947-ம் ஆண்டு ஆரம்பத்தில் தேசத்தின் நாலா திசைகளிலும் மத வெறியர்கள் இட்ட தீ தேச மக்களுக்கு மகத்தான கஷ்டத்தை விளைவித்தது. கீழ் வங்காளத்திலும், பீகாரிலும் ஆயிரக்கணக்கான மக்கள் மத வெறியர்களின் மிருகப் பிராயமான கொடுஞ் செயல்களுக்குப் பலியானார்கள். அநேகர் வீடிழந்து, மனையிழந்து, அல்லல் பட்டார்கள்.

இத்தகைய பயங்கரச் சூழ் நிலையினின்று தப்புவதற்கு மார்க்கமின்றி தத்தளித்தார்கள். உலகத்தின் அவதார புருஷரான காந்தி மகாத்மா தக்க சமயத்தில் கீழ் வங்காளத்துக்கு விஜயம் செய்து, அன்பு மதத்தைப் போதிக்கவும், சகோதர மனப்பான்மையை வளர்க்கவும் கிராமம் கிராமமாகக் கால் நடையாக யாத்திரை செல்லும் பணியை மேற்கொண்டார்.

இதன் காரணமாக, மத வெறியர்களின் அட்டூழியங்கள் அடங்கின. மகாத்மாவும் மனம் மகிழ்ந்தார். இது இந்த வருஷத்தின் ஆரம்ப வெற்றியாகும்.

அடுத்த வெற்றி, பிரிட்டிஷ் மந்திரிகளின் அறிக்கை. தேசத் தலைவர்கள், மாபெரும் இயக்கங்கள் நடத்தி மகத்தான தியாகங்கள் பல புரிந்ததன் காரணமாகப் பிரிட்டிஷ்காரர்கள் இணங்கி வந்து சுதந்திரப் பிரகடனம் விடுத்தார்கள். நமது ஒப்பற்ற தலைவர்கள் அதை உடனே ஒப்புக்கொண்டு தேசத்தின் நிர்வாகத்தை ஏற்க முத்திரை வைத்தார்கள்.

பாபு ராஜேந்திர பிரசாத் அவர்களுடைய தலைமையின் கீழ் அரசியல் நிர்ணய சபை கூடி, தேசத்தின் வருங்கால அரசியலை வகுக்கத் தொடங்கினார்கள். இதனிடையே புது டில்லியில் தாற்காலிக தேசீய சர்க்காரும் ஆரம்பமாகி நடந்து கொண்டிருந்தது. மேற்படி சர்க்காரில், லீக் தலைவர்களும் கலந்துகொண்டு தேசத்தின் ஆட்சியை நடத்த ஆரம்பித்தார்கள். கடைசியாகப் பாகிஸ்தான் கொடுக்கவேண்டும் என்ற முஸ்லிம் லீக்கின் பிடிவாதத்திற்கிணங்கி தேசத்தைப் பங்கு போடவும் ஒப்புக்கொண்டார்கள். பின்னர், ஆகஸ்டு மாதம் 15உ யன்று தேசத்துக்குப் பரிபூர்ண விடுதலை கிடைத்தது. பிரிக்கப்பட்ட பாகிஸ்தானுக்கு முஸ்லிம் தலைவர்கள் குடியேறிச் சுதந்திர விழாவைக் கொண்டாடினார்கள்.

இந்தியா தேச மெங்கும் ஆகஸ்டு 15உ யன்று சுதந்திர விழாவைக் கோலாகலமாய்க் கொண்டாடினார்கள். பண்டித ஜவாஹர்லால் நேரு இந்திய யூனியனின் செங்கோலை ஏந்தினார். பாபு ராஜேந்திர பிரசாதும், வல்லபாய் பட்டேலும் அவருக்குப் பக்க பலமாய் நின்றார்கள்.

பிரிக்கப்பட்ட மேற்கு வங்காளத்தின் கவர்னர் பதவியை ராஜாஜி மேற்கொண்டார். அது வரை கல்கத்தாவிலும் சுற்றுப் புறங்களிலும் சமூக சச்சரவு காரணமாக இரத்த ஆறு ஓடிக் கொண்டிருந்தது.

ஆகஸ்டு பதினைந்தாம் தேதி ராஜாஜி கவர்னர் பதவியை ஏற்றுக் கொண்ட மறு தினம் கல்கத்தாவில் பரிபூர்ண அமைதி நிலவியது. இரத்த ஆறு ஓடிய சாலைகளிலும் வீதிகளிலும் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் கூடிக் குதூகலமாய்ச் சுதந்திர விழாவைக் கொண்டாடினார்கள். பன்னீரைக் கொட்டிப் பெருக்கெடுத்து ஓடச் செய்தார்கள். இதைக் கண்டு காந்தி மகாத்மாவின் மனம் சாந்தி அடைந்தது.

ஆனால் துரதிருஷ்டவசமாக மறுபடியும் மத வெறியர்கள் கிளப்பி விட்ட பேயாட்டம் வலிமை பெற்றது. காந்தி மகான் மனம் நொந்து உண்ணு விரதத்தை மேற்கொண்டார். தள்ளாத காலத்தில் உலகம் போற்றும் உத்தமரின் உயிருக்கு ஆபத்து நேருமோ என்று உலகோர் அஞ்சினர். கவர்னர் ராஜாஜி, அறிக்கைமேல் அறிக்கை விட்டு மகாத்மாவின் உண்ணுவிரதத்தை நிறுத்த அரும்பாடு பட்டார். வங்காள மக்கள் கடமையை உணர்ந்து இழந்த மதியை மீண்டும் பெற்றனர். வங்காளத்தில் மறுபடியும் பரிபூரண அமைதி ஏற்பட்டு காந்தி மகாத்மாவும் உண்ணுவிரதத்தைக் கைவிட்டார். இந்தச் செய்தி நாற்பது கோடி மக்களின் வயிற்றில் பால் வார்த்தது மாதிரி இருந்தது.

மலை போல் வந்து பனிபோல் மறைந்த மேற்கண்ட அதிசயங்கள் எல்லாம் இந்த 1947-ஆம் வருஷத்தில் தான் நடைபெற்றன.

இந்த வருஷத்தில் இந்தியா தேசத்துக்கு மட்டுமா சுதந்திரம் கிடைத்தது? இந்தியாவின் சகோதர நாடுகளான பர்மாவும், இலங்கையும் இந்த வருஷத்தில் தான் சுதந்திரம் பெற்றன.

'நெல்லுக்குப் பாயும் நீர், சுற்றியுள்ள புல்லுக்கும் பொசியுமாம்' என்பது போல் சுற்றியுள்ள தேசங்களுக்கும் விடுதலை கிடைத்தது.

இந்த வருஷத்தில் தான் இந்திய தேசத்தின் சுதந்திரப் பிரதிநிதிகள் உலக மகா சபையில் கலந்து கொண்டார்கள்.

உலக மகா சபையில் ஸ்ரீமதி விஜயலட்சுமியின் வாதத் திறமையின் காரணமாக இந்தியாவின் கௌரவம் ஸ்தாபிதமாயிற்று.

இன்னும் நம்முடைய செந்தமிழ் நாட்டைப் பொருத்த வரை, இந்த வருஷத்தில் பல சிறப்பான காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. தமிழ் மக்கள் சென்ற அக்டோபர் மாதத்தில் தீர்க்கதரிசியும், அமர கவியுமான, பாரதியாரின் ஞாபகார்த்தமாக மணி மண்டபம் கட்டி மங்காத புகழ் பெற்றார்கள். தீண்டாமைப் பேயையும், மது அரக்கனையும் விரட்டினார்கள்.

தமிழ் நாட்டின் தவப்புதல்வர் ராஜாஜியின் ஜன்ம தினத்தைக் கண்டு பிடித்து அவருடைய எழுபதாவது ஜயந்தி விழாவை அமோகமாகக் கொண்டாடினார்கள். இன்னும் இந்தப் புனிதமான வருஷத்திலே தான், (சொல்வதற்குச் சற்று சங்கோசமா யிருக்கிறது!) 'வெள்ளி மணி'யும் ஆரம்பமாகி வெற்றிகரமாய் நடந்து வருகிறது.

ஆகையால் இந்த 1947-ம் ஆண்டை மிகச் சிறந்த வருஷ மென்றும் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஆண்டு என்றும் கூறுவதில் தவறில்லை அல்லவா? இந்த ஒரு வருஷ காலத்துக்குள் தேச சரித்திரமே மகத்தான மாறுதலை அடைந்து விட்டது. இவ்வளவு மாறுதல்களும் இந்த ஒரு வருஷத்திற்குள்ளாகவா என்று நினைக்கும் போது சற்று ஆச்சரியமாகக் கூட இருக்கிறது. 1947-க்கு வாழ்த்துக் கூறி வழியனுப்புகிறோம். "நல்ல வருஷமே, சென்று வா!" என்று விடை கொடுத்து அனுப்புகிறோம். வரப்போகும் 1948-ம் ஆண்டுக்கு நல்லாசி கூறி வரவேற்கிறோம். வரப்போகும் ஆண்டில் தேசம் பரிபூரண சுபிட்சத்துடன் வாழப் பிரார்த்திக்கிறோம். அன்ன விசாரம், ஆடை விசாரம் அற்று வாழ்வதற்கு, வரப்போகும் ஆண்டு உதவி புரியும் என்று எதிர் பார்க்கிறோம்

# நாட்டு வளப்பம்



## ஆச்சர்யந்தான்!

"என்ன ஆச்சர்யம்!" என்று சொல்லி ஆச்சரியப்படும்படியாகச் சமீபத்தில் பாகிஸ்தான் சர்க்கார் நடந்து கொண்டிருக்கிறார்கள். இந்திய சர்க்காருடன், ஆஸ்திப் பரிவர்த்தனை விஷயமாகப் பாகிஸ்தான் சர்க்கார் நடந்து கொண்ட நேர்மையைத்தான் குறிப்பிடுகிறோம்.

இரு யூனியன்களுக்கும் நியாயமாகச் சேரவேண்டிய ஆஸ்தி, கடன் இவற்றைப் பங்கீடு செய்யும் விஷயத்தில் தகராறு ஏதும் இல்லாமல் சமரசம் ஏற்பட்டிருக்கிறது. பேச்சு வார்த்தையில் பாகிஸ்தான் சர்க்கார் சார்பாகக் கமிட்டியில் ஸ்தானம் வகித்த ஸ்ரீ லியாகத் அலிகான் தமது வாழ் நாளில் இப்படி ஒரு முடிவைக் கௌரவமாக ஏற்றுக் கொண்டிருப்பாரா என்பது சந்தேகமே.

ஒப்பந்தத்தில் சிறிது கூட வகுப்பு உணர்ச்சியே தலை காட்டாமல் சமரசமான முடிவு ஏற்பட்டதற்கு என்ன காரணம் என்று பார்க்கப் போனால், ஒப்பந்தத்தின் பல ஷரத்துக்கள் பாகிஸ்தானுக்குச் சாதகமாகவே இருப்பது நன்கு தெரியும். இந்தப் பரிவர்த்தனை விஷயத்தில் இந்திய சர்க்கார் காட்டியிருக்கும் தாராளத் தன்மையை எவ்வளவு பாராட்டினாலும் போதாது.

உதாரணமாகக் கடன் விஷயத்தில் அதிகச் சுமையை இந்திய சர்க்கார் ஏற்றுக் கொண்டு பாகிஸ்தானுக்கு நூற்றுக்குப் பதினேழுரை சத விகிதம் பளுவைத் தந்திருக்கிறது. அது மட்டுமா? அந்தச் சுமையைப் பாகிஸ்தான் சர்க்கார் உடனே ஏற்றுக் கொண்டு விடவேண்டிய அவசியமும் கிடையாது. ஐம்பது வருஷ காலத்தில் ஈடு செய்தால் போதும். ஆனால், மூலதனத்தின் பங்கை மட்டும் இப்போதே பாகிஸ்தான் அனுபவித்துக் கொள்ளலாம். இப்படி எல்லாம் பாகிஸ்தானுக்குப் பிரமாதச் சலுகை கொடுத்து, இந்திய சர்க்கார் தங்கள் இதயம் எப்படிப் பட்டது என்பதை இப் பரிவர்த்தனை மூலமாக நன்கு திறந்து காட்டி யிருக்கிறார்கள்.

இனியாவது பாகிஸ்தான், உள்ளத்தில் நஞ்சான நினைவுகள் வைத்துக் கொண்டு விஷம வேலைகளில் ஈடுபடாமல் இந்திய யூனியனுடன், சகோதர உணர்ச்சியுடனும், சமரச மனப்பான்மையுடனும் வாழ விரும்பும் என்று எதிர்பார்க்கிறோம்.

## இன்னொரு பாகிஸ்தான்!

பாகிஸ்தான் ஏற்பட்ட பிறகு, முஸ்லிம் லீக் ஸ்தாபனத்துக்கு அவசியம் இல்லை என்னும் உணர்ச்சி எங்கும் பரவி வருகிறது. பரவி வருவது மட்டுமல்ல; ஆக்ரா போன்ற இடங்களில் லீக் ஸ்தாபனங்களைக் கலைத்தும் வருகிறார்கள்.

அப்படிப் பட்ட நியாயமான உணர்ச்சி நமது சென்னை மாகாணத்திலும் சில லீகர்களிடையே ஏற்பட்டு வருவதைப் பார்த்தபோது மிகவும் சந்தோஷப் பட்டோம். அந்த உணர்ச்சி இன்னும் ஒரு படி மேலே போய், லீக் ஸ்தாபனம் கலைக்கப்படுவது மட்டுமல்லாமல் லீகர்கள் புத்திசாலித்தனத்துடன் காங்கிரஸில் சேரப் போகிறார்கள் என்றுகூடப் பேசிக் கொண்டார்கள்.

ஆனால், சென்னை லீகர்களிடையே இது பற்றி அபிப்பிராய பேதம் ஏற்பட்டு, அவர்களில் சிலர் கராச்சிக்குப் பறந்து போனார்கள். சரிதான், பாகிஸ்தானில் போய் குடி ஏறப் போகிறார்கள் போலிருக்கிறது என்று நினைத்தோம்! போனவர்கள் திரும்பி வரும்போது தலை வலி போய், திருகு வலியைக் கொண்டு வரப் போகிறார்களாம்! இனி முஸ்லிம் லீக் ஸ்தாபனத்தை, "பாகிஸ்தான் லீக்" "இந்திய முஸ்லிம் லீக்" என்று இரண்டு ஸ்தாபனங்களாகப் பங்கு போட்டுப் பாகிஸ்தான் செய்துவிடக் கராச்சியில் முடிவு செய்து விட்டார்களாம்!

இதை விட இந்திய முஸ்லிம்களுக்குப் பெரிய அவமானம் வேறு இல்லை என்று நினைக்கிறோம். பாகிஸ்தான் ஏற்பட்டபோது, மைனாரிடி முஸ்லிம்கள் பட்ட சந்தோஷமும், குதூகலமும் இவ்வளவு அவ்வளவு அல்ல. தங்களுக்குப் பெரிய இந்திரப் பதவியே கிடைத்து விட்டதாகப் பெருமைப் பட்டுக் கொண்டார்கள். ஆனால் பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் ஜின்னா இந்திய யூனியனிலுள்ள முஸ்லிம்களை "அங்கேயே இருங்கள்!" என்று ஒதுக்கித் தள்ளி விட்டார். எனவே, இங்குள்ள லீக் தலைவர்கள் தங்கள் லீக் ஸ்தாபனத்தைக் கலைத்துவிட்டுக் காங்கிரஸில் ஒருமுகமாகச் சேருவதுதான் சிறந்த வழி என்று யோசனை கூறுகிறோம்.



ஸ்ரீ ஜகஜீவன்ராம்

## கவனம் இருக்கட்டும்!

புது டில்லியில் மகாநாடு கூடி முடிவு செய்திருக்கும் இந்தியக் கைத்தொழில் சம்பந்தமான தீர்மானங்களை நமது தொழிலாளத் தோழர்கள் நன்றாகக் கவனிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். அவர்கள் மட்டுமல்ல, அசட்டுப் பிடிவாதத்துடன் ஒன்று மில்லாததற்கெல்லாம் வேலை நிறுத்தம் செய்பவர்கள், அவர்களைத் தூண்டி விடுபவர்கள், முதலாளிகள் எல்லோரையும் கவனிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இன்னும் மூன்று வருஷங்களுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் யாரும் வேலை நிறுத்தம் செய்யக் கூடாது; இதே மாதிரி, முதலாளிகளும் மூன்று ஆண்டுகள் வரை கதவடைப்புப் போன்ற கெடு பிடிகளில் இறங்கக் கூடாது; இம்மாதிரியான காரியங்களால் இந்தியாவின் உற்பத்திப் பெருக்கம் தடைப்படுகிறது என்று கைத் தொழில் மகாநாட்டில் காரசாரமாகத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி இருக்கிறார்கள்.

நாட்டு நலனிலும், முற்போக்கிலும், அக்கறை கொண்டுள்ள இந்திய யூனியன் மந்திரிகளும் பிரமுகர்களும் தொழில் தலைவர்களும் ஒன்று கூடி ஒருமனப்பட்டு செய்துள்ள தீர்மானத்தைச் சாதாரணமாக நினைத்துக் காற்று வாக்கில் விட்டு விடாமல் இருக்கும்படி தொழிலாளர்களையும், முதலாளிகளையும் ரொம்பவும் கேட்டுக் கொள்கிறோம்.

மேற்படி தீர்மானத்தை அலசிப் பார்த்து, அதை ஒப்பந்தமாக மாற்றி இந்திய சர்க்காரில் சட்டமாகக் கூடக் கொண்டு வரப் போகிறார்கள் என்று அறிகிறோம். தேச முன்னேற்றத்திற்கு இப்படிப்பட்ட வேண்டுகோளும், சட்டமும் அவசியமாக இருப்பதால், தொழிலாளர் உலகம் இதை முழு மனதுடன் வரவேற்கும் என நம்புகிறோம். 'தொழிலாளர்கள் உள்ளத்தை நாங்கள் நன்கு அறிவோம். அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்றுதான் இப்படி எல்லாம் சொல்லுகிறோம்' என்று இந்தியத் தொழில் மந்திரி ஸ்ரீ ஜகஜீவன்ராம் சொல்லி விட்ட பிறகு நாம் வேறு என்ன சொல்ல வேண்டும்?

**வெள்ளிமணியில் வெளியாகும் அரசியல் விஷயங்களில் காணப்படும் பெயர்கள் யாவும் நிஜப்பெயர்களே**

# மழையோ மழை!



நமது கிரிக்கெட் நிருபர்

இந்தியாவுக்கும், ஆஸ்திரேலியாவுக்கும் நடந்த முதல் கிரிக்கெட் 'டெஸ்ட்' டைப் பற்றி எழுதிய போது, "நமது ஆட்டக்காரர்கள் செல்லும் இடங்களுக்கெல்லாம் அவர்களைப் பின் தொடர்ந்து மழையும் செல்கிறது" என்பதாக எழுதி யிருந்தேனல்லவா? மழை நமது ஆட்டக்காரர்களைமட்டும்பின் தொடர்வதில்லை; பொதுவாகவே 'கிரிக்கெட் டெஸ்டு' களுக்கும் மழைக்கும் ரொம்பவும் ஒற்றுமை உண்டு என்று கிரிக்கெட் புராணம் 'டெஸ்ட்' காண்டம் கூறுகிறது.

சுமார் பத்து வருஷங்களுக்கு முன் இங்கிலாந்தில் மாஞ்செஸ்டர் என்னும் இடத்தில் இங்கிலாந்து கோஷ்டிக்கும், ஆஸ்திரேலிய கோஷ்டிக்கும் ஒரு 'டெஸ்ட்' நடப்பதாயிருந்தது. முதல் நாள் முழுவதும் மழை பெய்தது. பத்திரிகை நிருபர்கள் "மழை-'அவுட்'டாக வில்லை" என்று தந்தி யடித்தார்கள். இரண்டாம் நாளும் மழை பெய்து கொண்டே யிருந்தது. நிருபர்கள் "மழை-இன்னும் 'அவுட்'டாக வில்லை" என்று தந்தி கொடுத்தார்கள். மூன்றும் நாள் முழுவதும் மழை பெய்தது. அன்றுடன் 'டெஸ்டு'ம் முடிந்து விடவே, நிருபர்கள் "மாஞ்செஸ்டர் 'டெஸ்ட்' - மழையின் அமோக வெற்றி!" என்று எழுதினார்களாம்!

இந்தியாவுக்கும், ஆஸ்திரேலியாவுக்கும் நடந்த இரண்டாவது 'டெஸ்டைப்' பற்றி மேற்கண்ட விதம் தான் எழுத வேண்டி யிருக்கிறது. மொத்தம் ஆறு நாட்கள் ஆட்டத்தில் மூன்று முழு நாளைய ஆட்டம், மழையினால் பாழாயிற்று.

இந்தத் தடவை மழை இந்தியர்களுக்குச் சாதகமாய் இருந்தது. வெற்றி அநேகமாய் இந்தியாவுக்கே என்று இருந்த நிலைமை கடைசி நாளன்று மழையினால் மாறி, ஒருவருக்கும் வெற்றி-தோல்வி இல்லாமல் முடிந்தது.

'முதல் டெஸ்டி'ல் இந்தியர்கள் தோற்றதற்கு இரண்டு காரணங்கள் சொல்லப் பட்டன. 'பூவா, தலையா' பார்ப்பதில் அமர்நாத் தோற்றுப் போனது ஒரு காரணம் இதனாலேயே இந்திய கோஷ்டி மழையால் பாழடைந்த தரையில் ஆட வேண்டி வந்தது: இரண்டாவதாக, டோஷாக் என்னும் ஆஸ்திரேலியர் இந்தியாவின் முதல் 'இன்னிங்'ஸில் பதினெட்டு தடவைகள் மட்டும் பந்து வீசி, இரண்டே இரண்டு ஓட்டங்கள் கொடுத்து, ஐந்து பேரை வீழ்த்தினர். இந்த ஒரு விஷயமே இந்தியர்களின் உற்சாகத்தைப் பெரிதும் பாதித்து, அவர்களின் இறுதி வீழ்ச்சிக்குக் காரணமா யிருந்தது.

இரண்டாவது டெஸ்டிலோ டோஷாக்கினால் ஆட முடிய வில்லை. அமர்நாத்தும் 'பூவா, தலையா'வில், சரியாகக் கேட்டு, முதலில் இந்தியர்கள் ஆடுவதற்கு வழி செய்தார்.

முதல் நாள் ஆட்டம் ஆரம்பமான ஒரு மணி நேரத்திற்குள் மழை வந்து விட்டது. அதற்குள் இரண்டு இந்தியர்கள் 'அவுட்'டாயினர். அதுவரை 38 ஓட்டங்களே கிடைத்தன. எனவே, முதலில் ஆடும் சந்தர்ப்பம் கிடைத்தும், இந்தியர்களினால் அதைப் பயன் படுத்திக் கொள்ள முடிய வில்லை. மழை அவர்களை முந்திக் கொண்டு விட்டது.

இரண்டாம் நாளன்று பாழடைந்த மைதானத்தில் இந்தியர்கள் ஆடினர். முதல் 'டெஸ்டி'ல் ஆடினதை விட நன்றாக ஆடினார்கள் என்று தான் சொல்ல வேண்டும். குல்மஹமத், ஹஸாரே, அமர்நாத், கிஷன்சந்த் முதலியவர்கள் நன்றாக ஆடினர். இவர்களை யெல்லாம் விடப் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட பாட்கர் மிகவும் நன்றாக விளையாடி 51 ஓட்டங்கள் எடுத்தார். விளையாட்டு மைதானத்தின் நிலைமையைக் கொண்டு பார்த்தால் இந்தியர்கள் 188 ஓட்டங்கள் எடுத்தது அதிகம் என்றே சொல்ல வேண்டும். பந்து வீசின ஆஸ்திரேலியர்கள் எல்லோருக்குமே 'விக்கட்'டுகள் கிடைத்தன.

பிறகு ஆட வந்த ஆஸ்திரேலியர்களும் திணறினார்கள். ஆட்ட முடி

"மழை என்ன இப்படிப் பெய்கின்றதே!" என்று அமர் நாத்தும், ஹாஸெட்டும் சிரிக்கிறார்களா?



வில் அவர்கள் கணக்கில் இருபத்தெட்டு ஓட்டங்கள் மட்டுமே சேர்ந்தன. அதற்குள் ஒருவர் 'அவுட்'டாகி விட்டார்.

மூன்ருவது, நான்காவது தினங்கள் மழை பெய்து கொண்டேயிருந்தது. ஆட்டம் நடைபெற முடியாமல் போய் விட்டது.

ஐந்தாவது நாள், மழையும்விட்டுச் சிறிது வெயிலும் காயத் தொடங்கியது. அன்று தான் இந்தியர்கள் ஆஸ்திரேலிய கோஷ்டியை உண்டு, இல்லையென்று செய்து விட்டார்கள். 107 ஓட்டங்கள் எடுப்பதற்குள் ஆஸ்திரேலியர்கள் பாடு போதும் போதுமென்ருகி விட்டது. ஹஸாரேயும், பாட்கரும் நிலைமையை நன்கு பயன்படுத்திக் கொண்டு பிராட்மன் கோஷ்டியை அலற வைத்து விட்டார்கள். புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஜாமன்ஸ் என்பவர் தான் அதிகப்படியான ஓட்டங்கள் எடுத்தார்.

இரண்டாவது தடவையாக இந்தியர்கள் ஆடத் தொடங்கினர்கள். ஆஸ்திரேலியர்களுக்குத் தாங்கள் தோற்றவர்களில்லை என்று காட்டிக் கொண்டார்கள்! போன அவசரத்துடன் திரும்பி வந்தார்கள்.



அமர்நாத்

ஆட்களை அனுப்பும் வரிசைக்கிரமத்தை அமர்நாத் மாற்றினதால் தான் இப்படியாயிற்று என்று கூறப்பட்டது. எப்படியாஞல் என்ன? அன்றைய ஆட்ட முடிவில் இந்தியர்கள் ஏழுபேர் 'அவுட்'டாகி அறுபத்தோரு ஓட்டங்கள் மட்டுமே எடுத்திருந்தனர்.

கடைசி நாள், இந்திய கோஷ்டி வெற்றிபெறலாம் என்ற நம்பிக்கை இருந்தது. ஆனல் மழை அவர்கள் நெற்றியில் நாமத்தைப் போட்டு விட்டது. வெற்றி-தோல்வி யாருக்கும் இல்லாமல் ஆட்டம் வெகு சாதாரணமாக முடிந்து விட்டது.

சரியான சமயத்தில் நமது கோஷ்டியைக் கைவிட்ட மழையைப் பார்த்து "மழை வீழ்க!" என்று கோஷமிடலாம் என்ருல், அதுவும் மழைக்கு அல்லவா சாதகமாய்ப் போய் விடுகிறது! ஆகவே, மழைக் காலத்தில் இந்த 'டெஸ்டு' களை' ஏற்பாடு செய்வதை விட்டு விடுவது தான் உத்தமம் என்று தோன்றுகிறது.


# தமிழ் இசைச் சங்கம், சென்னை

## (1947-48 ஐந்தாவது விழா)

அரண்மனைக்காரத் தெரு, செயின்ட் மேரிஸ் மண்டபத்தில்

திறப்பு விழா 23—12—47 மாலை 4—25 மணி

திறப்பாளர்: சென்னை கல்வி அமைச்சர் கனம் டி. எஸ். அவிஞசிலிங்கம் செட்டியார் அவர்கள்

வரவேற்புத் தலைவர்: "கல்கி" ஆசிரியர் ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்

கீழ்க் கண்டவர்கள் இசை விருந்து அளிப்பார்கள்:

டிச: 23வ தமிழிசைக் கல்லூரி மாணவ மாணவிகள்; ஹேமா மாலினி—நடனம்


24வ தேசிகர் 25வ சித்தூர் 26வ எம். எஸ். சுப்புலட்சுமி

27வ மதுரை மணி 28வ கே. பி. எஸ் 29வ செம்பை

30வ ஆனந்தி-ராதா—நடனம் 31வ வசந்த கோகிலம்

1948 ஜன: 1வ ஜி. என். பி.



# டிப்டி தாசில்தார்

## நவீனன்

டிப்டி தாசில்தார் திரவியம் பிள்ளை சிங்கம்பட்டி முகாமில் இருந்த போது, அந்தச் சுற்றறிக்கை சுற்றிக் கொண்டு வந்து சேர்ந்தது.

'பைல்'களுக்கு நடுவே ஒளிந்து கொண்டிருந்த தங்க ப்ரேம் பிடித்த மூக்குக் கண்ணுடியைத் தேடி எடுத்து அறிக்கையை ஊடுருவிப் பார்த்தார். ஐந்து நிமிஷத்திற்குப்பிறகு "ரொம்ப அழகு தான்!" என்று தமக்குள்ளாகவே பேசிக் கொண்டார்.

'எது ரொம்பஅழகு?'என்பதைப் புரிந்து கொள்ள வேண்டுமாஞல் நாமும்அந்தஅறிக்கைக்குள்புகுந்து புறப்பட்டுத்தான் ஆக வேண்டும்.

வாசலிலே வில் வண்டி 'ஜல் ஜல்' லென்று எங்கேயோ புறப்பட அரை மணி நேரமாகக் காத்திருந்தது. 'அவருக்குப் பிடிக்கும்' என்று சொல்லி எந்தத் தோட்டத்திலிருந்தோ பறித்துக் கொண்டு வரப்பட்ட ஒரு கூடை வெள்ளரிப் பிஞ்சை சுமந்தபடி வெட்டியான் ஒருவன் வெளித் திண்ணைக் கருகே எவ்வளவோ நேரமாகக் காத்துக் கொண்டிருந்தான்.

பிள்ளைவாளின் சிந்தனை கலையவில்லை. மூடிய கண்கள் மூடியபடியே இருந்தன. அதற்குப் பதிலாக "உஸ் உஸ்" என்று சாரைப் பாம்பு சீறுவது போல உஷ்ணமான பெருமூச்சுகள்தான் அந்த அறை எங்கும் வியாபித்துக்கொண்டிருந்தன.

அறிக்கை அந்த ஜில்லா என். ஜி. ஓ. சங்கத் தலைவர் சங்கரலிங்கத்தினிடமிருந்து 'டைப்' அடிக்கப்பட்டு, டிப்டி தாசில்தாருக்கு வந்திருந்தது. அத்துடன் கூட ஒட்டிக் கொண்டு வந்திருந்த துண்டுக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்ததாவது:

"......பிள்ளைவாள் இருபத்து ஐந்து வருஷ காலமாகக் காருண்ய கவர்ன்மெண்டாருக்குப் பரம விசுவாசியாக இருப்பதை நாங்கள் நன்ருக அறிவோம். இருந்தாலும் 'ஊரோடு ஒத்து வாழ்' என்ற பழமொழியைத் தங்களுக்கு நினைவூட்டி இந்த ஸ்டிரைக்கில் முழு மனதுடன் இறங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேம். டிசம்பர் மீ 15-ந் தேதி வேலை நிறுத்தம் ஆரம்பமாகிறது...தங்களுக்கு ரொம்ப எடுத்துச் சொல்லத் தேவையில்லை என்று நினைக்கிறேம்."

சுற்றறிக்கையைச்சுருட்டி மடக்கிக்கையில்அமுக்கியபடி டிப்டி தாசில்தார் ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டார்.

திரவியம் பிள்ளை இன்று நேற்றுக் கற்றுக் குட்டி அல்ல. டிப்டி தாசில்தார் என்று ஒரு பதவி இவரைப் போன்ற ஆசாமிகளுக்காகவே சிருஷ்டிக்கப்பட்டதோ என்று நினைத்து வியப்படையும்படி உத்யோகம் வகிப்பவர். கோட்டை எடுத்துக் கம்பீரமாக மாட்டிக் கொண்டு, தலைப்பாகையை 'ஜம்' மென்று வைத்துக்கொண்டு சட்டைப் பையில் கெடியாரச் சங்கிலியை தொங்க விட்டபடி வண்ணம் முகாமிற்குக் கிளம்பி விட்டாராஞல், அந்தச் சிங்கம்பட்டி சர்க்கிளே கிடு கிடுவென்று நடுங்கும். எந்த ராஜா எந்தப் பட்டணம் போஞலும், போகா விட்டாலும் அவருக்குக் கவலை இல்லை. அவரால் அரை நிமிஷம் கூட 'முகாம்' போகாமல் இருக்க முடியாது. கிராமக் கர்ணம், முனிசீப்புக்களை விரட்டி வேலை வாங்காமல் வெறுமனே இருக்க முடியாது. வரி வசூல் விஷயத்தில் கிட்டத் தட்ட ஒரு குட்டி நட்சத்திரையஞக விளங்கி வந்தார் என்ருல் அது மிகையல்ல. அத்துடன் அவரது பெயருக்கும், சட்டைப் பைகளின் கனத்திற்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு என்று விஷய மறிந்த வட்டாரம் பேசிக் கொள்வது வழக்கம்.

பதவியில் அப்படியாக ஊறிப் போன திரவியம் பிள்ளையை ஏதோ அறிக்கை "டிசம்பர் மீ 15-ந் தேதி வேலை நிறுத்தம் செய்." என்று கெடுபிடி செய்தால் அவருக்கு எப்படி இருக்கும்?

திரவியம் உண்மையில் தவித்துத் தான் போஞர். தலைப்பாகையைக் கழற்றி, சுழற்றி மேஜை மீது அடித்து, "இது என்ன கூத்து? இது என்ன அவஸ்தை!" என்று அலுத்துக் கொண்டார். அந்த அலுப்பில், 'இப்படிக் கன்று கூடிக் களம் பறிப்பதில் நாமும் சேர்ந்து கொள்வது அவசியந்தாஞ?' என்ற கேள்வி எழுந்து, பிள்ளைவாளைக் கசக்கிப் பிழிய ஆரம்பித்து விட்டது.

இப்படிப்பட்ட தர்ம சங்கடத்தில் டிப்டி தாசில்தார் சிக்கிச் சுழன்று கொண்டிருந்த சமயம்

பார்த்து,எங்கிருந்தோ,ஒரு லொட லொட்டைக் காரில் என். ஜி. ஓ. தலைவர் சங்கரலிங்கம், "ஹலோ!" போட்டுக் கொண்டு அவரைத் தேடி வந்துசேர்ந்தார்.

என். ஜி. ஓ. தலைவரைக் கண்ட போது, திரவியத்திற்கு யமனைக் கண்டது போலிருந்தது. வந்தவர் ரொம்ப நேரம் தாமதிக்காமல், "புறப்படுங்கள், பிள்ளைவாள்! புறப்படுங்கள்!" என்று அவரது கையை உரிமையுடன் பிடித்து இழுத்துத் தமது மோட்டாருக்குத் தள்ளிக் கொண்டு போனார். அந்தப் பெரிய வட்டாரத்தையே 'ஜப்தி' செய்யும் உரிமையுள்ள தம்மை, இப்படி ஒரு பேர்வழி திடும் பிரவேசமாய் ஜப்தி செய்து கொண்டு போவது திரவியத்திற்கு, உண்மையில் ஆச்சர்யமாகத்தான் இருந்தது!

சங்கரலிங்கம் வலுக் கட்டாயப்படுத்தி பிள்ளைவாளை ஒரு பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்க ஏற்பாடு செய்து விட்டார். "எல்லாம் தங்களை வைத்துத் தான் இந்த ஜில்லாவையே சரிப் படுத்த வேண்டி இருக்கிறது. இருபத்தைந்து வருஷம் சர்விஸ் ஆன தாங்கள் இவ்வளவு கிணற்றுத் தவளையாகவும், கோழையாகவும் இருக்கலாமா?" என்று என்னென்னமோ சொல்லி, தட்டிக் கொடுத்து சிங்கம்பட்டி சர்க்கிளுக்கு டிப்டி தாசில்தாரையே வேலை நிறுத்த சர்வாதிகாரியாக்கி விட்டும் போய் விட்டார், சூரப் புலி சங்கரலிங்கம்.

திரவியம் பிள்ளைக்குத் தான் எப் போதுமே ஒரு சர்வாதிகாரியாக இருக்கப் பிரியந்தான். அவர் ஏற்கெனவே சிங்கம்பட்டி வட்டாரத்துக்குச் சர்வாதிகாரியாகத் தான் இருந்து வந்தார். இருந்தாலும், இந்த ஸ்டிரைக் வியாதி தன்னைப் பிடித்துக் கொள்ளாது, என்று நினைத்துக் கொண்டிருந்தது போக,தானே போய் அதில் சிக்கிக் கொள்ளும்படி யாகிவிட்டதே? இதற்கு எப்படி இடம் கொடுத் தோம் என்று யோசித்துப்பார்த்து ஆச்சர்ய மடைந்தார்.

சூரப்புலி சங்கரலிங்கம் திரவியத் திற்குத் தீவிரமாக 'ஸ்குரு' கொடுத்து விட்டுப் போயிருந்தது தான் இவ்வளவு மனமாற்றத்திற் குக் காரணமாகும். "தாங்கள் வாழ் நாள் பூராவும் டிப்டி தாசில் தாராகவே தான் இருக்க வேண்டுமா? என்றைக்குத் தாசில்தாராக ஆகி,டிப்டிகலெக்டராக மாறுவது? இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது. அதைத் தகர்ந்து எறியவும், தங்களுக்கு அதிகச் சம்பளம் கிடைக் கவும் இந்த ஸ்டிரைக்கே சரி யான ஆயுதம்" என்றெல்லாம் டிப்டி தாசில்தாரை நன்ருக முடுக்கி விட்டுப் போய் விட்டார் என். ஜி. ஓ. சங்கத் தலைவர்.

திரவியம் பிள்ளையின் மூளை தீவிர மாக வேலை செய்ய ஆரம்பித்தது. "சரி! ஸ்டிரைக் செய்ய வேண் டியது தான்!" என்று முடிவு கட்டி விட்டு மூக்குக் கண்ணுடிக் கூடை 'டப்' பென்று மூடினர். அதற்குப் பிறகு அவர் அந்த ஜில் லாவின் மூலை முடுக்குகளி லெல் லாம் புகுந்து நுழைந்து,ஒவ்வொரு சர்க்கார் சிப்பந்திகளையும் தட்டி எழுப்பி, வேலை நிறுத்தம் செய்யத் தூண்டினர். "யார், டிப்டி தாசில்தார் திரவியமா? நம்ப முடி யவில்லையே!" என்று தாலுகா ஆபீஸ் டபேதார்கள் வரையில் கண்களை மலர விழித்து ஆச்சரி யப் பட்டார்கள்.

டிசம்பர் மாதம் 14ந் தேதி இரவு டிப்டி தாசில்தார் திரவியம் தாலுகா ஆபீஸில் ஒப்படைக்க வேண்டிய ரிகார்டுகளை எல்லாம் சேர்த்துக் கட்டுவதிலும், சர்க்காருக்குச் சொந்தமான ரிகார்டு பெட்டிகளிலுள்ள தமது சொந்த சாமான்களை அப்புறப் படுத்துவதி லும் ஈடுபட்டிருந்த போது அவருடைய அருமை மனைவி அம்புஜம் அம்மாள் அருகே வந்து நின்ருள்.

திரவியம் தலை நிமிர்ந்து மனைவி யைப் பார்த்து விட்டு, "என்ன அம்புஜம்! உனக்கு ஏதாவது புரி கிறதா?" என்று கேட்டார்.

"ஆமாம், தலையாரி தொப்பளான் சொன்னன். இது என்ன கூத்து?" என்று கன்னத்தில் கையை வைத்துக் கொண்டே கேட்டாள் டிப்டி தாசில்தாரிணி.

"கூத்து என்னம்மா! எழுபதினுயிரம் பேரில் நானும் ஒருவன். நான் வேலை நிறுத்தம் செய்வதில் தப்பு என்ன?" என்று மனைவி யுடன் 'பாலிடிக்ஸ்' பேச ஆரம் பித்தார் திரவியம்.

"எனக்கு என்னமோ, சுத்தமாப் பிடிக்கவே இல்லை. நீங்கள் வேலை நிறுத்தம் செய்யப்போக எனக்குஇவ்வளவு காலமாக இருந்துவரும்'டிப்டிதாசில்தார்மனைவி' என்ற கௌரவம் போய்விடும் போலிருக்கிறது! பிறரை அதிகாரம் செய்து பழகிப் போன எனக்கு இது என்னமோ போலிருக்காதா? இல்லை, உங்கள் நிலைமையைத் தான் யோசித்துப் பாருங்களேன்! ஒரு நிமிஷம் 'பதவி' இல்லாமல் உங்களால் இருந்துவிட முடியுமா?" இவ்வாறு பொரித்துக் கொட்டினுள் அம் புஜம்மாள்.

திரவியம் மறுபடியும் சிந்தனை யில் ஆழ்ந்தார். அம்புஜத் தின் 'பாயிண்ட்' நூற்றுக்கு நூறு பங்கு சரி என்று பட்டது அவருக்கு.

"ஆமாம், எல்லோரும் என்னத் திற்காக ஸ்டிரைக் செய்தார்கள்? சம்பளம் போதவில்லை, பஞ்சப் படி வேண்டும் என்பதற்காகத் தானே? ஆனல் நான் சர்க்கார் கொடுக்கும் சம்பளத்திலா இவ்வளவு காலமாக வாழ்கிறேன்? அந்தக் கடுகு என் கோட்டுப் பைக்கு எந்த மூலைக்கு......? ஆகையால் யாரோ சொல்லுகிருர் கள் என்பதற்காக நான் ஸ்டிரைக் செய்ய முடியுமா?......முடி யாது! முடியவே முடியாது!"


பிறகு தமது மனைவியை அருகில் அன்போடு அழைத்து "அம்புஜம்! நீ என்றுமே டிப்டி தாசில்தார் சம் சாரம்தான். அதற்கு ஒரு குறை வும் வந்துவிடாது" என்று உறுதி கூறினர்.

* * *

மறுநாள் காலை பொல பொல வென்று பொழுது விடிந்த போது, டிப்டி தாசில்தாரின் வில் வண்டி ஜல்ஜல்லென்று குலுங் கிக் கொண்டு கிளம்பியது. ஊரிலுள்ளவர்கள் எல்லாம், தமது 'சார்ஜை' தாசில்தாரிடம் ஒப்ப டைக்க, திரவியம் கிளம்பி விட் டார் என்று பேசிக் கொண் டார்கள்.

ஆனல் தாலூகாக் கச்சேரி வாச லிலே இன்னொரு ஆச்சர்யம் நடந் தது. டிப்டி தாசில்தார் திரவியம் பிள்ளை வழக்கம்போல தமது ஆபீஸ் அறைக்குள் கம்பீரமாக நுழைந்து மள மளவென்று அலுவல்களைக் கவனிக்க ஆரம்பித்தார்!





# விசிறிகள்

சுபபஜீ

ஓங்கி வளர்ந்த பனை மரத்தைப் பார்க்கும் போதெல்லாம் அதன் உயரத்தைப் பற்றிய பிரமிப்பு எனக்குத் தோன்றுவதில்லை. அதன் உச்சியில் காணப்படும் ஓலைகளினின்றுதயாரிக்கப்படும் கணக் கற்ற விசிறிகளின் ஞாபகம்தான் பளிச்சிடுகிறது.

கார் மேகங்கள் சூழ்ந்த வானத் தைக் கண்டு களிநடனம் புரியும் மயூரத்தின் தோகை போல விரிந்து கிடக்கும் விசிறிகளின் அமைப் பையும், அழகையும் என்னவென்று வருணிக்க? ஓலை விசிறி, மயில்தோகை விசிறி, மடக்கு விசிறி, வர்ணக் காகித விசிறி என்று அவைகளில் தான் எத்தனை வகை?



விசிறியின் அளவும் வேலைப்பாடும் எவ்வளவுக் கெவ்வளவு அதிகரித் துக் கொண்டே வருகிறதோ, அவ் வளவுக்கவ்வளவு அதன் சொந்தக் காரருடைய பெருமையும் உயர்ந்து வருகிறது. பழைய காலத்து அரசர் களது சிம்மாசனத்தின் பக்கத்தில் இரு சேடியர்கள் பிரம்மாண்ட மான விசிறிகளைக் கம்பீரமாகப் பிடித்துக் கொண்டு நிற்பதை இப் போதும் சினிமாவில் காண்கி ரோம். உத்சவ காலங்களில் வெளிப் புறப்படும் சுவாமிக்கு இருவர் வேலைப்பாடமைந்த வெள்ளி விசிறி கள் தாங்கி வருவது சாதாரண மாக நாம் காணும் காட்சி. இன் னும் சில 'பெரிய' மனிதர்க ளுடைய வீடுகளில். வேலைக்காரர் கள் மயில் தோகை விசிறிகளை அடக்க ஒடுக்கமாகச் சுழற்றுவ தைக் கண்டு, அவர்களுடைய அந் தஸ்தை நினைத்து ஆச்சரியத்தில் மூழ்கிப் போகிரோம்.

இவ்வாறு சொந்தக்காரர்களுக் குப் பெருமையை விளைவிக்கும் விசிறிகள் நமது தினப்படி வாழ்க் கையில் எவ்வளவு உபயோகமாக இருக்கின்றன, தெரியுமா? காலை யில் எழுந்தது முதல், இரவு தூங் கும் வரையில் நமக்குப் பலவிதங் களில் பயன்படும் விசிறிகளின் முகத்துவத்தை என்னவென் பது?

இரவானுலும் பகலானுலும், அசைவற்று இருக்கும் ஆகாயத்தில் சலனத்தை உண்டாக்கி, வியர்வையினுல் புழுங் கிக் கிடக்கும் ஆத்மாவிற்கு ஆறுதல் அளிக்கக் கூடியது விசிறிகள்தான்! அதிகக் காற் ரேட்டமில்லாத அறையில் படுத்துக் கொண்டு அவஸ்தைப் படும் ஆசாமி அவதி தீர உறங்க வேண்டு மென்ருல் விசிறி இல் லாமல் முடியுமா? கொளுத்துகின்றவெயி லிலே கால் வீசை சர்க்கரைக்காகக் கால் கடுக்க 'க்யூ'வில் நின்ற மனிதர் இறுதியில் வெறுங்கையோடுவீட் டிற்குள் நுழைந்ததும் நுழையாததுமாக விரும்பித்தேடுவது விசிறிதான் என்பது சொல்லாமலேயே தெரிய வரும். வியர்வை ஆருகப் பெருகுகின்ற கோடை காலத்தில் விசிறி இல்லா விட்டால் நாம் திக்கு முக்காடித்திணறிப் போகிரோம்.

காப்பிக் கொட்டை அகப்படு கிறதோ இல்லையோ, காலையில் நாம் எழுந்ததும் எழுந்திருக்காததுமாக நம் மனைவி 'சுடச்சுட' ஒரு 'கப்' காப்பியைக் கொண்டு வந்து நம் முன்னுல் சமர்ப்பித்து விடவேண்டு மென்று பிடிவாதமாக விரும்புகி ரோம். ஆனுல், அந்தப்புகையும் அடுப் புடனே அல்லல்பட்டு ருசியான அந்தக் காப்பியைத் தயார் செய் வதற்காக நமது பெண்மணிகள் படும் கஷ்டத்தைக் கொஞ்சமாவது கற்பனை செய்து பார்த்திருக்கி ரோமா? விசிறி என்ற ஒரு வஸ்து மட்டும் இல்லாவிட்டால் அடுப்புப் பற்ற வைக்கும் பணி எவ்வளவு சிரம சாத்தியமானது ஆகிவிடும் என்பதை 'அந்தப்புரத்தை'க் கேட் டாலல்லவா, தெரியும்?

ஆபீஸ் புறப்படவிருக்கும் நமக்கு அதி வேகமாகச் சமையல் செய்வ தில் முனைந்திருக்கும் கிருகலட்சு மியை அடிக்கடி தொந்தரவு செய் யும் குழந்தைகளை ஒரு விதமாக அடக்கி ஒடுக்கி, ஆள்வதற்கு ஆயுதமாக இருப்பதும் இந்த விசிறி கள்தான் என்ருல் பிரமித்து விடா தீர்கள்! அடுப்புப் பற்ற உபயோக மாகும் அதே விசிறியைத் திருப் பிக் கொண்டு அதன் காம்பினுல் நாலடி போட்டவுடன், விசித்து விசித்து அழும் அந்தக் 'கோட் டான்'கள் ஏன் அந்தப் பக்கம் அப்புறம் திரும்புகின்றன?

அது போகட்டும்; பரக்கப் பரக் கச் சாப்பிட உட்கார்ந்ததும் நம் கலத்தில் அப்பொழுதுதான் வடித்த ஆவி பறக்கும் சாதத்தைப்போட்டால், பொங்கும் நம் சினம் கங்குகரை யில்லாமல் சென்று விடுகிறதல்லவா? ஏறிக் கொண்டே போகும் நம் கோபத்தைப் போல் கொதிக் கும் அவ்வுணவை ஆற வைக்க வேண்டுமானுல் அருகில் கிடக்கும் விசிறியை எடுத்துச்சுழற்று கிரோம். அவ்வளவுதான். ஐந்தே நிமிஷங்களில் நம் சாப்பாடும் முடிந்து, கோபமும் தணிந்து விடுகிறது.



அதற்குப் பிறகு ஆபீஸ் போய்ச் சேருவதற்குள் அலை மேல் அலை

யாக வரும் எவ்வளவோ இன்னல் களுக்கு ஆளாகிறோம். ஓட்டமும் நடையுமாகப் பஸ்ஸைப் பிடித்து, நெல்லிக்காய் மூட்டை போல அடைந்து கிடக்கும் கூட்டத்தில் இடிபட்டு, ஏகப்பட்ட இடையூறு களைச் சமாளித்துக் கொண்டு காலதாமத மாக ஆபீஸ் செல்வ தற்குள் நம்முடலில் உயிர் இருக்கிறதா என்பதைப் பற்றி நமக்கே சந்தேகம் வந்து விடுகிறது. காரி யாலயத்தை அடைந் தது தான் தாமதம். 'அப்பாடா!' என்று களைத்துப் போன இந்த உடலை நாற் காலியில் கிடத்தி, மின்சார விசிறியின் விசையைக் கடைசி எல்லை மட்டும் திருப்புகிறோம்! தலைக்கு மேலே சுழலும் விசிறி, வியர்த்து வழியும் இவ்வுடலுக்கு எவ்வளவு புத் துணர்வு அளிக்கிறது? கை வலிக்க



கட்டை விசிறியைச் சுற்றிக் கொண்டிருக்கும் கஷ்டம் போய், மின்சார விசிறியைக் கண்டு பிடித்த புண்யாத்மாவை, குளிர்ந்த நமது உள்ளம் மனமார வாழ்த்த நினைக்கிறது!

இந்த மின்சார விசி றிகள் சினிமாக் கொட்டைகளில் செய்யும் உதவி இவ் வளவு அவ்வளவு அல்ல. இருள் சூழ்ந்த அக்கட்டிடத்தில்மின் சார விசிறிகள் மட் டும் இல்லாவிட்டால், கொட்டகைக்குள் சிகரெட் புகையில் திணறிப் போய்விட மாட்டோமா? வெகு வேகமாகச் சுழன்று கொண்டு, காற்றை அள்ளி நம் மீது வீசும் விசித்திர மான அவ்விசிறியின் கீழ் அமர்ந்து கொண்டு, பலமான மூட்டைப் பூச்சிக் கடியானாலும், கடூரமான சினிமா சங்கீதமானா லும் மணிக்கணக்காக அநுபவிக் கத் தயாராக இருக்கிறோமல்லவா?

இதைத் தவிர, வீட்டிலோ வெளி யிலோ, யாராவது மயக்கத்தினால் விழுந்து விட்டார்கள் என்றால் நாம் அவருக்குச் செய்யும் முதல் உதவி என்ன? சடாரென்று 'குடம் தண்ணீரை அவர் முகத்தில் கொட்டிவிட்டு எங்கிருந்தோ ஒரு பழம் விசிறி ஒன்றைத் தேடிப் பிடித்து விசிற ஆரம்பிக்கிறோம். இவ்வாறு முன் பின் தெரியாமல் மூர்ச்சித்தவர்களையும், ஆயாசத்தி னால் அடியற்ற மரம் போல் சாய்ந் தவர்களையும் உடனுக்குடன் எழுப் பக்கூடிய அமரசக்தி வாய்ந்த இந்த விசிறிகளை வாயாரப் போற்றுவதில் தவறு என்ன இருக்கிறது?

இங்ஙனம் எண்ணற்ற விதங் களில் உபயோகமாக இருக்கும் விசிறியின் அழகைக் கண்டுதானோ என்னமோ சில 'நாகரிகப் பிச்சுக் கள்' தங்கள் அங்க வஸ்திரத்திலும் அணிந்து கொள்கிறார்கள். விசேஷ காலங்களில் அல்லவா பார்க்க வேண்டும், இந்த மடிப்பிற்குள்ள தனி மதிப்பை? நலுங்காமல் ஒரு 'சில்க் ஷர்ட்'டைப் போட்டுக் கொண்டு, அதன் மேல் நாசுக்காக ஒரு விசிறி மடிப்பு அங்க வஸ்திரத் தையும் சுற்றிக் கொண்டு விட் டால், அவர்களுக்கு எங்கேயோ சுவர்க்க லோகத்தில் இருப்பது போலத்தான் எண்ணம்.

இது நிற்க; 'விசிறிகள்' என்ற பதத்தை இன்னொரு சந்தர்ப்பத்தி லும் கேள்விப்படுகிறோம். குறிப்பிட்ட ஓர் ஆசாமியைப் புகழ்ந்து கொண்டு, அவருடைய செயல்களைப் போற்றிக் கொண் டிருக்கும் பிரகிருதிகளை 'அவரு டைய விசிறி' என்றழைக்கும் வழக்கத்தை யார்தான் முதன் முதலில் கொண்டு வந்தார்களோ தெரியவில்லை! இன்றைக்குப் பார்த் தால் 'சினிமா விசிறி' 'நடிக விசிறி' போன்ற பதங்கள் சர்வ சாதாரண மாக அடிபடுகின்றன.

எது எப்படி யிருந்தால் என்ன? "இந்த விசிறிக் கட்டுரை ரொம்ப நன்றாக இருக்கின்றது" என்று அடி யேனுடைய 'விசிறிகள்' எல்லாம் ஒருமுகமாக அபிப்பிராயம் கொடுத்து விட்டார்களானால், அதுவே எனக்குப் போதுமானது.


GUIDES AS LIGHT & GUARDS AS FORT
MIDLAND INSURANCE CO. LTD.

**மிட்லண்டு இன்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்**

தலைமை ஆபீஸ்: 13-14, செகண்டு லேன் பீச், சென்னை

டைரக்டர்கள்:

ஸ்ரீ. கே. வெங்கடசாமி நாயுடு பி.ஏ., பி.எல்., டெப்டி பிரசிடெண்ட், மெட்ராஸ் லெஜிஸ்லேடிவ் அசெம்பிளி

ஸ்ரீ. எம். சத்திய நாராயணா செக்ரடரி, இந்துஸ்தானி பிரசாரசபா, மதராஸ்

ஸ்ரீ. சி. சுப்பிரமணியம் பி. ஏ., பி. எல்., கோயம்புத்தூர், மெம்பர் கான்ஸ்டிட்யூயன்ட் அசெம்பிளி

ஸ்ரீ. ஆர். ரவை மாணிக்க முதலியார், ப்ரொப்ரைட்டர், ரவை அண்டு சன்ஸ், மதராஸ்

ஸ்ரீ. ஏ. வி. ராகவ ராவ் எம். எஸ். சி., பி. ஈ., பெஜவாடா

டைரக்டர், தி ஜெயபூர் ஷுகர் கம்பெனி லிட்,
தி ஜெயபூர் மைனிங்சின்டிகேட் லிட்.

இக்கம்பெனியில் நீங்கள் ஒரு பாலிசி எடுப்பதும், அல்லது கம்பெனியின் பிரதிநிதியாக இருப்பதும் உங்கட்கு நன்மையையே பயக்கும். விவரங் கட்கு எழுதவும்.

அ. வெ. தியாகராஜா, ஜெனரல் மானேஜர்.





ஆரும் அத்தியாயம்

## எஜமானியின் உத்தரவு

தேவகி எழுந்து போய்க் கதவைத் திறந்த போது மிஸஸ் ஜனார்த்தனம் வெளியே நின்று கொண்டிருந்தாள். அவள் முகத்திலே கோபக்குறிகாணப்பட்டது. எதிர்பாராத நேரத் தில் அந்த அம்மாள் அங்கே வந்து கோபமாக நிற்பதைக் கண்டதும் தேவகிக்குச் சற்று நேரம் திகைப்பா யிருந்தது. மிஸஸ் ஜனார்த்த னம் வாசற்படியில் நின்ற வாறே கோபத்து டன், "சாந்தினி! இத்தனை நேரமாக என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? உனக்கு எத்தனை நாள் சொல்லுவது? இரவு பத்தரை மணிக்கு மேல் கண் விழித்துப் படிக்கக் கூடாது என்று டாக்டர் சொல்லி யிருக்கிறாரல்லவா? என்று கடிந்து கொண்டாள். சாந்தினி, "இல்லை அக்கா, இனிமேல் படிக்கவில்லை," என்று அடக்கமாகவும் விநயமாகவும் பதில் கூறவே, மிஸஸ் ஜனார்த்தனத்தின் கோபம் சற்றுத் தணிந்தது.

"இன்னொரு தடவை நீங்கள் இருவரும் இம் மாதிரி பத்தரைக்கு மேல் தூங்காமல் இருப் பதைக்கண்டால் என்ன செய்வேன் தெரியுமா? உன்னைக் காலேஜ் ஹாஸ்டலிலேயே கொண்டு சேர்த்து விடுவேன். தேவகி, உனக்கும் தான் சொல்கிறேன்; ஜாக்கிரதை! உன்னையும் வேலையை விட்டுப் போகச் சொல்ல வேண்டி யது தான்" என்று கடுமையான உத்தரவு போட்டு விட்டுக் கீழே இறங்கிச் சென்று விட் டாள். தேவகியின் உள்ளம் எஜமானியம்மா ளுடைய வார்த்தைகளைக் கேட்ட போது பயத் தால் படபடத்தது. "ஐயோ, என்னை வேலையை விட்டுத் தள்ளி விட்டால் நான் என்ன கதி ஆவது?" என்று எண்ணியதை நினைத்து உள்ளம் கலங்கினாள். "இனிமேல் எந்தக் காரணத்தைக் கொண்டும் இரவில் கண் விழிப்ப தில்லை; சாந்தினி விளக்கேற்றித் தரச் சொன் னாலும் தருவதில்லை" என்று தேவகி திட சங்கல்பம் செய்து கொண்டாள்.

மிஸஸ் ஜனார்த்தனம் கீழே சென்ற ஐந்து நிமிஷம் கழித்து தேவகி சிந்திக்கத் தொடங்கி னாள். அந்த நேரத்தில் எஜமானி அம்மாள் அங்கே வந்து எச்சரித்து விட்டுப் போனதற்கு என்ன காரணம்? தேவகி தன்னுடைய சந்தே கத்தைசாந்தினியிடம்தெரிவித்துக்கொண்டாள் "அதுவா? ஒன்பதரை மணி 'ஷோ'வுக்கு ஏதாவது சினிமாப் பார்க்கச் சென்றிருப்பார் கள். சினிமா முடிந்து வீட்டுக்குத் திரும்பி வரும் போது மேல் மாடியில் நம் அறைக்குள் வெளிச்சம் தெரிந்திருக்கும். அதைக் கண்டு விட்டுத் தான் மேலே வந்திருக்கிறாள். இனி மேல் இரவில் கண் விழித்துக் கொண்டிருப் பதைப் பார்த்தால் ஹாஸ்டலில் கொண்டு




போய்ச் சேர்த்து விடுவாளாமே? ஐயோ, அம்மா! அந்த ஹாஸ்டல் தலைவி அன்னபூரணி தேவி மகா பொல்லாதவளாயிற்றே? அங்கே போய் யார் அடிமை மாதிரி வாழ முடியும்? தேவகி, அது மட்டுமா? உன்னைப் பிரிந்து நான் இனி ஒரு கணமும் இருக்க மாட்டேன்" என்று சகோதர வாத்சல்யத்துடன் கூறினாள் சாந்தினி. தன்னிடம் சாந்தினி வைத்துள்ள உள்ளன்பைத் தெரிந்து கொண்ட போது தேவகிக்குச் சற்று ஆறுதலாயிருந்தது.

இந்த உலகத்தில் தன் தந்தைக்கு அடுத்த படியாகத் தன்னிடம் ஆசையும் பாசமும் கொண்டு நேசிக்கும் உயிர்த் தோழியான சாந்தினியிடம் தேவகிக்கு அளவிலா வாஞ்சை பிறந்தது.

மறு கணம் தன்னுடைய துரதிர்ஷ்டத்தைப் பற்றியும் நினைத்துக் கொண்டாள். "ஐயோ, சாந்தினியும் என்னை விட்டுப் பிரிந்து விடாமலிருக்க வேண்டுமே" என்று பயந்து நடுங்கினாள். மறு தினம் முதல் சாந்தினியை எந்தப் பாடுபட்டாகிலும் பத்து மணிக்கெல்லாம் தூங்கச் செய்துவிட வேண்டும் என்று தீர்க்கமாக முடிவு செய்து கொண்டாள். ஆனால் சாந்தினி தன் பேச்சைக் கேட்க வேண்டுமே? சந்திரநாத் எழுதிய புதிய நாவலை இருபதாவது அத்தியாயத்தில் அல்லவா விட்டிருக்கிறாள்? கதை ரொம்பவும் சுவாரஸ்யமான கட்டத்துக்கல்லவா வந்திருக்கிறது?

மேற்படிக் கதையில், பலாத்காரமாகச் சிறை வைக்கப்பட்டிருக்கும் கதாநாயகியை அவளுடைய காதலன் உளவு அறிந்து வந்து தப்புவிக்க முயற்சிக்கின்றான். இந்த முக்கியமான கட்டத்தைப் படித்துக் கொண்டிருந்த போது தான் சிவ பூஜையில் கரடி நுழைந்த மாதிரி மிஸஸ் ஜனார்த்தனம் குறுக்கிட்டாள்.

தேவகி எதிர் பார்த்தது போலவே, சாந்தினி மறுநாளும் அதற்கு மறுநாளும் தொடர்ந்து படித்துக் கொண்டே தான் இருந்தாள். தேவகி தன்னாலான மட்டும் கெஞ்சிப் பார்த்தாள். சாந்தினி கேட்கவில்லை. தேவகி சொன்னதெல்லாம் அவளுக்கு நியாயமாகப் பட்டாலும் கதையின் சுவாரஸ்யம் சாந்தினியை அவ்வளவு தூரம் கவர்ந்திருந்தது. எனவே, தேவகி சாந்தினி படிக்கும் நேரங்களில் ஜன்னல் கதவுகளையெல்லாம் அடைத்துக் கொக்கி போட்டு மூடி, வெளியிலிருந்து பார்த்தால் துளி வெளிச்சம் கூடத் தெரியாதபடி இருட்டடிப்புச் செய்து வந்தாள்.

ஏழாம் அத்தியாயம்

## நடன் கோஷ்டி விஜயம்

ரத்ன வில்லாவில் அன்று ஒரு விசேஷ விருந்துக்கு ஏற்பாடு நடந்து கொண்டிருந்தது. மாலையில் பம்பாயிலிருந்து ஒரு நடன கோஷ்டி விஜயம் செய்யப் போவதாகவும், ரத்ன வில்லாவில் மேற்படி கோஷ்டியின் மணிபுரி நடனம் நடைபெறப் போவதாகவும் ஒரே பேச்சாக இருந்தது. மேற்படி நடன கோஷ்டியார் சமீப காலத்தில் மேடை ஏறியவர்கள். இப்போது தான் அகில இந்திய சுற்றுப் பிரயாணம் தொடங்கியிருக்கிறார்கள். இந்தக் குறுகிய காலத்துக்குள் மகத்தான புகழும் பிரக்யாதியும் பெற்றிருந்தார்கள். கலைத் துறையில் பிரக்யாதி பெற்றவர் யாராயிருந்தாலும் ஜனார்த்தனம் தம்பதிகளுக்கு அறிமுகமாகாமலிருக்க முடியாதல்லவா? எனவே, ஜனார்த்தனம் தம்பதிகள் அழைப்பின் பேரில் பம்பாய் நடன கோஷ்டியார் ரத்ன வில்லாவுக்கு விஜயம் செய்திருந்தார்கள். இரண்டு மாத காலம் ரத்ன வில்லாவிலேயே ஜனார்த்தனம் தம்பதிகளின் விருந்தினர்களாய்த் தங்குவதென்றும் முடிவு செய்திருந்தார்கள். மேற்படி கோஷ்டியில் அநேக நாட்டியப் பெண்களும், இளைஞர்களும், கலைஞர்களும் இருந்தனர்.

மாலை நாலு மணி சுமாருக்கு பம்பாய் நடன கோஷ்டியின் மணிபுரி நடனம் ரத்ன வில்லா மேல் மாடி ஹாலில் ஆரம்பமாயிற்று.


சந்திரகிரி நகரத்திலிருந்து முக்கியமான பிரமுகர்களும், மிஸஸ் ஜனார்த்தனத்தின் சிநேகிதர்களும் கச்சேரிக்கு அழைக்கப் பட்டிருந்தார்கள். பங்களா வாசலில் சுமார் ஐம்பது மோட்டார்களுக்கு மேல் காத்திருந்தன.

ரத்ன வில்லா பங்களாவைச் சேர்ந்த வேலைக்காரர்களும், சமையல்காரர்களும் மூச்சுவிட நேரமின்றி விருந்துபசாரத்தில் ஈடுபட்டிருந்தார்கள். தேவகிக்கு தோட்டத்து நீர்த் தொட்டியில் ஜலம் நிரப்பும் வேலைக்கே நேரம் சரியாக இருந்தது. மாடியிலிருந்து வந்த கோஷ்டி வாத்தியங்களின் இனிமை மிகுந்த கீதங்களில் மனதைப் பறி கொடுத்தவளாய் தேவகி தண்ணீர் நிரப்பும் வேலையைச் செய்து கொண்டிருந்தாள்.

மேலே போய் நடனக் கச்சேரியைக் காண வேண்டுமென்ற ஆவலால் அவள் மனம் துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தது. ஆனால் அதே மனம், "உனக்கேன் பாட்டும் கூத்தும்?" என்று இடித்துக் காட்டவும் செய்தது.

தேவகியின் அந்தரங்கத்தில் வெகு காலமாகவே ஓர் ஆசை இருந்து கொண்டிருந்தது. அது, தானும் நடனத்திலும் சங்கீதத்திலும் நல்ல தேர்ச்சி பெற்றுச் சிறந்த புகழுடன் விளங்க வேண்டுமென்பது தான்.


அதற்கு இப்போது தகுந்த சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. எப்படியாவது மேற்படி நடன கோஷ்டியிலுள்ள நடனப் பெண்களைச் சிநேகம் செய்து கொண்டு அவர்களிடம்



நடனம் பயில வேண்டுமென்று நினைத்தாள். ஆனால், அதற்கு அவர்கள் ஒப்புக் கொள்வார்களா? அவர்கள் ஒப்புக் கொண்டாலும், எஜமானி அம்மாள் சும்மா இருப்பாளா? எஜமானியிடம் உத்தரவு பெற்றுக் கொண்டாலும் இவ்வளவு வேலைகளுக்கிடையே தனக்கு நேரம் கிடைக்குமா? இவ்வாறெல்லாம் சிந்தித்த வண்ணம் தண்ணீர்க் குழாயை நோக்கிச் சென்று கொண்டிருந்தாள் தேவகி. தோட்டத்து வாசல் பக்கம் சென்ற போது அவளுக்காக ஒரு பெரும் அதிசயம் காத்திருந்தது. அந்த அதிசயம் ஓர் இளைஞன் ரூபமாகக் காத்திருந்தது. தூரத்தில் யாரோ ஒரு இளைஞன் வந்து கொண்டிருந்தான். தேவகிக்கு அவனை எப்போதோ எங்கேயோ பார்த்தது போல் தோன்றியது. ஒருகணம் யோசித்தபோது சட்டென்று ஞாபகத்துக்கு வந்தது. அவன் வேறு யாருமில்லை. அன்றைக்கு அப்பாவும் தானும் வீட்டை விட்டுப் புறப்பட்டு வந்த போது, தான் மட்டும் ஆலமரத்தடியில் தன்னந்தனியாக இருந்த சமயம் சந்தித்த வாலிபன் தான். தன்னிடம் அன்பும் ஆதரவும் காட்டிப் பேசிக் கொண்டிருந்த அதே இளைஞன் தான். தான் பசியினால் களைத்துச் சோர்ந்திருந்த சமயம் தன் சட்டைப் பையிலிருந்து வேர்க்கடலையெடுத்துக் கொடுத்துப் புசிக்கச் சொன்ன வாலிபன் தான். ஐயோ பாவம்! பிச்சைக்காரனாக இருந்தாலும் எவ்வளவு தயாள குணம்! பேச்சிலே எத்தனை நயம்! முகத்திலே எத்தகைய வசீகரம்! என்றெல்லாம் தனக்குத் தானே அதிசயப் பட்டுக் கொண்டாள் தேவகி.

“இந்த நேரத்தில் அவன் இங்கே வரக் காரணம் என்ன?” என்று யோசித்தவண்ணம் பங்களாவின் தோட்டத்தில் அரை பர்லாங்கு தூரத்திலிருந்த குளத்தை நோக்கி மெதுவாகச் செல்லலானாள். இதற்குள் அந்த இளைஞன் சமீபத்தில் நெருங்கி வந்து விடவே தேவகி சற்றுத் தயங்கினாள். தேவகியைப்பார்த்து அடையாளம் தெரிந்து கொண்டதும் இந்த இளைஞன் சற்று வேகமாக அந்தப் பக்கம் நடந்து வந்தான்.

பிசாசை விரட்டிய பிசாசுக் கதை!



இரண்டு மாதங்களுக்கு முன்னால் பார்த்த போது இளைத்து மெலிந்திருந்த அந்தப் பிச்சைக்கார இளைஞன் இப்போது சிறிது மாறுதலுடன் காணப்பட்டான். நீண்ட கோட்டு ஒன்றும். அதற்கு மேல் ‘டர்க்கி டவல்’ துணியும் போட்டுக் கொண்டிருந்தான்.

தேவகி அவனை மறு முறை சந்திப்போம் என்று நினைக்கவேயில்லை. எதிர்பாராத விதமாக அவனைப் பார்த்த போது அவளுடைய நினைவு இரண்டு மாதங்களுக்கு முன் நடந்த சம்பவங்களை ஞாபகமூட்டி வேதனை செய்தது.

இளைஞன் தேவகியைப் பார்த்து, “நீ இங்கே என்ன செய்கிறாய் அம்மா? உன் அப்பா எங்கே?” என்று வினவினான். அவன் இவ்வாறு கேட்டதும் தேவகிக்கு துக்கம் பொத்துக் கொண்டு வந்தது. தன்னைப் பற்றி இவ்வளவு அக்கரையுடன் விசாரிக்கும் பிச்சைக்கார இளைஞனிடம், தான் அவனை ஆலமரத்தடியில் விட்டுப் பிரிந்தது முதல் இரண்டு மாத காலமாய் நடந்த சம்பவங்கள் அனைத்தையும் சொல்லி ஆறுதலடைய வேண்டும் போல் தோன்றியது. அப்படி அவனுடன் சாவகாசமாகப் பேசுவதற்கு முன்னால் அந்த இளைஞன் ஏதாவது சாப்பிட்டானா என்று அறிந்துகொள்ள விரும்பினாள். மறு கணம் “இது என்ன பைத்தியக்காரத்தனம்? பிச்சைக்காரனுக்கு வயிறு நிறைய எங்கே உணவு கிடைத்திருக்கப் போகிறது?” என்று நினைத்தவளாய் அவனிடம் “ஒரு நிமிஷம் இங்கேயே நில்; இதோ வந்து விடுகிறேன்” என்று சொல்லிவிட்டுச் சட்டென்று பங்களாவுக்குள் திரும்பிச் சென்றாள். ஐந்து நிமிஷ நேரத்துக்கெல்லாம் ஒரு பெரிய காகிதப் பொட்டொணத்துடன் திரும்பி வந்த தேவகி, அந்தப் பொட்டொணத்தை இளைஞன் கையில் கொடுத்தாள். இளைஞன் அதை ஆவலுடன் பெற்றுக் கொண்டான். பொட்டொணத்துக்குள்ளே அன்றைய விருந்துக்காகத் தயார் செய்யப்பட்ட பலவகையான பட்சணங்கள் இருந்தன.

பிறகு இருவரும் குளத்தங் கரைக்குச் சென்றார்கள். இளைஞன் அந்த பட்சணங்களைக் காலி செய்து முடிப்பதற்கும், தேவகி தன்னுடைய எல்லா விருத்தாந்தங்களையும் கூறி முடிப்பதற்கும் சரியாக இருந்தது.

விருட்சங்கள் சூழ்ந்த தடாகத்தின் கரையில் உடகார்ந்து இளைஞனும் தேவகியும் வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய சம்பாஷணையின் போது வெளிப்பட்ட அன்பு மொழிகளையும் சோகக் கதைகளையும் விருட்சத்தின் மேல் உட்கார்ந்திருந்த இரு பட்சிகள் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தன. அந்தப் பட்சிகள் இரண்டும் பகலெல்லாம் ஆகாரத்துக்காக அலைந்துவிட்டு பொழுது போனதும் தங்கள் இருப்பிடமான மரக்கிளை மீது வந்து உட்கார்ந்து சல்லாபித்துக் கொண்டிருந்தன. “ஆகா! பட்சிகளுக்குள்ளே எத்தனை ஒற்றுமை?” என்று தேவகியும் இளைஞனும் அவைகளைப்பார்த்து அதிசயப்பட்டார்கள்.

இதற்குள் இருட்டும் நேரமாகி விட்டதால் தேவகி இளைஞனிடமிருந்து பிரிய மனமின்றி விடை பெற்றுக் கொண்டாள். இருவரும் பிரிந்து செல்லும் போது மறு நாள் அதே இடத்தில் அதே நேரத்தில் சந்திப்பது என்ற முடிவுடன் சென்றார்கள்.

பங்களாவுக்குத் திரும்பி வரும் போது தேவகி பிச்சைக்கார இளைஞனை எதேச்சையாகச் சந்தித்த அதிசயத்தை நினைத்து நினைத்து ஆச்சரியப்பட்டாள். மறு நாள் மாலை அவனைச் சந்திக்கும் போது அவனுடைய பெயரைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றும், பிச்சை எடுத்துப் பிழைப்பது அநாகரிகம் என்று அவனிடம் சொல்லி வேறு வேலை பார்க்கச் சொல்ல வேண்டுமென்றும் முடிவு செய்து கொண்டாள். அன்றிரவெல்லாம் தேவகிக்குத் தூக்கமே வரவில்லை. சாந்தினி மட்டும் நாவல் படித்துக் கொண்டிருந்தாள். தேவகி படுத்துக் கொண்டே யோசிக்கலானாள். எப்போது பொழுது விடியும்? எப்போது மறுபடியும் அஸ்தமிக்கும்! இளைஞன் மறு நாள் வருவானா? வந்தால் அவனிடம் எல்லா விஷயங்களையும் மனம் விட்டுப் பேச முடியுமா? அழகு பொருந்திய அவன் முகத்தை மறுபடியும் பார்ப்போமா? ஆகா, அவன் மட்டும் ஏதாவது உத்தியோகத்தில் அமர்ந்து வேலை பார்த்தால் இன்னும் எவ்வளவு அழகாயிருப்பான்? ....என்று இவ்வாறு சிந்தித்தபடியே அன்றைய இரவைக் கழித்தாள் தேவகி. (தொடரும்)


**16—1—1948**

**வெள்ளி மணி**


பொங்கல் இதழாக வெளி வருகிறது. அதிகமான பக்கங்களுடனும் பல விசேஷ அம்சங்களுடனும் வர்ணச் சித்திரங்களுடனும் கூடி உங்களை மகிழ்விக்கும்.

விலை 8 அணு

மானேஜர் :

வெள்ளி மணி, தியாகராயநகர் – சென்னை 17.

# ரேடியோ வாங்கினேன்



கண்ணன்

சேயம்

## 4. வெற்றிகரமான வாபஸ்

ரேடியோவை விற்றுக் கொண்டும், வாங்கிக் கொண்டும், ரிப்பேர் செய்வதாகச் சொல்லிச் சிலருடைய கால்களை ஒடித்துக் கொண்டும் இருந்த அந்த ரேடியோக் கம்பெனி, மௌண்ட்ரோடு வட்டாரத்தையே கதிகலங்க அடித்துக் கொண்டிருந்தது.


அடிக்கடி ஐந்தாறு ரேடியோக்களை ஒரே சமயத்தில் திருகிவிட்டு, பிறருடைய செவிகளைப் பற்றிக் கவலைப் படாமல் அக்கடாவென்று இருந்து வந்தது மேற்படி ரேடியோக் கம்பெனி.

அதே இடத்தில் தான் ஓட்டமும் நடையுமாக என்னை அழைத்துக் கொண்டு போய் விட்டான் வரதன். "அத்திம்பேரே! இந்தக் கம்பெனி மானேஜருடைய மகனும், நானும் ஒரே பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படித்து, சேர்ந்து பெஞ்சு மேலும் நின்றவர்கள். எனவே, எப்படியும் நன்ருக ரிப்பேர் செய்து கொடுக்கச் சொல்லுகிறேன். கவலைப்பட வேண்டாம்" என்று வழியெல்லாம் எனக்கு ஆறுதலும், தேறுதலும் சொல்லிக் கொண்டு வந்தவன், கம்பெனி வாசற்படி ஏறியதும் தயங்க ஆரம்பித்தது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

வரதனுடைய சைகிள் மணி ஓசை கேட்டு உள்ளே இருந்து ஸூட் போட்டுக் கொண்டு எட்டிப் பார்த்த இரட்டை நாடியான உருவம், முகத்தைச் சற்று அருவருப்பாக வைத்துக் கொண்டு, "இந்தக் குளிர் நாளில் ஐஸ்க்ரீம் வேண்டாம் பையா! போய் விட்டு வா!" என்று சொல்லி அனுப்பிற்று. வரதனுடைய நீல நிற சைகிளுக்குப் பின்னுல் வைத்துக் கட்டப்பட்டிருந்த கள்ளிப் பெட்டியைப் பார்த்தபோது எனக்குக்கூட அப்படித்தான் தோன்றிற்று.

"நான் ஐஸ் வியாபாரி இல்லை ஸார்! ரேடியோப் பெட்டியை ரிப்பேருக்குக் கொண்டு வந்திருக்கிறேன். மனேஜர்...மிஸ்டர் இருக்கிருரா?" என்று என்னமோ போலத் தடுமாறினுன், வரதன்.

ஸூட் ஆசாமி, புகையைக் கக்கும் சுருட்டுக் குழாயை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு, "ஏன், நான்தான் மானேஜர்! எங்கே




ரேடியோக் கம்பெனி வாசலில்...

இருக்கு ரேடியோ?" என்று வரதனை அலட்சியமாகக்கேட்டார்.

"இதோ!" என்று சொல்லிக் கொண்டே வரதன், கள்ளிப் பெட்டியைத் திறந்து கலகலத்துக் கிடக்கும் ரேடியோ சாமான்களை ஒவ்வொன்ருக எடுத்து எதிரில் கடைபரப்ப ஆரம்பித்தான்.

சுருட்டு ஆசாமி, 'விழிகளை உருட்டி வரதனையும், அவனுக்குப் பின்னுல் நின்று கொண்டிருந்த என்னையும் உற்றுப் பார்த்தார். பிறகு "இதெல்லாம் இங்கே ரிப்பேர் செய்யமாட்டோம்! வண்ணுரப் பேட்டையிலே புண்ய கோடி முதலியார் என்று ஒருத்தர் இருக்கிருர். அவரிடம் போங்கள்..." என்று சொல்லிவிட்டு பூட்ஸ் கால்களைப் பிரமாதமாக தட்டிக் கொண்டு அங்கிருந்துமாடிக்கு மறைந்தார்.

வரதன் என்னை சைகிள் ஸ்டாண்டாக நிறுத்திவிட்டு, குறுக்கே ஓடி அவருக்கு முன்னுல் நின்று கொண்டு கேட்டான்: "அந்த முதலியார் அட்ரஸ்......"

"பச்சைக் குழந்தைக்குக் கூடத் தெரியும். ஏரோப்ளேன் காண்ட்ராக்டர்...ட்ராம் ஷெட்டுக்குச் சமீபம்..." என்று அவரிடமிருந்து பதில் கிடைத்தது.

வரதன் என்னைப் பார்த்தான். நான் அவனைப் பார்த்தேன். கள்ளிப் பெட்டி ரேடியோ எங்கள் இருவரையும் பார்த்தது. "என்ன செய்யலாம் அத்திம்பேரே?" என்ருன். "வீட்டுக்கு வெற்றிகரமாக வாபஸ் ஆகி, உன் அக்காவைப் போய் ஆலோசனை கேட்கலாம். ரேடியோவைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது" என்றேன்.

"வண்ணுரப் பேட்டைக்கு போய்ப் பார்த்து விடுவோமே!" என்று வரதன் சொல்ல சரி என்று நான் ஆமோதிக்கக் கடைசியாக இருவரும் புறப்பட்டோம். வண்ணுரப் பேட்டைக்கும், ரேடியோவுக்கும் என்ன சம்பந்தமிருக்க முடியும் என்று வழி எல்லாம் யோசித்துக் கொண்டே போனேன்! "......இன்று...பாகவதர் சாவேரி ராகத்தைப் பிழிந்து கொடுத்தார், வெளுத்துக் கட்டினர்" என்றெல்லாம் ரேடியோ விமர்சனம் செய்கிருர்களே, அவர்கள் இந்த வண்ணுரப் பேட்டையில்தான் வசிக்கிருர்களோ, என்னமோ?

முதலியார் வீடு எங்கே இருக்கிறது என்று கேட்பதற்காகப் பச்சைக் குழந்தை ஏதாவது இருக்





ராக ஆலாபனை...

கிறதா என்று பார்த்தோம். சமீபத்தில் ஒரு குழந்தையும் அகப்படவில்லை. எனவே, டிராம் ஷெட் அடையாளத்தைக் கண்டுபிடித்துக் கொண்டுபோய்ச் சேர்ந்தோம்.

ட்ராம் ஷெட்டுக்குப் பக்கத்தில் பெரிய பொட்டல் மைதானம் ஒன்று இருந்தது. அங்கே இருந்து "லொட் லொட்" டென்று சகிக்க முடியாத கர்ண கடூரமான சப்தம் கேட்டுக் கொண்டே இருந்தது.

எட்டிப்பார்த்தோம். சில பழைய உடைந்துபோன ஆகாய விமானங்களை, மனம் போனபடி இழுத்து, தகடுகளாகவும், சதுரங்களாகவும் நீட்டி மடக்கிக் கொண்டிருந்த அற்புதக் காட்சியைக் கண்டோம்.

"வாதா, வேறு எங்கேயோ வந்து விட்டோம்!" என்றேன். "இல்லை அத்திம்பேரே! இதுதான் வண்ணுரப்பேட்டை" என்ருன். வரதன் பேச்சை ஆமோதிப்பது போல் சமீபத்தில் கர்த்தபம் ஒன்றின் ராக ஆலாபனை கேட்டது!

தயங்கித் தயங்கி நின்று கொண்டிருந்த எங்கள் இருவரையும், "என்ன பார்க்கிறீங்க?" என்று யாரோ ஒருவர் வெகு அக்கரையுடன் விசாரித்தார்.

"இதுதானே, புண்யகோடி முதலியார் வீடு...?" என்று வரதன் விசாரிக்க, "ஆமாமாம்!" என்று சொல்லிக் கொண்டே அந்த ஆசாமி எங்களை மைதானத்துக்குள் சிரத்தையுடன் அழைத்துக் கொண்டு போனர்.


* * *

புண்யகோடி முதலியாரைப் பார்க்க நாங்கள் எவ்வளவோ புண்ணியம் செய்திருக்க வேண்டும். ஆகாயத்தில் பறக்கும் விமானங்களெல்லாம் எப்போது தொபுகடீர் என்று பூமியில் குட்டிக்கரணம் அடிக்கும், அவைகளை மலிவான விலைக்கு வாங்கித் தகடுகளாக்கி விடலாம் என்று இராப்பகலாக ஈசுவரனைப் பிரார்த்திக்கும் பரம பக்தனுக அவர் இருக்கவேண்டும். பார்வைக்கும் அப்படித்தான் விளங்கினர். பட்டைப் படையாக விபூதி; கழுத்திலே தங்க ரேக்குப் பிடித்த ருத்ராக்ஷ மாலை.

"என்ன அப்பேன்?" என்று விசாரித்தார் கண்ட்ராக்டர் புண்ய கோடி. விஷயத்தைச் சொன்னுன் வரதன். "சரி பெட்டியை எடு, பார்ப்போம்" என்று திருவாய் மலர்ந்தருளினர் முதலியார். எனக்கு வயிற்றில் காப்பியை வார்த்தது போல இருந்தது.

வரதன் இரண்டாம் முறையாகக் கள்ளிப் பெட்டியைத் திறந்தான். புண்யகோடி முதலியார் கண்கொட்டாமல் வெளியே வந்து விழுந்தரேடியோத் துண்டங்களைப் பார்த்தார். "ஆவ்!" என்றுபெரிய ஏப்பம் ஒன்று விட்டு, "வேலாயதம்!" போட்டார்.

"என்னங்க?" என்று புரிந்து கொண்டவன் போல ஒருவன் அவர் முன்னே வந்து நின்ருன். அவனேடு பெரிய தராசும், படிக்கல்லும் முன் ஜாக்கிரதையாக வந்திருந்தன.



'விமானம் நொறுங்குமா என்று'

"எடுத்துப் போடு, அப்பேன்!" என்று கூறினர் புண்யகோடி.

ரேடியோ சாமான்களை ஒவ்வொன்ருக எடுத்துத் தராசில் போட்டான் வேலாயுதம்.

எனக்கு ஒன்றுமே 'புரியவில்லை. இது என்ன புது மாதிரி ரிப்பேராக இருக்கிறதே என்றுமலைத்துப் போனேன். வரதன் வழக்கப் பிரகாரம் எல்லாம் தெரிந்தவன் போல இடுப்பில் கரத்தைக் கொடுத்து வளைந்து நின்ருன்.

"மூணு வீசை, இருபத்தேழரைப் பலம்" என்று கடைசி நிறுவை சொல்லிற்று. புண்ய கோடி புள்ளிக் கணக்குப் போட்டுப் பார்த்து, "பிடியுங்கள்!" என்ருர்.

பன்னிரண்டு ரூபாய், பத்தே காலணு முதலியார் கையில் இருந்தது.

"எதற்கு?" என்று கேட்டேன்.

"எதற்கா? உங்கள் ரேடியோ சாமான்களுக்குத்தான்! பழைய இரும்பு விலைக்குச் சற்று கூடவே போட்டிருக்கிறோம்" என்று சொல்லிவிட்டு என் கையில் நோட்டுக்களை வைத்துத் திணித்து விட்டு, "நமஸ்காரங்க!" என்ருர், பிழைக்கத் தெரிந்த புண்ய கோடி!


"என்ன வரதா, விற்று விடலாமா?" என்று பரிதாபகரமாகக் கேட்டேன். "என்ன வேண்டுமானுலும் செய்யுங்கள் அத்திம்பேரே!" என்று அகப்பட்டுக் கொள்ளாமல் தந்திரமாகப் பதில் சொன்னுன் வரதன்.

"இந்த ரேடியோவை விற்பதற்குப் பதிலாக உன் சைகிளை விற்று விடலாம். நீ வாங்கின விலைக்கு மேலே இரண்டு ரூபாய் அதிகம் கிடைக்கிறது" என்று சிரித்துக் கொண்டே சொன்னேன்.

"சைகிளை விற்க எனக்குஉரிமை கிடையாது, அத்திம்பேரே! அது என் மனைவி வீட்டு மஞ்சள்காணி" என்று வரதன் சொன்னவுடன், "ரேடியோவும் அப்படித்தான் அவளுடையது!" என்றேன்.

ரேடியோவைத் திருப்பி எடுத்து சைகிளுக்குப் பின்னுல் கட்டிக் கொண்டு நானும்வரதனும் வெற்றிகரமாக வீட்டை நோக்கி வாபஸ் ஆனேம்.

(அடுத்த இதழில் முடியும்)




(சென்ற இதழ் தொடர்ச்சி)

சகுந்தலைக்குக் கடைசியாக வந்திருந்த வரனுக்கு தம்பி ஒருவன் சென்னையில் இருப்பதாகவும், நடேசன் என்ற பெயருடைய அவனை அழைத்து விவரம் தெரிந்து கொள்ளும்படியும், புது வரனைப் பற்றி அறிவித்தவர் ராமய்யரிடம் கூறியிருந்தார்.

ராமய்யரும் நடேசன் வசித்து வந்த கல்லூரி ஹாஸ்டலுக்கு ஆளனுப்பி, நடேசனைக் கையோடு அழைத்து வரச் சொன்னார்.

போன ஆள் வெறுங் கையுடன் திரும்பி வந்தான். நடேசன் எங்கேயோ சினிமாவுக்குப் போயிருப்பதாகவும், வந்ததும் உடனே அனுப்பி வைப்பதாக ஹாஸ்டல் வார்டன் வாக்களித்ததாகவும் அந்த ஆள் கூறினான். 'கல்யாண விஷயம்' என்று தான் கூறியதாகவும் அவன் சொன்னான்.

அந்தப் பௌர்ணமி இரவில் நடேசன் வரவை எதிர்பார்த்துத்தான் ராமய்யரும் அவருடைய மனைவியும் பேசிக்கொண்டிருந்தார்கள். சகுந்தலையும் தன் மனக் குதிரையைத் தட்டிவிட்டு, பழைய சம்பவங்களைப் பற்றி எண்ணமிட்டுக் கொண்டிருந்தாள்.

நடேசனும், அவனுடைய நண்பனும் சினிமாவுக்குப் போய் விட்டு இரவு ஒன்பது மணிக்கு ஹாஸ்டலுக்குத் திரும்பிய போது ஹாஸ்டல் வார்டன் நடேசனைக் கூப்பிட்டனுப்பினார்.

"ஏன் கூப்பிட்டீர்கள் ?" என்று கேட்டுக் கொண்டே போனான் நடேசன்.

"மாம்பலத்தில் ராகவய்யர் தெருவில் 'கணபதி வில்லா' என்றொரு பெரிய பங்களா இருக்கிறதாம். ராமய்யர் என்ற அதன் சொந்தக்காரர் ஏதோ கல்யாண விஷயமாய் உன்னைக் கையோடு கூட்டி வரச் சொன்னதாக ஒரு ஆள் வந்தான். ரொம்ப அவசரமாம்'' என்றார் வார்டன்.

"அடடா! நான் நாளைக்குக் காலையில் ஊருக்குப் போகவேண்டுமே,'' என்றான் நடேசன்.

"அப்படியானால் நீ இப்பொழுதே அவரைப் போய்ப் பார். என்ன அவசரமோ ?" என்றார்.

நடேசன் அறைக்குச் சென்றான். "டேய்! இன்னொரு 'வாக்' நிலாவிலே. வா, போகலாம் மாம்பலம் வரை'' என்றான் நண்பனைப் பார்த்து.

நண்பன், "ஏன், மாம்பலத்தில் என்னடா விசேஷம் ?" என்று கேட்டான்.

"அதுதான் எனக்கும் தெரியவில்லை.யாரோ ராமய்யர் கல்யாண விஷயமாய் என்னைக் கூட்டி வரச் சொன்னாராம். எனக்கொன்றும் புரியவில்லை'' என்றான்.

"என்ன, உனக்கா கல்யாணம் ?'' என்று விசாரித்தான் அவனுடைய நண்பன்.

"ஹூம்! எனக்கெங்கேடா இப்பொழுது விவாகம்? என் அண்ணா ரமணிக்காகத்தான் இருக்கும்...அது சரி! உனக்கெப்போது கல்யாணம் ?'' என்று கேட்டு வைத்தான் நடேசன்.

இருவரும் பௌர்ணமி நிலவொளியில் ராமய்யர் வீட்டை நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தார்கள்.

நண்பன் கூறினான்: "எனக்கு ஐந்து வருஷத்துக்கு முன்னாலேயே கல்யாணம் நடந்திருக்க வேண்டியது. பெண்ணைக் கூடப் போய்ப் பார்த்தேன்...'' என்பதற்குள், "ஏன், பெண் நன்றாயில்லை என்று விட்டு விட்டாயோ ?'' என்று நடேசன் சிரித்துக் கொண்டே கேட்டான்.

"அதெல்லாம் இல்லையடா; பெண் நன்றாகத்தான் இருந்தாள். எல்லா விதத்திலும் ரொம்ப திருப்தியான பெண் என்று அக்கா கூடச் சொன்னாள்'' என்றான் நண்பன்.

"பின் ஏன் விவாகம் செய்து கொள்ளவில்லை ?''

"அதுதான் தமாஷ்; சொல்கிறேன்....இன்னும் நடக்க வேண்டிய தூரம் ரொம்ப இருக்கிறதல்லவா? பேசுவதற்கும் விஷயம் வேண்டுமல்லவா ?'' என்று கூறி விட்டு நண்பன் விவரமாகச் சொல்லத் தொடங்கினான்:

"அப்பொழுது நான் திருச்சிக் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தேன். போன வருஷம் தானே இங்கே வந்து சேர்ந்தேன்? ...நான் பி. ஏ., யில் படித்துக் கொண்டிருந்தபோது ஊரிலிருந்து ஒரு கடிதம் வந்தது. பெண் ஒன்று வந்திருப்பதாகவும், அதை எனக்குப் பார்த்திருப்பதாகவும் என் அத்திம்பேர் எழுதியிருந்தார். அத்துடன் இன்னும் நாலு நாளில் என்னைப் புறப்பட்டு வரும்படியும், நான் பெண் பார்க்கச் செல்ல வேண்டுமென்றும் குறிப்பிட்டிருந்தார்.

"எனக்கென்னமோ அந்த வருஷம் விவாகம் செய்து கொள்ளும் நோக்கமேயில்லை. அந்த வருஷம் தான் நாட்டில் கொந்தளிப்பு பலமாயிருந்தது. அஹிம்சா யுத்த முஸ்தீபுகள் நடந்து கொண்டிருந்தன. சீக்கிரத்தில் பம்பாயில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூடி போரைத் துவக்கப் போவதாக இருந்தது. அந்த மாதிரி சமயத்தில் அசடைப் போல் கல்யாணத்தைச் செய்து கொண்டு, தேசத்திற்குப் பயன் படாமல் போவதா என்றெண்ணினேன். நான் அந்தச் சமயத்தில் கல்லூரி யூனியன் உபதலைவனாக இருந்தேன். தேச மெங்கும் வேலை நிறுத்தம் முதலியவை நிகழ்ந்தால் எங்கள் கல்லூரி மாணவர்களுக்கு நானல்லவா வழிகாட்ட வேண்டும்? அந்தச் சமயத்தில் நான் மட்டும் 'குஷி'யாகக் கல்யாண வைபவத்திலும், மற்ற விசேஷங்களிலும் கலந்து கொண்டிருக்கலாமா ?

இதைப் பற்றி என் சிறந்த நண்பனொருவனைக் கேட்டதற்கு அவன் கூறினான்: 'அவர்களுக்குத் திருப்தியாகப் போய் விட்டு வந்து விடு. பெண் நன்றாயில்லை என்று ஏதாவது சாக்குச் சொல்லி விட்டால் போகிறது' என்று யோசனை கூறினான். நானும் எங்கள் ஊருக்குப் போனேன். அக்காவுடன் பெண் இருந்த ஊருக்கும் போனேன். பெண்ணைப் பார்த்தோம். நன்றாக உபசாரம் செய்தார்கள். ஏற்பாடுகள் ரொம்ப தடபுடலாக நடந்திருந்தன. பெண் கூட நன்றாக இருந்தாள். என் பாடு திண்டாட்டமாகி விட்டது. என்ன சாக்குச் சொல்வதென்றே தெரியவில்லை.

"நான் பதில் சொல்ல முடியாமல் திணறிக் கொண்டிருந்ததைச் சம்மதத்தின் அறிகுறியாக எடுத்துக்கொண்டு என் அக்கா அவர்களுக்கு வாக்குக் கொடுத்துவிட்டு வந்தாள். அங்கிருந்து நான் நேரே திருச்சிக்குப் போய் விட்டேன்.

"அதற்குப் பிறகு ஒரு மாதம் வரை கல்யாணத்தைப் பற்றிக் கடிதமே வரவில்லை. 'நல்லதாய்ப் போயிற்று' என்று இருந்தேன். ஆனால், ஒரு நாள் திடீரென்று கல்யாணக் கடிதமே வந்து விட்டது. எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. முகூர்த்தம் ஆகஸ்டு இருபதாம் தேதி என்று குறிப்பிட்டு, என்னைப் பதினைந்தாம் தேதி ஊருக்கு வந்து விடச் சொல்லி எழுதியிருந்தார்கள்.

"மனதில் நடந்த போராட்டத்திற்கு ஒரே ஒரு முடிவுதான் கிடைத்தது.ஒன்பதாம்தேதியைப்படி முடிவாகிறதோ அதன்படி நடப்பது என்று தீர்மானித்துக் கொண்டேன். அன்று நாட்டில் சமாதானத்திற்கு வழி காணப்பட்டால் ஊருக்குப் போவதென்றும், சத்தியாக்ரகம் ஆரம்பமாகி விட்டால் போகக் கூடாது என்றும் முடிவு செய்து கொண்டேன்.

"உனக்குத்தான் தெரியுமே, ஆகஸ்டு ஒன்பதாம்தேதி தலைவர்கள் கைது செய்யப்பட்ட விஷயம்! தேச மெங்கும் கிளர்ச்சி பரவியது. நானும் என் சகாக்களும் ஜனக் கூட்டத்திலிருந்து மறைந்து விட்டோம். மறைவிடத்திலிருந்து அரசாங்கத்திற்கு எதிராக நாச வேலைகளைச் செய்து வந்தோம்.

"மூன்று வருஷங்களுக்கு மேல் இப்படித் தலைமறைவாக இருந்தேன். தலைவர்கள் விடுதலை செய்யப்படவே,, நானும் மறைவிடத்திலிருந்து வெளியே வந்தேன். அதற்குள் என் எண்ணங்கள் மாறிப் போயிருந்தன. நாச வேலைகளினால் தேசத்திற்குச் சுதந்திரம் கிடைக்காது என்ற நம்பிக்கை உண்டாயிற்று. அந்த எண்ணமும், நம்பிக்கையும் அப்பொழுது—அவ்வளவு காலத்திற்குப் பிறகு—உண்டாகி என்ன பயன் ? அதற்குள் எவ்வளவோ காரியங்கள் நாசமாகி விட்டது, பிறகல்லவா தெரிந்தது ? காலம் எனக்காகக் காத்திருக்குமா, என்ன?

"நேரே ஊருக்குப் போனேன். அக்கா நான் மறைந்த செய்தி தெரிந்த மூன்றும் நாளே அதிர்ச்சியில் இறந்து போனாளாம். அத்திம்பேரும் படுத்த படுக்கையாக இருந்தார். என்னைக் கண்டு கதறினார். விவாகம் நின்று போக வேண்டியிருக்குமே என்ற அதிர்ச்சியும் சேர்ந்தே அக்காவை வீழ்த்தி விட்டதாக அவர் கூறினார். எல்லாம் அந்தப் பெண்ணின் துரதிருஷ்ட ஜாதக பலன் என்று கதறினார். நான் செய்த முட்டாள்தனத்திற்கு அந்தப் பெண்ணின் ஜாதகம் என்ன செய்யும்? ஆனால் அந்தச் சமயத்தில் என் அத்திம்பேர் நான் கூறப் போவதை எங்கே கேட்கப் போகிறார் என்று பேசாமலிருந்து விட்டேன். நான் ஊர் திரும்பிய சில நாட்களுக்குள் தன்னுடைய மூன்று வயதுப் பையனை விட்டு விட்டு இறந்து போனார்.

"அதற்குப் பிறகுதான் நான் அந்தப் பையனை அவனுடைய பெரியப்பா ஒருவரிடம் ஒப்படைத்துவிட்டு சென்னைக்கு வந்தேன். வருமுன் ஒரே ஒரு முறை முன்பு பெண் பார்க்கச் சென்ற இடத்திற்குச் சென்றேன். ஆனால் அங்கே புதிதாக யாரோ வந்திருந்தார்கள். பழைய குடும்பம் இல்லை


### வக்கீல் பீஸ்!

ஒரு வக்கீலும், அவருடைய நண்பரும் தெருவில் நடந்து சென்றார்கள். வழியில் நண்பர் ஒரு பத்து ரூபாய் நோட்டைக் கண்டெடுத்தார். அதை வக்கீலிடம் கொடுத்து, "இது நல்ல நோட்டுத்தானே ?" என்று கேட்டார்.

வக்கீல் அதைப் பார்த்து விட்டு, "ஆமாம்!" என்று கூறி அதைப் பையில் போட்டுக் கொண்டு, நண்பருக்குத் தம் பையிலிருந்து ஐந்து ரூபாயை எடுத்துக் கொடுத்தார். நண்பர் ஆச்சரியத்துடன் வக்கீல் முகத்தைப் பார்த்தார்.

வக்கீல், "சரியான நோட்டுத்தானா என்று சொன்னதற்குப் பீஸ் ஐந்து ரூபாய் போக, மீதி ஐந்து ரூபாயைத்தான் கொடுத்தேன்'' என்றார்!

தமிழ்நாடு ஆவணக் காப்பக



விட்டு சொந்தக்காரர்:—என்ன ஸார், யோசிக்கிறீர்கள்? இந்த வீட்டுக்குக் குடி வந்தால் பக்கத்தில் 'மில்' சத்தம் அதிகமாயிருக்குமேன்னு? அதைப் பத்தி யோசிக்காதீங்க; இந்த மில்லில் மாதம் முப்பது நாளும் ஸ்டிரைக்காத் தான் இருக்கும்.

என்று தெரிந்த பிறகு, அவர்களைப் பற்றி விசாரிக்க மனமின்றி வந்து விட்டேன்.

"அவர்கள் அங்கேயே இருந்திருந்து, அந்தப் பெண்ணுக்கும் கல்யாணமாகாமல் இருந்திருந்தால், ஒரு வேளை எனக்குக் கல்யாணம் நடந்திருக்குமோ, என்னமோ?...ஹூம்! நானில்லா விட்டால் அவர்களுக்கு வேறு பிள்ளை கிடைக்காமல் போயிருப்பானு, என்ன?" என்று முடித்தான் நடேசனின் நண்பன்.

அதற்குள் அவர்கள் போகவேண்டிய வீடும் சமீபித்து விட்டது.

"ரமணி! இதைப் பற்றி ரொம்ப பேச வேண்டும். போலிருக்கிறது. முதலில் வந்த விஷயத்தை முடித்துக் கொண்டு திரும்பும் போது பேசுவோம்" என்றான் நடேசன்.

சிரமம் அதிகமில்லாமல் அவர்கள் 'கணபதி வில்லா'வைக் கண்டு பிடித்து விட்டார்கள். கதவையும் இடித்தார்கள்.

கதவைத் திறந்து கொண்டு வந்த ராமய்யர் இரண்டு பேரையும் மாறிமாறிப் பார்த்துவிட்டு விழித்தார். அவரைக் கண்ட நடேசனின் நண்பன் ரமணியும் திகைத்தான்.

"நான் நடேசன்; இவன் என் நண்பன். என்னைப் பார்க்கவேண்டுமென்றீர்களாமே!" என்று நடேசன் இருவரையும் அறிமுகப் படுத்திக் கொண்டான்.

அவனுடைய நண்பனை உற்று நோக்கிக் கொண்டிருந்த ராமய்யர், "நீங்கள் ரமணி இல்லையோ?" என்று சந்தேகத்துடன் கேட்டார்.

"ஆமாம்! நீங்கள் அரக்கோணத்திலிருந்த ராமய்யர் தானே?" என்று அவன் கேட்டான். நடேசன் ஆச்சரிய மடைந்தான். ராமய்யருடைய வியப்பு அளவு கடந்து போயிற்று. அவருக்குப் பல சந்தேகங்கள் உண்டாயின. புதிதாக வந்திருந்த வரனை ரமணியும், பழைய ரமணியும் ஒருவர் தானு? அந்தப் பழைய ரமணிக்குத் தம்பி ஒருவன் இருந்ததாகத் தெரியவே இல்லையே? நடேசன் திடீரென்று எங்கிருந்து வந்திருக்க முடியும்? ஆயினும் நடேசன் ரமணியைத் தன்னுடைய நண்பன் என்றல்லவா சொல்கிறான்?...தம் முன் நிற்கும் ரமணிக்குத்தான் சகுந்தலையின் கணவனாகும் பிராப்தம் இருக்கிறதோ?

ரமணியின் மனதிலும் அநேக பிரச்னைகள் தோன்றின. ராமய்யருக்கு ஒரே பெண்தான் என்று அவனுக்குத் தெரிந்திருந்தது. அவளுக்கு இன்னும் கல்யாணமாக வில்லையா?......இன்னும் என்னவென்று புரியாத புதிர்கள் பல அவன் மனதைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

மாடி மேலிருந்து அவசர அவசரமாகக் கீழே இறங்கி வந்திருந்த சகுந்தலை படிக்கட்டி னருகில் நின்றவாறு வந்தவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய மனதில் விவரிக்க முடியாத ஆனந்தம் குடி கொண்டது. சற்று நேரத்திற்கு முன் வரை உற்சாகம் என்பதில்லாமல் இருந்த அவள் உள்ளத்தில் உற்சாகம் கரை புரண்டோடியது. யதேச்சையாகத் தான் வரித்து விட்ட ரமணியே மறுபடியும் வந்து விட்டதைக் கண்ட அவள் மகிழ்ச்சிக்கு அளவே யில்லை.

ராமய்யர் குழப்பத்தி லிருந்து சமாளித்துக் கொண்டு, "உள்ளே வாருங்கள்" என்று அவ் விருவரையும் அழைத்துச் சென்றார். சகுந்தலையும் அம்மாவைப் பார்க்க மாடிக்குப் போய் விட்டாள்.

ஹாலில் சற்று நேரம் நிசப்தம் நிலவியது. ராமய்யர் சிறிது நேரம் தடுமாறி விட்டு, "உங்கள் அத்திம்பேர் சௌக்கியமா?" என்று கேட்டார்.

"சமீபத்தில் தான் அவர் காலமானார்," என்றான் ரமணி சுருக்கமாக. மறுபடியும் அந்த இடத்தில் நிசப்தம் நிலவியது.

நடேசன், "எதற்காகக் கூப்பிட்டனுப்பினீர்கள்?" என்று மறு முறையும் கேட்டான்.

ராமய்யர், "சொல்கிறேன். எனக்குச் சில சந்தேகங்கள் இருக்கின்றன. அவைகளை முதலில் தீர்த்துக்கொள்ள வேண்டும்" என்றார்.

"என்ன சந்தேகங்கள்?" என்று நடேசன் கேட்டான்.

"விவரமாகச் சொல்லி விடுகிறேன். இப்போது என் மனம் குழப்ப மடைந்திருக்கிறது....என் பெண் சகுந்தலைக்கு ஐந்து வருஷத்துக்கு முன்பு விவாகம் நிச்சயம் செய்திருந்தேன். அது நின்று போயிற்று. காரணம் உங்கள் நண்பருக்குத் தெரியும். அதற்குப் பிறகு நான் வேறு எந்த இடத்திலும் முயற்சி செய்யவில்லை. அவளும் படித்துக் கொண்டு வருகிறாள். நாலு நாளைக்கு முன் எனக்குத் தெரிந்தவர், ஒரு வரன் இருப்பதாகச் சொன்னார். அவர் கூறிய வரன் உங்கள் நண்பர்தான் என்று எனக்குத் தெரியாமல் போயிற்று. மேலும் ரமணி உங்கள் தமையன் என்று தகவல் கொண்டு வந்தவர் சொன்னார்...மொத்தத்தில் எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை," என்றார்.

நடேசனுக்கு உண்மை விளங்கி விட்டது. வரும் வழியில் தன் நண்பன் கூறிய விஷயங்கள் அவன் ஞாபகத்திற்கு வந்தன. ரமணி முதலில் பார்த்ததாகச் சொன்ன பெண் இந்த ராமய்யரின் பெண் தான் என்பதை அவன் உணர்ந்து கொண்டான்.

இன்னொரு விஷயமும் அவனுக்கு விளங்கிற்று. ராமய்யருக்குத் தகவல் கொடுத்தவர் தன் அண்ணன் ரமணியைப் பற்றிதான் கூறியிருக்க வேண்டும். ராமய்யர் தவறாக எண்ணி விட்டார் என்று புரிந்து கொண்டான். ஆயினும், இந்த உண்மையை அந்தச் சந்தர்ப்பத்தில் சொல்வதா, வேண்டாமா என்று யோசித்தான். அதற்குள் ரமணியே பேசினான்.

"உங்கள் குழப்பத்திற்கு நான் தான் காரணம். அதனால் நானே அதைத் தீர்த்து வைக்கிறேன்.

"ஐந்து வருஷங்களுக்கு முன்னால் ஆகஸ்டு மாதத்தில் தேசத்தில் கலவரம் ஏற்பட்ட போது நான் என் நண்பர்கள் சிலருடன் 'அண்டர் கிரவுண்டா'க மாறினேன். மறைவிடத்திலிருந்து சர்க்காருக்கு எதிராகச் சில வேலைகள் செய்து வந்தோம். காங்கிரஸ் தலைவர்களை விடுதலை செய்த பிறகு, நான் வெளி வந்தேன். உடனே ஊருக்குச் சென்றேன். அந்தச்சமயம் மரணப் படுக்கையில் இருந்த அத்திம்பேர் மூலம் விவரம் தெரிந்தது. அவர் உங்கள் பெண் ஜாதகத்தைத் தூற்றினார். என் அக்கா இறந்ததற்கும், நான் ஓடிப் போனதற்கும் உங்கள் பெண் பிறந்த வேளைதான் காரணம் என்று பழித்தார். கொஞ்சம் கொஞ்சமாக இறந்து கொண்டிருந்த அவருடன் நான் வாதம் செய்ய விரும்ப வில்லை. உங்களைக் கண்டு, அவர் செய்த பிழைக்குப் பரிகாரம் தேட முடியுமா என்று முயற்சி செய்தேன். அரக்கோணத்தில் நீங்கள் முன்பு இருந்த இடத்தில் விசாரித்தேன். சரியான பதில் கிடைக்க வில்லை......"

"இவ்வளவு நேரம் என்னிடம் சொல்லிக் கொண்டு வந்த விஷயம் தானே, இது?" என்று நடேசன் இடைமறித்தான்.

"ஆமாம்!...இப்பொழுது தெய்வாதீனமாக உங்களைச் சந்திக்க முடிந்தது. தங்களுக்கு ஆட்சேபனை இல்லையென்றால் நான் தங்கள் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளத் தயார். மனம் விட்டுச் சொல்வதற்கு மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று முடித்தான்.

"கொஞ்சம் இருங்கள்" என்று கூறிவிட்டு ராமய்யர் மாடி ஏறிச் சென்றார்.

நடேசன் குறும்புச் சிரிப்பு சிரித்தவாறு, "என்னடா, என் அண்ணாவுக்குப் போட்டியாகக் கிளம்பி விட்டாயே; அவனுக்கு என்னடா பதில் சொல்வது?" என்று கேட்டான்.

ரமணி அவனுடைய கரங்களைப் பற்றிக் கொண்டு, "நடேசா! தயவு செய்து உன் அண்ணனைப் பற்றி இங்கே, சொல்லி விடாதே. உன்னை ரொம்பவும் கேட்டுக் கொள்கிறேன்" என்றான்.

அதற்குள் ராமய்யர் கீழே இறங்கி வந்தார்.

"நீங்கள் இன்னும் கேட்க வேண்டியவர்களை யெல்லாம் கேட்டுக் கொண்டு சொல்லுங்கள். எங்களைப் பொறுத்த மட்டில் சந்தேகம் வேண்டியதில்லை. சகுந்தலைக்கு இஷ்டமென்றால் எங்களுக்கும் சம்மதம்தான்" என்றார்.

"என் அக்காவும், அத்திம்பேரும் போன பிறகு, அபிப்பிராயம் கேட்க எனக்கு யாரும் கிடையாது. ஆகவே, நீங்கள் தயக்கமில்லாமல் உங்கள் இஷ்டப்படி செய்யலாம்" என்றான் ரமணி.

"எங்கள் அபிப்ராயத்தைத்தான் சொல்லிவிட்டேனே. சகுந்தலைக்கு இஷ்டம்தான்" என்று தெளிவு படுத்தினார் ராமய்யர்.

நடேசன், "ரமணி! ரொம்ப நேரமாகி விட்டது. மிகுந்தவற்றை நாளைக்குப் பேசிக் கொள்ளலாமா?" என்றான்.

ராமய்யர், "இவ்வளவு நேரத்திற்குப் பிறகு எங்கே போகப் போகிறீர்கள்? இரவு இங்கேயே தங்கி விட்டுப் போகலாமே" என்று கூறினார்.

"இல்லை, ஹாஸ்டல் வார்டன் கோபிப்பார். நாங்கள் காலையில் வருகிறோம்" என்று கூறிவிட்டு, அவர்கள் புறப்பட்டு விட்டார்கள்.

மனம் விட்டும், வாய் விட்டும் பேச வேண்டிய விஷயங்கள் எவ்வளவோ இருந்த போது, அவர்களால் அங்கே எப்படித் தங்கியிருக்க முடியும்?

மாடிமேல் நின்று, அவர்களுடைய உருவம் மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்தாள் சகுந்தலை. அதற்குப் பிறகும் வெகு நேரம் வரை அவள் வரப் போகும் இன்ப வாழ்வைப் பற்றி இன்பக் கோட்டைகள் கட்டினாள்.


# Mr. – Mrs. – or – Miss – !

*This is the* EXACT THING *You're looking for* —

A. E. I.

STEEL TOILET STAND

— DESIGNED TO SUIT YOUR NEEDS AND PURSE YOUR TOILET, BATH, SHAVE OR POOJA ARTICLES ACCOMODATED JUST TWO NAILS HOLD IT ON THE WALL. STURDY SINGLE-SHEET STEEL STAND —


Price : Rs. 2/4- Postage Extra.

*Manufacturers :*


ALLIED ENGINEERING INDUSTRIES

MALLESWARAM P.O., BANGALORE








1. ரஷ்யாவில் இந்திய ஸ்தானிகராக இருக்கும் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட்டைக் கௌரவிக்கப் புது டில்லியில் ஒரு விருந்து உபசாரம் நடந்தபோது, கவர்னர்-ஜெனரல் மௌண்ட்பேட்டன் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட்டை வரவேற்கிறார்.

2. பாடியாலா மகாராஜாவும் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மியும் மேற்படி விருந்தின் போது சம்பாஷித்துக் கொண்டிருக்கும் காட்சி.

3. ராஜாஜியின் எழுபதாவது பிறந்த தின விழா நாடெங்கும் குதூகலமாகக் கொண்டாடப்பட்டது. புது டில்லி தமிழ்ச் சங்கத்தில் ராஜாஜியின் திருவுருவப் படத்தை மத்ய சர்க்கார் நிதி மந்திரி ஸ்ரீ ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் திறந்து வைத்தபோது எடுத்த படம்.







# புத்தகம் எப்படி?

## குண்டூசி

[சினிமா மாதப் பத்திரிகை. ஆசிரியர்: பி. ஆர். எஸ். கோபால். விலை: அணா எட்டு. விலாசம்: 246, தம்பு செட்டித் தெரு, சென்னை.]

சமீப காலத்தில் வெளிவந்துள்ள பல சினிமா சஞ்சிகைகளில் 'குண்டூசி' மாதப் பத்திரிகையும் ஒன்று. பல சிறப்பான அம்சங்களுடனும், அழகிய மூவர்ணப் படங்களுடனும், வெளி வந்துள்ள இந்தப் பத்திரிகையில் சினிமா அன்பர்கள் விரும்பிப் படிக்கும் ஒரு விசேஷப் பகுதியும் இருக்கிறது. அது தான் குண்டூசியின் கேள்வி-பதில்.

பம்பாயிலிருந்து வெளியாகும் 'பிலிம் இந்தியா' என்ற பிரசித்த ஆங்கில சினிமா சஞ்சிகையிலும் கேள்வி-பதில் பகுதி வெகு காலமாக நடந்து வருகிறது. மேற்படி பத்திரிகை செல்வாக்குடன் நடைபெறுவதற்கு மேலே கண்ட கேள்வி-பதில் அம்சமே முக்கிய காரணம் என்று கூடச் சொல்லலாம்.

ஆனால்மேற்படி 'பிலிம் இந்தியா' பத்திரிகையில் கேள்வி-பதில் அம்சம் ரொம்பவும் ஆபாச முறையில் கையாளப்படுகிறது.

குண்டூசிப் பத்திரிகையில் வெளியாகும் கேள்வி-பதில்கள் அந்த ரகத்தைச் சேர்ந்தவையல்ல. மிக உயர்தரமான முறையில் கையாளப்படுகின்றன. இதுவரை வெளி வந்துள்ள மூன்று இதழ்களும், கண்ணியமாகவும், உன்னதமாகவும், ஆண்கள், பெண்கள், குழந்தைகள் யாவரும் விரும்பிப் படிக்கும் முறையிலும் அமைந்திருப்பதைப் பார்க்க மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம்.

குண்டூசிக்கே பிரத்தியேகமான கேள்வி-பதில் அம்சத்தைத் தவிர இன்னும் பல விசேஷப் பகுதிகளும் காணப்படுகின்றன. சினிமாத் தொழில் நுணுக்க சம்பந்தமான கட்டுரைகள், பட விமரிசனங்கள், நட்சத்திரங்களின் வாழ்க்கை வரலாறுகள் எல்லாம் இருக்கின்றன. பிரிக்கும் பக்கங்களெல்லாம் கண்ணைக் கவரும் வர்ணப் படங்களும், கருத்தைக் கவரும் கட்டுரைகளும், ஹாஸ்யச் சித்திரங்களும் நிரம்பிக் கிடக்கின்றன. இத்தகைய உயர்ந்த வெளியீட்டுக்கு எட்டணா விலை ரொம்பவும் மலிவு என்றே சொல்லத்தோன்றுகிறது.

## ஸ்ரீ ராம கிருஷ்ணர்— ஒரு தீர்க்கதரிசி

[எழுதியது: வெ. சாமிநாத சர்மா; பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம், சென்னை, புதுக்கோட்டை; விலை ரூ. 2-4-0]

சூரியன் அஸ்தமனமாகி இருள் கவிந்ததும் தட்சிணேசுவர ஆலயத்தில் 'ஓம் ஓம்' என்று மணியோசை முழங்கி அன்றைய தினம் பகல் பொழுது கடந்து விட்டதை அறிவிக்கும் போது ராம கிருஷ்ண பரமஹம்ஸருக்கு மனதில் ஒரு பெரும் கொந்தளிப்பு உண்டாகுமாம்.



"என் வாழ்நாளில் இன்று ஒரு நாள் கழிந்து விட்டதே; கடவுளை என்று நான் காணப் போகிறேன்?" என்று கதறிப் பதறுவாராம்.

கடவுளைக் காண வேண்டுமென்று இப்படிப் பிடிவாதமாக வாழ்க்கை நடத்திய ராம கிருஷ்ண பரமஹம்சரை மகான், தீர்க்கதரிசி, அவதார புருஷர் என்றெல்லாம் அழைப்பதில் ஆச்சரியம் சிறிதும் இல்லை

மக்களுடைய அஞ்ஞானத்தைப் போக்க வேண்டிய காலத்தில் தோன்றி, தூய்மையான வாழ்க்கை நடத்தியவர். சிரத்தையுடன் ராமகிருஷ்ணர் தம்முடைய மேலான உபதேச மொழிகளின் மூலம் உலகத்தை உய்வித்தவர். உலகில் தோன்றிய பல மகான்களுடன் பரமஹம்ஸரை ஒப்பிட்டுப் பார்த்தால் எல்லா அம்சங்களிலும் மேம்பட்டவராகவே இருப்பார்.

ராமகிருஷ்ணர் அனைத்தையும் துறந்தார். ஆனால் தனக்குப் பின் உலகத்தாருக்கு உபதேசம் செய்ய இவர் உலகத்திற்கு நன்கொடையாக விவேகானந்தரை அளித்தார்.

ராமகிருஷ்ணர் தாம் அனுபவத்தில் கண்ட அரிய கருத்துக்களைப் பிறருடன் சம்பாஷித்துக் கொண்டிருக்கும் போதே வெளியிடுவார். அக்கருத்துக்களெல்லாம் பொன்னால் பொறிக்கப்பட வேண்டிய அரிய உபதேச மணிகளாகும். அவை மனித வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதவை. பணத்தைப் பற்றி அவர் கூறுவதாவது:

"பணமிருந்து விட்டால் அது மனிதனை எவ்வளவு மாற்றி விடுகிறது...ஒரு தவளை, தனது வளையில் ஒரு ரூபாய் வைத்துக் கொண்டிருந்தது. ஒரு நாள் ஒரு யானை அந்த வளையின் மீது போய்க் கொண்டிருந்தது. உடனே தவளைக்குக்கோபம் வந்துவிட்டது. தன் வளையிலிருந்து வெளியிலே வந்து, யானையை உதைக்கிறாற்போல் காலைத் தூக்கிக் கொண்டு 'ஏ யானையே, என் தலை மீது நடந்து செல்ல உனக்கு எவ்வளவு தைரியம்?' என்று கேட்டது. பணத்தினால் உண்டாகக் கூடிய கர்வம் இத்தகையது."

ராமகிருஷ்ணர் தோன்றிய காலம், வாழ்ந்த வாழ்க்கை, அவருடைய மகிமை, அவர் அளித்த நன்கொடை, உபதேச மணிகள் என்ற தலைப்புக்களில் விரிவாகத் தெள்ளிய தமிழில் எழுதப் பட்ட புஸ்தகம் தான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்—ஒரு தீர்க்கதரிசி.

பிரபல அறிஞர் ஸ்ரீ வெ. சாமிநாத சர்மா அவர்கள் இதை எழுதியிருக்கிறார் என்றால் புத்தகத்தின் சுவையைப் பற்றிச் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

# அன்றும் இன்றும்

வஸுமதி ராமசாமி

அன்று கமலு வழக்கம்போல் மாலை வேளையில் முன் பக்கத்து ஹாலில், ஏதோ ஒரு புத்தகத்தைக் கையில் துணைக்கு வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். மனம் உற்சாகத்தை இழந்திருந்தது. குழந்தைகளை வண்டியில் பீச்சுக்கு அனுப்பி விட்டாள். பெரிய பங்களா. வாசற்புறம் காவற்காரன் தூங்கிக் கொண்டே உட்கார்ந்திருந்தான். உள்ளே சமையற்காரன் ஐந்தாறு வித கறி வகைகளுடன் சமையல் செய்து கொண்டிருந்தான். கூப்பிட வாயெடுக்கு முன் கட்டளையை நிறைவேற்றப் பல வேலைக்காரர்கள் அந்த பங்களாவில் உண்டு. சுக வாழ்க்கைக்குத் தேவையான எல்லாப் பொருள்களுமே இருந்தன. திருமகள் வர்சஸ்தலமாகவே விளங்கியது. முதன் முதல் இந்தப் போகப் பொருள்களையெல்லாம் கண்டு ஆனந்தித்த மனம் நாளுக்கு நாள் உற்சாகத்தை இழக்க ஆரம்பித்தது. பிறகு கமலுவுக்கு வீட்டிலிருக்கும் யந்திரங்களோடு தானும் ஒரு யந்திரமாக உலாவுவது போல் தோன்றியது. தன்னுடைய உணர்ச்சியும், ஆனந்தமும், கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்வதை அறிந்தாள். இவ்வளவு ஐசுவர்யத்தையும், குழந்தைகளையும் கடவுள் அளித்திருக்கும் பொழுது அவள் மனம் குறைப்படுவானேன்?

கமலு சிந்தனையில் ஆழ்ந்திருக்கும்பொழுது டெலிபோன் மணி கணகணவென்று அடித்தது. முணுமுணுத்தபடியே எழுந்து ரிஸீவரை எடுத்துக் கேட்டாள். வேறு யாருமில்லை. அவள் கணவன் சந்துருதான். அவன் பேசியதைக் கேட்டு ஏன் இவள் முகம் இப்படி வீங்கி வெடிக்கிறது? கமலுவை ஏதாவது கடுஞ் சொற்கள் சொன்னானா? இல்லை. "கமலு! இன்று சுப்பய்யர்ச் செட்டி பள்ளிக்கூடத்தில் வருஷாந்திர விழா நடக்கிறது. என்னைத் தலைமை வகிக்கும்படியாகக் கேட்டுக் கொண்டார்கள். நானும் ஒத்துக் கொண்டு விட்டேன். ஆகையால் வீட்டிற்கு வர இரவு ஒன்பது மணி ஆகும். நீ காத்திராமல் சாப்பிடு" என்றான்.

இவை தான் சந்துரு சொன்ன வார்த்தைகள். இந்த வார்த்தையில் கடுமை இல்லை. அருமைதான் தொனித்தது. ஆனால் ஏனோ பொல்லாத கமலு பொருமினாள். மறுபடியும் ஐந்து வருஷங்களுக்கு முன் நடந்தேறிய வாழ்க்கையை நோக்கி ஓடுகிறது அவள் மனம்.

## 2

மயிலாப்பூர் ஆதம் தெருவில் ஒரு சின்ன வீட்டில் கமலு குழந்தை சுகுணாவை வைத்துக் கொண்டு வீதியை நோக்கியபடி நின்றாள். கொஞ்ச தூரத்தில் கலைந்த தலையுடன் களைத்த முகத்துடன், கையில் ஒரு பொட்டலத்துடன் சந்துரு வருகிறான். சமீபத்தில் வந்ததும் இருவர் மனமும் மலர்கின்றன. பொட்டலத்தைக் கமலு ஆவலுடன் வாங்குகிறாள். சுகுணா தன் அர்த்தமற்ற பாஷையில் உளறிக் கொண்டே அப்பாவின் மேல் தாவுகிறாள். "உனக்குத்தான் கமலு! உன் உடம்பு நிறத்திற்கு இந்த நீல வர்ணப் புடவை மிகவும் அமைப்பாயிருக்குமே யென்று வாங்கி வந்தேன். எப்படி இருக்கிறது கமலு? என அன்பொழுகக் கேட்டான். கமலுவுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. புடவையைத் தொட்டுத் தொட்டு பார்த்துக் கொண்டாள்.

சந்துரு 'ஜனநாயக' பாங்கில் காஷியர் வேலையில் இருந்தான். பாங்கியில் காஷியர் வேலை என்றால் அந்த பாங்குக்குத் தாலி கட்டினாற் போல்தான். எல்லோருக்கும் அரைமணி முன்னால் காரியாலயத்தில் போய் உட்கார்ந்து விடவேண்டும். எல்லோரும் வீட்டிற்குச் சென்று ஒரு மணி நேரத்துக்குப் பிறகு கிளம்பவேண்டும். கையில் இரும்புப் பெட்டிச் சாவியை மறக்காமல் கொண்டு போய், கொண்டு வரவேண்டும். சம்பளம் என்னவோ எண்பத்திரண்டரை ரூபாய் தான். ஒரு நாள் லீவு எடுக்க முடியாது. ஆனால் அந்த உத்தியோகத்துக்கு ஒரு பெருமை. ஒவ்வொரு நாளும் லட்சக் கணக்கான ரூபாய்களை எண்ணி வைத்து சந்தோஷப்படலாம். இந்த உத்தியோகத்திலிருந்தாலும் சந்துருவுக்குச் சிடுசிடுப்பில்லை. கமலுவிடம் இணையற்ற அன்பு இருந்தது.

சந்துருவின் மாமனார் சுமாராக வருமானமுள்ள டாக்டர். அவருடைய முதல் மூன்று பெண்களையும், நல்ல செல்வமுள்ள குடும்பத்தில் கொடுத்து மணம் செய்து விட்டார். கமலு தான் கடைசிப் பெண். மிகவும் செல்வமாக வளர்க்கப்பட்டாள். கமலுவுக்கும் பணக்கார புருஷன் வராதது அவருக்குக் குறைதான். சந்துரு புத்திசாலியாயிருப்பதால் பெரிய உத்தியோகமாவது ஆகுமென்று எதிர்பார்த்தார். புத்திசாலித் தனத்திற்கும் உத்தியோகத்திற்கும் சம்பந்தமில்லை என்று அவர் அறியவில்லை. ஆனால் கமலு நல்ல பெண். சந்துருவின் குறைந்த சம்பளத்தில் அன்னியோன்னியமாகக் குடும்பம் நடத்தினாள்.

ஒவ்வொரு மாதமும் பணம் போதாமல் சிரமப்படும் பொழுது சந்துரு அன்புடன், "என்றுதான் நிறையச் சம்பாதித்து உன்னை நன்றாக வைத்துக் கொள்வேனோ" என்று உணர்ச்சிப் பெருக்குடன் சொல்லுவான். அவ்வன்பில் கமலு கரைந்து விடுவாள். அவளுக்கு, சந்துருவுக்காகத் தான் பெரிய தியாகம் பண்ணுவதாக ஆனந்தம். அதே போல சந்துரு காரியாலயத்தில் வேலை செய்யும் பொழுது, 'கமலுவுக்கு இன்று ஏதாவது வாங்கிப் போக வேண்டும்' என்று நினைப்பான். பூக்கடையில் வந்து தஞ்சாவூர் கதம்பத்தை இரண்டணாவுக்கு வாங்கிக்கொண்டு அந்த இரண்டணாவைச் சரிக்கட்ட பீச்சோடு நடந்து ஓட்டமும், நடையுமாக வீடு வந்து சேருவான். தன் கையாலேயே பூவைக்கமலுவுக்குச் சூட்டி ஆனந்திப்பான். ஏன்? கர்ப்பமாயிருக்கும் பொழுது ஒரு சமயம் கமலு தனக்கு ரோஜாப் பூ குல்குந்து பிடிக்குமென்று சொல்லி விட்டாள். அவ்வளவு தான்; சந்துரு 'டைப்பிஸ்ட்'டிடம் இரண்டு ரூபாய்கள் கடன் வாங்கி எட்டுக் கடை சுற்றி அடித்து அன்று மாலை ஒரு புட்டி குல்குந்துடன் வந்து சேர்ந்தான். "நன்றாயிருக்கிறது, என்னமோ வார்த்தைக்குச் சொன்னால் அதற்காக வாங்கி வரவேணுமா? நமக்குக் கட்டுமா?" என்று கொஞ்சலாக அதட்டினாள் கமலு. சந்துருவின் ஒரே யோசனை, ஒளிந்து கொண்டிருக்கும் செல்வத்தை எப்படியாவது கண்டு பிடித்து, கமலுவை சுகமாய் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான். அதைக் கமலுவிடம் சொல்லிச் சொல்லி எவ்வளவோ நாட்கள் அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறான்.

நிற்க. கமலு தினந்தோறும் அவசர அவசரமாகச் சமைத்து மூடி வைத்துவிட்டு, கணவன் வரவுக்காகக் காத்திருப்பாள். சந்துரு வந்ததும் இருவருமாகக் காற்று வாங்க பீச்சுக்குப் போய் வருவார்கள். அந்த ஆனந்தம் இப்போது எங்கே போய்விட்டது?

## 3


காலம் ஓடியது. உலக யுத்தமும் தொடங்கியது. தலை கீழாய் எல்லாம் மாறின. சந்துருவின் நண்பன் ராமமூர்த்தி கலெக்டர் உத்தியோகத்தில் இருந்தான். குபீரென்று எல்லோரும் குசேல குபேரர்களாக ஆனதைப் பார்த்தான். சந்துருவுக்கும் பளிச்சென்று ஒரு யோசனை தோன்றியது. பிதுரார்ஜிதமாய் இருந்த இரண்டு மூன்று காணி நிலத்தை ஆயிரம் ரூபாய்க்கு விற்றான். உத்தியோகத்தை ராஜிநாமாச் செய்தான். அந்த ஆயிரம் ரூபாய்களைக் கொண்டு ராமமூர்த்தியின் உதவியால் யுத்த சாமான்களுக்கு காண்ட்ராக்ட் எடுத்துக் கொள்ள ஆரம்பித்தான்.

முதன் முதலில் இரும்புக் கிட்டில்கள் கூலி ஆள்களை வைத்து செய்யச் சொல்லி ஒரு ரூபாய் செலவில் அடக்கமான கிட்டிலை மூன்று ரூபாய்க்கு விற்றான். அடுத்த ஒப்பந்தம் நிறைய விளக்குகள் செய்யச் சொல்லி வந்தது. எட்டணா செலவில் செய்த விளக்குகளை இரண்டு ரூபாய்க்கு விற்றான். இப்படியாக மேலும் மேலும் வரும்படி அதிகரித்தது. நான்கு வருஷத்தில் சொந்தத்தில் பெரிய தொழிற் சாலையும் ஏற்பட்டது. லக்ஷ்மியும் கடைக்கண் நோக்கி விட்டாள்.

இப்பொழுது சந்துரு, சந்தர் ஆக மாறிவிட்டார். "ஹலோ, சந்தர்!" என்று வாய் குளிரக் கூப்பிட்டுக் கொண்டு வரும் நண்பர்கள் கூட்டம் அதிகரித்தது. ஒரு பங்களாவும் வாங்கினான். இந்த நான்கு வருஷத்தில் ராஜி, சுண்டு இருவரும் பிறந்தார்கள். குழந்தைகளைக் கவனிக்க ஆயா ஏற்பட்டாள். கமலுவுக்கு விதவிதமான ஆடை ஆபரணங்கள், ஆள், வண்டி, வாகனம் ஒன்றுக்கும் குறைவு கிடையாது.

ஆனால், சந்துருவுக்குக் கமலுவோடு பேச அவகாசமில்லை. வீட்டில் தங்கப் போதில்லை. ஒரு நாள் கமலுவுடன் பீச்சுக்குப் போக முடியவில்லை. பொதுக் காரியத்துக்கும் தர்ம கைங்கர்யத்துக்கும் சந்தரைக் காண வரும் கூட்டம் பெருகிற்று. ஒவ்வொருவருடனும் இரண்டு நிமிஷமாவது பேச வேண்டி வந்தது. கமலுவை கிளப்பில் சேரச் சொல்லியும், சபாக்களில் சேரும்படியாகவும் சிநேகிதிகள் வந்து குவிந்து கொண்டே இருந்தார்கள்.

பழைய வாழ்க்கையில் அவன் கறி நறுக்க, அவள் சமைக்க, இருவரும் பறிமாறிக் கொண்டு சாப்பிட்ட சாதமும் ரஸமும் அமுதமாக இருந்தது கமலுவுக்கு. ஆனால் இன்றோ சமையல்காரன் ஐந்தாறு வகை செய்கிறான். வாயில் வைப்பதற்கில்லை, அன்று இவள் வேலைகளை முடிப்பதற்குள் சந்துரு ஒரு பாயை உதறிப் போடுவான். நிம்மதியாகத் தூங்குவார்கள். இன்று வேலைக்கார முனுசாமி தும்பைப் பூ போன்ற நிறமுடைய உறை விரிப்புகளுடன் கூடின படுக்கையைத் தட்டித் தட்டிப் போடுகிறான். தலைக்கு நேரே மின்சார விசிறி சுழலுகிறது. சந்துரு மறு நாள் தொழிற்சாலை வேலையைப் பற்றி, அதை எப்படிப் பெரிதாக்குவது, அதற்கு என்ன செய்வது என்ற பிரச்னையில் புரண்டு கொண்டிருப்பான். கமலுவோ, "இதென்ன பிடித்து வைத்த பிள்ளையார் மாதிரி வாழ்க்கை" என்று வருந்துவாள். அன்று கமலுவின் சங்கீதம் இன்பமாக இருந்தது. இன்று யாராவது ரேடியோவை முடுக்கி விட்டால்



(அவன் தொழிற் சாலையைப் பற்றி மனக் கணக்குப் போடும் சமயமாக இருக்கும்) "அதை என் கத்த விடுகிறீர்கள்?" என்று சந்தர் வெள்ளென்று விழுவான். வாசலில் கட்டியிருக்கும் நாயும் லொள் லொள்ளென்று குலைக்கும்.

கோட்டுப் பையில் முழும் கதம்பம் கொண்டு வந்து கொடுத்தால், அதைப் பெருமையாக மூன்று நாள் வைத்துக் கொண்டது போக, இப்பொழுது தோட்டம் முழுவதும் பறிப்பாரின்றி புஷ்பம் பூத்துக் குலுங்கின. இப்படி மணிக்கணக்கில் கமலு தன் வாழ்க்கையை அன்றும் இன்றும், ஒப்பிட்டு ஏங்கி வருந்திக் கொண்டிருக்கும் பொழுது சந்துரு வந்தான். கமலுவின் வாடின முகத்தைப் பார்த்ததும் அவன் மனமும் தன் பழைய வாழ்க்கையை ஒரு நிமிஷம் சிந்தித்தது. "கமலு! நமது தொழிற் சாலையை ஒரு மாதிரி பங்கீடு செய்து விட்டேன். இனி உன்னுடனும், குழந்தைகளுடனும் சாவதானமாக இருக்கலாம்!" என்றான். அதில் பழைய வாஞ்சை எட்டிப் பார்த்தது.

கமலுவும் லேசான சிரிப்புடன் அவனை நிமிர்ந்து நோக்கினாள். கணவன் சொன்னது நிஜந்தானா என்று அவளால் நம்ப முடியவில்லை. இவ்வளவு காலமாக இருந்த பரபரப்பை, எப்படி அவர் குறைத்துக் கொண்டார்? ஒருக்கால் என் உள்ளத்து ஏக்கத்தைப் புரிந்து கொண்டிருப்பாரோ என்று எண்ணினாள். சந்திரன் பேச்சு அவளது நெஞ்சலைகளுக்கு உதவி செய்தது. டெலிபோன் மணி அலறியது. கமலு கோபத்துடன், "ஹலோ! யாரது?" என்று கத்தினாள். "நான் தான் பாஸ்கர நாயுடு; மிஸ்டர் சந்தரை நம்பனுலே விஷயமாய்க் கண்டு இப்பொழுது பேசணும்" என்ற பதில் வந்தது. கமலு முகத்தைச் சுளித்துக் கொண்டே, "அவர் ஊரில் இல்லை! நாளைக்குத்தான் வருவார்" என்று கண்டிப்பாகச் சொல்லி, 'டக்' கென்று ரிஸீவரை மேஜை அதிர வைத்தாள். இதைக் கேட்டுக் கொண்டிருந்த சந்துரு கமலுவைப் பார்த்துச் சிரித்தான்.

"இந்தச் சிரிப்பிற்கு என்றும் குறைவு ஏற்பட்டுவிடக் கூடாது ஈசுவரா!" என்று மனதிற்குள் பிரார்த்தித்து கொண்டாள் கமலு.


ஹாஸ்யச் சுரங்கம்

ஸ்ரீ ரா. பார்த்தசாரதியின் (பாரதன்)
ஹாஸ்யக் களஞ்சியம்

விலை ரூ. 2.8.0

கண்ணன்
தமிழ்ப் பண்ணை தியாகராய நகர் சென்னை-17

பாரசரசு

பொங்கல் மலர்

அழகிய மூவர்ணப் படங்கள், அறிஞர்களின் கட்டுரைகள்,
அற்புதமான சிறு கதைகள்.

விலை ரூபாய் இரண்டு.
தபால் செலவு அணா எட்டு

பாரசரசு காரியாலயம்

45, 46 அரண்மனைக்காரத் தெரு, :: சென்னை-1.

வெள்ளி மணி

வாரப் பத்திரிகை

வருட சந்தா ரூ. 12 0 0
ஆறு மாத சந்தா ரூ. 6 0 0

மானேஜர்:
வெள்ளி மணி

தியாகராயநகர் :: சென்னை 17.


# சிறையில் தவம்

## மேற்கு வங்காள கவர்னர் ராஜாஜி

**டிசம்பர் 24உ**

இன்று மாலையில் அறையைப் பூட்டிய பிறகு என்னை யறியாமலே ஒருவித மனச் சோர்வும் குழந்தைகளைப் பற்றிய நினைவும் என்னுடைய மனத்தில் வந்து தோன்றின. முதலில் அகற்ற முடியாதென்றே தோன்றியது. கவலையை அகற்றுவதற்காக அரும்பாடு பட்டுக் கொண்டிருந்தேன். அந்தச்சமயத்தில் எனக்குக்கீழ்க் கண்ட எண்ணங்கள் தோன்றி உதவி செய்தன:—

"வேலையின் நிமித்தம் அனேகர் மாதக் கணக்காக மட்டுமின்றி வருஷக் கணக்காகக் கூடத் தங்கள் குடும்பத்தை விட்டுப் பிரிந்திருக்க வில்லையா? அவர்கள் எல்லோரும் சந்தோஷமாயிராமல் துக்கப்படவா செய்கிறார்கள்? நீயும் கூட இதற்கு முன் குழந்தைகளை விட்டுப் பிரிந்து இருந்ததில்லையா? ஏதோ, இப்போது சிறையிலிருப்பதாக எண்ணியே இப்படி மனச் சோர்வுக்கு இடங் கொடுத்து விட்டாய்."

மேற்கண்ட கேள்விகளை நானே கேட்டுக் கொண்டேன். அதிலிருந்து மனச் சோர்வு நீங்கப் பெற்றேன்.

தினந்தோறும் இருட்டியதும் காயத்திரி மந்திரத்தை நூற்றெட்டுத் தடவை ஜபித்து வருகிறேன். ஆரம்பத்தில் மனத்தை ஒரு நிலையில் நிறுத்துவது கஷ்டமாகவே இருந்தது. ஆனால், இப்பொழுது எளிதாகவே இருக்கிறது. ஆண்டவனுடன் ஐக்கியமாகி இந்தச் சிறையின் கம்பிகளை முறித்து விடக் கூடிய சக்தியைப் பெற்று விட முடியும் என்று எண்ணுகிறேன். என்னுடைய மனத்திலுள்ள மாசுகளை நீக்கி என்னை ஆற்றலுடையவனாக ஆக்கிக் கொள்வதற்கான இந்தப் பெரிய சந்தர்ப்பத்தை இறைவன் எனக்கு அருளியிருக்கிறான். உலகத்தில் நல்ல காரியத்துக்காகச் சிறைவாசம் அனுபவித்தவர்கள் வெகு சிலரே. அந்த வீரர்களில் எத்தனை பேரை நம்முடைய தாய் நாட்டில் காண முடியும்? அந்தச் சிலரில் நானும் ஒருவனாகி விட்டேன். அத்தகைய அதிருஷ்டத்தை அடைந்து விட்டதாகவே எண்ணுகின்றேன். இது கர்வம் தான். ஆனால், கடவுளை நம்பி ஆற்றல் பெற இதுவும் ஒரு வழியாயிருப்பதால் இப்படிக் கர்வம் கொள்வது தவறாகாது என்று எண்ணுகிறேன்.

பத்தே கான்முகமது கௌஸ் கொடுத்த மெழுகுத் திரியை இன்று கொளுத்தி வைத்திருக்கிறேன். மெழுகுத் திரி இத்தகைய அமைதியான புனித ஒளி தருவதை நான் இதற்கு முன் என்றுமே கண்டதில்லை.

என்னிடம் இரண்டு மகத்தான குறைகள் இருக்கின்றன. ஒன்று சமஸ்கிருத மொழி தெரியாதது. மற்றொன்று இசை தெரியாதது. இந்த இரண்டும் தெரியாமல் எந்த இந்துவும் பக்தி நிறைந்த வாழ்வு பெற முடியாது என்று எண்ணுகின்றேன். இந்த இரண்டும் இருந்து விட்டால் தன்னந் தனியாகவுள்ள பாலைவனம் கூட பக்தியும் பரமானந்தமும் நிறைந்த புண்ணிய பூமியாக ஆகி விடும் என்பதில் என்ன சந்தேகம்?

**டிசம்பர் 25உ**

இன்று நான் சிறைக்கு வந்த ஐந்தாம் நாள். நம்மை ஆள்கிறவர்களுக்கு கிறிஸ்து ஜயந்தி. அந்தப் புண்ணிய ஆத்மாவின் ஆவி அவர்களுடைய உள்ளத்தைத் தூய்மை செய்து ஒளி தருமாக!

முகமது கௌஸுக்கு பலமான உடல். அவர் இரவில் மண் பானையில் விட்டு வைத்திருந்த குளிர்ந்த ஜலத்தைக் காலையில் திறந்து வெளியில் குளிக்கிறார். துன்பத்தை ஏற்பதன் மூலம் வெற்றி பெற விரும்பும் சத்யாக்கிரகிகள் அவரைப்போல் திடகாத்திரர்களாய் இருப்பது அவசியம்.



'ஆந்திர நண்பர்கள் கிணற்றில்...'

இன்று காலை நான் 'கஞ்சி'யிலுள்ள நீரை மட்டும் பருகினேன். அதிலுள்ள சாதத்தைத் தோட்டிக்குக் கொடுத்தேன். அதைக் கண்ட பிரதம வார்டர் முகங் கடுத்தார். நான் காலையில் காப்பி குடிப்பதாகச் சொன்னேன். இந்த ஹாஸ்யம் அவருக்குப் பிடிக்கும் என்றே அவ்விதம் கூறினேன். இந்த விதமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தால் நான் பட்டினி கிடக்க வேண்டியதாகவே நேரும் என்று எண்ணுகிறேன். ஆயினும் என்னுடைய ஆஸ்துமாவையும் பருக்களையும் பட்டினி போட்டு ஒழித்து விட இது ஒரு நல்ல உபாயம் என்று தோன்றுகிறது.

யாரோ போய் உதவிச் சிறை அதிகாரியிடம் எனக்காகப் பரிந்து பேசியிருப்பதாகத் தெரிகிறது. அதிகாரியின் விசாரணையும் பரிவும் வெறும் தடபுடல் செய்ததைத் தவிர வேறு எவ்வித நன்மையையும் செய்துவிடவில்லை. ஆயினும் அவர் நான் ஸ்நானம் செய்வதற்காக ஒரு பானை வெந்நீர் அனுப்பும்படி உத்திரவிட்டார். அப்படியே ஒரு பானை வெந்நீர் அடுக்களையிலிருந்து வந்து சேர்ந்தது. அங்கிருந்து வந்ததால் தூசி தும்புகள் காணப்பட்டதில் ஆச்சரியமில்லை. அத்துடன் அது உணவுப் பொருள்களின் வாசனையும் உடையதாக இருந்தது. ஆயினும் நேற்றுக் குளிக்காததால் இன்று அந்த ஜலத்திலேயே குளித்து விட்டேன்.


ஆந்திர நண்பர்கள் கிணற்றில் குளித்துக் கொண்டிருந்தார்கள். அறைக் கம்பிக்கு மேலாக எட்டிப் பார்த்து அவர்களுக்கு வணக்கம் செய்தேன்.

கடுங்காவல் தண்டனை பெற்ற கைதிகள் சிலரை வேலைக்கு அழைத்துச் சென்றார்கள். அவர்கள் என்னைக் கண்டதும் 'வந்தே மாதரம்' என்று கோஷித்துக்கொண்டு எனக்கு வணக்கம் செய்தார்கள். அவர்களுக்கு வணக்கம் செய்வது எனக்குச் சந்தோஷமாயிருந்தது. இந்த மாதிரி இடையிடையே பார்த்துக் கொள்வதும் வணக்கம் செய்வதும் இத்தகைய வீரர்களுடைய சிறை வாழ்க்கைக்குச் சிறிது

களிப்பு ஊட்டுவதாக் இருக்கின்றன. அப்படி வேலைக்குப் போனவர்களில் திருவண்ணாமலையி லிருந்து வந்திருந்த சத்யாக்கிரகிகளும் இருந்தனர்.

என்னுடைய வார்டர் பெருமாள் எனக்கு க்ஷவரம் செய்வதற்காக ஒரு க்ஷவரக் கத்தியும், கண்ணாடியும், ஆந்திரர்கள் அடைக்கப்பட்டிருந்த பகுதியிலிருந்து கொண்டு வந்து கொடுத்தார். எனக்கு க்ஷவரம் செய்து கொள்வதில் சாமர்த்தியம் போதாது. கத்தியும் மழுங்கி யிருந்தது. அதனால் சிறிது காயம் பட்டுவிட்டது. பிற்பகலில் ஒரு நாவிதரையே கூட்டிக்கொண்டு வந்தார்கள். செட்டியும் பிறரும், மயிரை வழித்து முகத்தைத் தூய்மை செய்து கொள்ளும் பாக்கியத்தை அன்று பெற்றவர்கள்.

எங்கள் சிறையின் உதவி அதிகாரியைவிட அதிகமாக வேறு யாரும் நம்முடைய சத்தியாக்கிரகிகளை இழிவாக எண்ணியதில்லை என்று நான் உறுதி கூற முடியும். அவரும் மற்ற அதிகாரிகளும் அதிகத் தவருக நடந்து கொண்டிருக்க வேண்டும். அதிகாரிகள் தவருக நடந்தால் நாம் நேருக்கு நேராகக் கூறித் திருத்துவதுதான் நம்முடைய கடமை. அதை விட்டு அவர்களை மேலதிகாரிகள் தண்டிக்கும்படியான நிலைமையை உண்டு பண்ணுவதும் உண்டு பண்ண முயல்வதும் தவறு. நம்முடைய கோட்பாட்டின் அழகை எல்லோருக்கும் காட்டக்கூடிய சந்தர்ப்பம் சிறையில் கிடைத்திருக்கிறது. விஷயம் அறியாதவர்கள் மட்டுமின்றி நம்மிடம் துவேஷம் காட்டுகிறவர்களும்கூட நம்முடைய நடத்தையைக் கண்டு ஆச்சரியப் படும்படியாகச் செய்யலாம். எவ்வள



'...குழாயில் தண்ணீர் வருமா...'

வுக் கெவ்வளவு சிறை நிர்வாகம் ஊழலாக இருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு நம்முடைய சிறைவாசத்தை மகாத்மாவின் தத்துவத்தின் மேன்மையை விளக்கக்கூடிய சந்தர்ப்பமாக்ச் செய்து கொள்ள வேண்டும். நாம் சிறையில் இருந்தாலும் அவருடைய உபதேசப்படி நடக்க வேண்டிய கடமை நமக்குண்டு. சிறை என்பது என்ன? மிருகங்களை அடக்கி வைப்பதற்காக மிருகங்களை நியமித்திருக்கும் ஒரு இழிவான உலகமே யாகும். அத்தகைய உலகத்திலும்கூட அஹிம்சைத் தத்துவத்தின் உயர்வை நாம் நிலைநாட்ட வேண்டும்.

*டிசம்பர் 26உ*

நேற்று இரவு ஆஸ்துமா ஏற்பட்டிருந்தது. மருந்து உண்ணவில்லை. என்னுடைய அறை $11\frac{1}{2}$ அடி நீளம் $8\frac{1}{2}$ அடி அகலம். கீழ்ப்பக்கத்தில் மட்டும் ஆறடி உயரத்தில் ஒரு சிறு சன்னல். அது சுமார் $4\frac{1}{2}$ அடி நீளம் ஒரு அடி அகலம், வளைவாகச் செய்திருந்தது. அறையின் நடுமத்தியில் நின்ருல் 10 அடி உயரமாக இருக்கும். அறையின் வாசல் கதவு பலகையால் செய்யாமல் கம்பிகளாலேயே செய்யப் பட்டதாகும். $6\frac{3}{4}$ அடி உயரம் 3 அடி அகலம். இந்த மாதிரியான அறைகள் 18 வரிசையாக மேற்கே பார்த்து கட்டப் பட்டிருந்தன. அவற்றின் முன்னால் ஐந்து அடி அகலமுள்ள ஒரு வராந்தாவும் அதன் முன்னால் ஒரு பெரிய முற்றமும் இருந்தன. எங்கள் அறைகளுக்குப் பின்னால் இருந்த சாக்கடையிலிருந்து துர்நாற்றம் எப்போதும் வந்து கொண்டிருக்கிறது.

இந்தப் பதினெட்டு அறைகளில் தெற்குக் கோடியிலிருந்த நான்கு அறைகளில் தூக்குத் தண்டனை பெற்ற கைதிகளை அடைத்து வைத்திருக்கிறார்கள். கை கால்களைச் சுத்தம் செய்வதற்காகவும் உணவு உண்பதற்காகவும் அவர்களை இடையிடையே வெளியே கூட்டிக்கொண்டு வருகிருர்கள். முற்றத்தின் தென் மேற்கு மூலையில் ஒரு தண்ணீர்க் குழாய் இருக்கிறது. ஆனால் அநேக சமயங்களில் அதில் ஜலம் வருவதில்லை. அதனால் எங்களுக்கு ஒரு பானையில் ஜலம் ஊற்றி வைத்து விடுகிருர்கள். இரண்டு வேப்ப மரங்கள் ஒரு தேக்கு மரம், ஒரு அரச மரம் ஆக நான்கு மரங்களே எங்கள் முற்றத்தை அலங்கரிக்கின்றன. அந்தப் பெரிய அரச மரத்தினடியில் சிறிய செங்கற் கட்டிகளைப் போட்டு வைத்திருக்கிருர்கள். கைதிகள் தங்கள் உணவுத் தட்டுக்களை அவற்றின் மீது வைத்துக் கொள்ளுகிருர்கள். அரச மரம் நல்ல

15—12—47



காசி இந்து சர்வ கலாசாலை சைவ சித்தாந்த வளர்ச்சிக்காக ரூபாய் இருபதினுயிரம் மூலதனமாக உதவியிருக்கிருர், திருப்பனந்தாள் மடத்துத் தம்பிரான் அவர்கள்.

16—12—47




கராச்சியில் பாகிஸ்தான் பிரதமர் லியாகத் அலிகான் தலைமையில் நடந்த கூட்டத்தில், லீகை, இந்தியா லீக், பாகிஸ்தான் லீக் என் பிரிப்பதாகத் தீர்மானிக்கப் பட்டது.

நிழல் கொடுக்கிறது. ஆனால் காகங்களின் தொல்லை அதிகமாயிருக்கிறது. எங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு அலுமினியத் தட்டும் ஒரு அலுமினியக் குவளையும் கொடுத்திருக்கிருர்கள். நாங்கள் எங்கள் உணவை முற்றத்தில் நின்று கொண்டோ, அல்லது வெறுந் தரையில் உட்கார்ந்துகொண்டோதான் உண்ண வேண்டியதா யிருக்கிறது. அதனால் நாங்கள் பாராக்காரர்களுடைய சிறிய குறடுகளின் மீது உட்கார்ந்துகொண்டு சாப்பிட்டு வருகிரோம். ஆனால், அது தவறு என்றே எண்ணுகிறேன்.

தினந்தோறும் மாலையில் கதவை இழுத்துப் பூட்டுவதற்கு முன் தோட்டி ஒவ்வொரு அறையிலும் இரண்டு மண் சட்டிகளைக் கொண்டு வந்து வைக்கிருர். இவை துர்நாற்றமுள்ளவைகளாயிருப்பதால் அவற்றை அறையின் பக்கத்தில் வைத்துக்கொண்டு தூங்குவதற்கு அருவருப்பா யிருந்தது.

அந்தச் சட்டிகளையும் அவர்கள் தினந்தோறும் வேறு வேறு அறையில் மாற்றி வைத்து விடுகிருர்கள். ஒன்றைக் கொண்டு ஒன்றை மூடி வைக்கலாம் என்று பார்த்தேன். ஆனால், சட்டிகளின் அடிப்பாகம் உருண்டிருந்தபடியால் மூடி வைத்தால் இரண்டும் உருண்டு கீழே விழுந்துவிடக் கூடிய [illegible] இருந்தன.

[illegible]ங்கே, சிறையில் நாகரிகமாக இ[illegible] முடியவில்லை. கொலைக் குற்றம் செய்[illegible] நீண்ட கால தண்டனை பெற்ற கைதி[illegible]ள்கூட நல்ல விதமாகவே நடக்கிருர்கள். சிறை நிர்வாகம்தான் அநாகரிகமாக நடக்கும்படி செய்கின்றதேயன்றி அவர்களாக அநாகரிகமாக நடந்து நான் பார்க்கவில்லை.



ஒரு பானை வெந்நீர்...

* * *

தூக்கு தண்டனை பெற்ற கைதிகளைக் காவல் காக்கும் வார்டர்கள் இரவு முழுவதும் கூச்சல் போட்ட வண்ணமாக இருக்கிருர்கள். "நாம் அடிக்கடி மாறிவிடுகிரோம். ஆனால் கைதிகளோ இரவு முழுவதும் இந்தக் கூச்சலுக்கு ஆளாகி வருகிருர்கள்" என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்ப்பதாகத் தெரியவில்லை. இரவில் முன்னேரத்தில் முகமது கௌஸ் அழகாகத் தோத்திரப் பாடல்களைப் பாடுவார். அந்த இசை வெள்ளத்தை யாரும் கெடுக்காமலிருந்தால் அங்குள்ள [illegible] கேட்டு நல்லுணர்ச்சி [illegible] ஆனால், அதற்கு இடையூறு [illegible] வருகிறது வார்டர்கள் சளசளவென்று உபயோகமற்ற கீழ்த்தரமான பேச்சுக்களை பேசுவது.


என்னுடைய உடைகள் பட்டணத்திலிருந்து வெளுத்து வந்துவிட்டன. என்னுடைய பணத்திலிருந்து எனக்கு வெள்ளைக் கடுதாசியும், உறைகளும், மெழுகுத் திரிகளும்தீப்பெட்டியும்சோப்பும், பற்பொடியும் வாங்கித் தரும்படி சிறை அதிகாரியிடம் கூறினேன். அந்தப் பொருள்களை அவர் மாலையில் கொண்டு வந்து தந்தார். சிறையில் நல்ல செருப்புக்கள் தைக்கிருர்கள். நான் ஒரு ஜதை வாங்கிக்கொண்டேன்.

புதிதாக ஐந்து ஒத்துழையாமைக்காரர்கள் வந்திருப்பதாகவும் அவர்களை வெளியிலுள்ள தனிச் சிறையில் அடைத்து வைத்திருப்பதாகவும் அறிகின்றேன்.

ஆந்திர தேசத்திலிருந்து வந்திருந்த கைதி ஒருவர்—அவர்ஒத்துழையாமைக்காரர் அல்ல - குற்றம் செய்து தண்டனை பெற்ற சாதாரணக் கைதி. அவர், "மூன்று வருஷங்கள் ஒழுங்காக நடந்தால் சுயராஜ்யத்தைக் கொடுத்து விடுவார்கள் என்று பத்திரிகைகளில் எழுதி யிருப்பதைப் பார்த்தேன்" என்று கூறினர். வேல்ஸ் இளவரசர் சீர்திருத்தம் கொடுப்பதாகக் கூறிய பிரசங்கத்தைப் பற்றி ஏதேனும் கேட்டிருப்பாரோ, என்னவோ?

அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியாரும், மிதவாதத் தலைவர்களும் தங்கள் தீர்மானங்களை இன்று செய்து முடித்து விடுவார்கள் என்று எண்ணுகிறேன். சகல தேச மக்களுக்கும் வழி காட்டும் சர்வேசுவரன் நமக்கு நல்வழியைக்காட்டி மனோ தைரியத்தையும் வைராக்கிய புத்தியையும் போதுமான பலத்தையும் கொடுத்து அருள் புரிவாராக! (தொடரும்

17—12—47



ஒரு சமயம் பண்டித மோதி நேருவிட மிருந்து கைப்பற்[illegible] துப்பாக்கியை அவர்புத்[illegible] பண்டித ஜவாஹர்லாலிடம் [illegible]க் கொடுத்தது ஐக்ய[illegible] சர்க்கார்.

18—12—47




என். ஜி. ஓ. ஸ்டிரைக்கினுல் ஏற்பட்ட காலிஸ்தானங்களுக்குப் புதிய ஆட்களை நியமிக்கச் சென்னை சர்க்கார் ஜரூராக வேலை செய்தது.


19—12—47



பர்மா சுதந்திர தின வைபவத்தில் கலந்து கொள்ள லார்ட் மௌண்ட் பேட்டன், பண்டித நேரு, ராஜேந்திர பிரசாத் முதலியவர்கள் ரங்கூனுக்குப் பறந்து போகலாம் என்று நம்பப் படுகிறது.

டிசம்பர் 16-ந் தேதி திருச்சி நிலயத்தில் மதுரை எஸ். சோமசுந்தரம் பாடினர். சாரீரத்தில் சுக பாவத்தை விட இனிமை யில்லாத சத்தம்தான் அதிகம் கேட்கிறது. இஷ்டப்பட்டபடி பிர்க்கா சங்கதிகளைப் பாடிய போதிலும் கச்சேரி என்னமோ சோபிக்க வில்லை. பக்க வாத்யம் வாசித்த கோபால கிருஷ்ணய்யரின் வாசிப்பும் கொஞ்சம் கூட அநுசரணை இல்லாமல் இருந்தது. பாடியவற்றுள் தோடி ராகப் பாட்டு சுமாராக இருந்தது.

புதனன்று டி. லக்ஷ்மி நாராயண சாஸ்திரியின் வீணைக் கச்சேரி சென்



டி. எஸ். கோபாலகிருஷ்ணன்

னையில் நடந்தது. சாஸ்திரியாரின் வாசிப்பில் சுஸ்வரமும் இன்ப நாதமும் த்வனிக்கிறது. ஆரபி வர்ணமும், நாட்டை ராகமும் ரஸமாய் விளங்கிற்று.

இந்த வாரம் நடபைரவி ராகத்திற்கு யோக காலம் போல் இருக்கிறது. அநேகம் பேர் நடபைரவிராகம் பாடினர்கள். சென்னையில் 18-ந் தேதி டொக்கா ஸ்ரீ ராமமூர்த்தி விஸ்தாரமாக அந்த ராகத்தைப் பாடி தானம், பல்லவி பாடினர். ஸ்ரீ ராமமூர்த்திக்கு எப்பொழுதுமே அபூர்வ ராகங்களின் மேல் மோகம் போல் தெரிகிறது.

அபூர்வ ராகம் பாடுவதைப் பற்றி ஆக்ஷேபணை யில்லை. ஹிந்துஸ்தானி பாணியை அநுசரிப்பதை விட்டு, கொஞ்சம் கர்நாடக சுத்தமாய்ப் பாடினல் விசேஷமாய் இருக்கும்.

நான் போன வாரம் எழுதியதைப் போல் நல்ல சங்கீதம் பாடுகிறவர்களெல்லாம் சந்தேகமில்லாமல் காலை வேளையில்தான் பாடுகிறார்கள். இந்த வாரம் டி. எஸ். கோபால கிருஷ்ணன் சென்னையில் பாடினர். 'ஶ்ரீபமு' என்ற முகாரி ராகக் கிர்த்தனையை நன்றாய்ப் போஷித்து உருக்கமாய்ப் பாடினர். சங்கராபரண ராகத்தில் அநேக பாவ பூர்வமான சங்கதிகளைக் கேட்க ...து. 'பிரஹ்மதம்பா' கிர்த்தனையை பாடினர்.

நேற்று ...ட்டிருந்தது.

சங்கீதம் கேட்டு அலுத்துப் போன ரஸிகர்களுக்கு வெள்ளியன்று நடந்த 'அன்னையின் தியாகம்' என்ற நாடகம் திருப்தியை அளித்திருக்கும். பி. ராமச்சந்திரன் எழுதிய மேற்படி நாடகத்தில் நடித்த எல்லாக் கதா பாத்திரங்களும் உணர்ச்சியோடு இயற்கையாகவே நடித்தார்கள். ராஜேஸ்வரியாகவும், காஞ்சனவாகவும் நடித்த கே. கல்பகம் ராஜகோபாலனும், ஜி. தௌசல்யாவும் எல்லோரையும் விட முதல் மார்க் வாங்கி விட்டார்கள். இயற்கையா நடிக்கிற நடிகர்களைக் கொண்டு இ... போன்ற நாடகங்களை நட... ரேடியோ அபிமானிகளுக்குப் திருப்தி அளிக்கும்.

டி. கே. பட்டம்மாள் பாட்டு ச...யன்று நடந்தது. பட்டம்மாள் பா...டென்ற உடனே ரேடியோ பெட்டி... முன் ஏகக் கூட்டம் சேர்ந்து விடுகிறது. ரஸிகர்களுக்கு ஏமாற்ற மில்லாம... எப்பொழுதும் ஒரே நிதானத்துடன் பாடுவது தான் அதற்குக் காரணம். அன்றைக்குப் பாடியவற்றுள் பைர... ராகமும் 'கொலுவையுன்னடே' என்... அய்யர்வாள் கிருதியும் ரஸிகர்கள் க...னத்தை விசேஷமாய்க் கவர்ந்தன. து...கடா கிர்த்தனங்கள்பாடும் இந்தக் கால... தில் 'கொலுவை யுன்னடே' போன்... பெரிய கிர்த்தனங்களை நன்றாய் நிர்வகி...த்துப் பாடும் பட்டம்மாளுக்கு ஒ... 'சபாஷ்' சொல்லத்தான் வேண்டும்.



கச்சேரியி... முடிவில் ரஸிக...கள் எதிர்பார்த்... "தாயின் மணி... கொடி" "சின்ன...ஞ்சிறு கிளியே" என்ற பார... யாரின் ... வழக்கம் சிறப்பா... மகிழ்... ...தட்...


பி. என். ராகவ ராவ் ...க் மாலை சென்னையில் பாடினு... கார்வாள் பாணியைப் பின்ப... கிறவர்களுள் இவரும் ஒருவ... தோன்றுகிறது. அன்று கே... ரஞ்சனி கிருதியும், கல்யா... மும், நிரவலும், கமகப...க ...ரம் பாடிய வழியும் பாடகரின் ஞா... சிறப்பை நன்கு வெளிப்படுத்தியது.

## சிறுவர் சித்திரம்



விலாசம் தெரியவில்லை.

* பரிசு பெற்ற குழந்தை



* கே. வி. சாந்தா

(வயது 8)

மயிலாப்பூர்.




ஆர். கிருஷ்ணமூர்த்தி

(வயது 9)

கள்ளக்குறிச்சி.

Printed by P. Arunachalam at Commercial Printing & Publishing House 46, Armenian Street, Madras


சுகமான வாழ்விற்கு இன்றியமையாதது

ஆகாரம் மனதிற்கும், நாவிற்கும் இனிமையளிக்கும். உணவு தயாரிக்க இன்றியமையாதது பெருங்காயம். ருசியும், மணமும் பெறச் செய்வது பெருங்காயத்தின் சிறந்த குணம்.

விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்ட மணமுள்ள எங்கள் T. T. பெருங்காயத்தையே உபயோகியுங்கள்.

ரஷீட் ஜம்ஷெட் சன்ஸ் & கோ.,

கும்பகோணம்

H. O. பம்பாய். பிராஞ்சுகள்: சென்னை, மதுரை.

சுதந்திர இந்தியாவில் இனி பொதுஜனத்தை ஏமாற்றி பொருள் பறிக்கும் அசடர்களுக் கிடமில்லை




எல்லோருக்கும் லாபம் கிடைக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறது

தனி ஏஜண்டாக யாருக்கும் கொடுக்க முடியாது

| | |
|---|---|
| 50 காலணு பொட்டலம் | 0-9-0 |
| ஷை பொட்டலம் ஒரு குரோஸ் (144) | 72-0-0 |

இரண்டு கேஸ் ஆர்டர் செய்பவர்களுக்கு ரயில் சார்ஜ் கிடையாது. 25% அட்வான்ஸுடன் ஆர்டர் செய்ய வேண்டும்.

மாணிக்க விலாஸ்

11, பீட் :: மதராஸ் 1

எங்கும் இதே பேச்சு

# புயலுக்குப் பின்?

(ஒரு கற்பனைச் சித்திரம்)

கதை, வசனம், பாடல்: "கர்மயோகி"

நாடகப் புரவலர், நாடகக் கலாமணி, வைரம் அருணாசலம் செட்டியாரவர்களின் பூரண உரிமை பெற்ற நாடகம்

ஸ்ரீ ராம பால கான விநோத சபையார்

சென்னை மவுண்ட் ரோட்

S. V. S. நியூ தியேட்டரில்

11-11-47 முதல் தினசரி நாடகம் நடைபெறுகிறது

தினசரி மாலை 6-15க்கும், வியாழன் மட்டும் இரவு 9-15க்கும்

திங்கள் தோறும் விடுமுறை

டிக்கட் விவரம்: ரூ. 3-8-0, 2-12-0, 1-10-0, 1-3-0, 0-10-0



கேசத்திற்கு இயற்கையான சத்தைக் கொடுத்து கூந்தலை அபரிமிதமாக வளர்ப்பதுடன் மூளைக்குக் குளிர்ச்சியும் தருகிறது.

கேசத்தின் ஆரோக்யத்திற் கென்றே தயார் செய்யப்பட்ட சிறந்த தைலம்.




# ஜாப்கோ அம்லா ஹேர் ஆயில்

**ஜெயபாரதம் கம்...**
சென்னை · பங்களூர் · எர்ணா...